DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1448 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 5, 2024

# தமிழ் மக்கள் 75 வருடங்களாக சிங்கள ஆட்சியாளர்களால் மாத்திரமல்ல தமிழ் தலைமைகளினாலும் ஏமாற்றப்படுவதும் வரலாறு

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க செயலாளர் ராஜ்குமார் கனடா உதயனுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவிப்பு

**(வவுனியாவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)**



"தமிழ் மக்கள் 75 வருடங்களாக ஏமாற்றப்படுவதே வரலாறாக உள்ளது. சிங்கள ஆட்சியாளர்களால் மாத்திரமல்ல தமிழ்-தலைமைத்துவங்களினாலும் ஏமாற்றப்படுவதும் வரலாறாக உள்ளது என்பது கசப்பான விடயமாகும். இவ்வாறான ஏமாற்று வேலைகளுக்கு பலியானவர்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோர்களும் உறவினர்களும் உள்ளடக்கப்படுகின்றார்கள். தமிழ் மக்கள் அனுபவித்த அந்த ஏமாற்றங்களையும் நாமும் தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்றோம்"" இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பின் செயலாளரான கோ. ராஜ்குமார் கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கத்தை வவுனியாவில் உள்ள அமைப்பின் தற்காலிக பொது ஜனத் தொடர்பு அலுவலகத்தில் சந்தித்தபோது தெரிவித்தார்.

(உள்ளே விபரமான செய்தி 19ம் பக்கத்தில்)

BIG Billyard Insurance Group Stouffville
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
5.0
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

# ஒன்றாரியோ ஆளுனர் அலுவலகத்தில் புத்தாண்டு தினத்தில் நடைபெற்ற புத்தாண்டை வரவேற்கும் வைபவம்

**Ontario's Lieutenant Governor's New Year's Levee took place on January 1st 2024 in the Lieutenant Governor's Suite at Queen's Park in Toronto.**
**Lieutenant Governor Edith Dumont was there to receive all the invited Guests and every one had a photo opportunity.**



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் ஆளுனர் அலுவலகத்தில் புத்தாண்டு தினமான ஜனவரி 1ம் திகதி நடைபெற்ற புத்தாண்டை வரவேற்கும் வைபவத்தில் "உதயன்" பிரதம ஆசிரியர் மற்றும் அலுவலக நிர்வாக உதவியாளர் பிரதீபன் ஆகியோர் அழைக்கப்பெற்ற விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

மாகாண ஆளுனர் **Edith Dumont** அவர்கள் அங்கு கலந்து கொண்ட அனைவரோடு மகிழ்ச்சியுடன் உரையாடி ஒவ்வொருவரோடும் கலந்துரையாடி அவரவர் பணிகள் பற்றி கேட்டறிந்தார். தொடர்ந்து அங்கு கலந்து கொண்ட அனைவரோடும் இணைந்து இசையை இரசித்தார்.

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX Community

Krishna Punniyam
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

எங்கள் வாசக அன்பர்கள், விளம்பரதாரர்கள், மற்றும் அனைவருக்கும் எமது புத்தாண்டு மற்றும் தமிழ் மரபுத் திங்கள் நல்வாழ்த்துக்கள்.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road , Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE



இனிய
தைப்பொங்கல்
மற்றும்
தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal
& Tamil Heritage Month
Raymond Cho
MPP - Scarborough North
Constituency Office
Unit B, 4559 Sheppard Ave E
Scarborough, ON M1S 1V3
(416) 297-5040
raymond.choco@pc.ola.org
www.raymondcho.ca




வோன் தமிழர் பண்பாட்டு அமைப்பு
தைப்பொங்கல் விழாவிற்கு உங்களை
அன்புடன் அழைக்கிறது
York Region
DISTRICT SCHOOL BOARD
தமிழ் மரபுத்திங்கள் விழா
தமிழ் மரபு கலை நிகழ்வுகள்,
அறிஞர்களின் உரைகள், அரசியல்,
ஆர்வலர்கள் மற்றும் நண்பர்களுடன்
இனிய விருந்தோம்பல் மாலை
இன்னிசை நிகழ்ச்சி
Light Music by
Mega Tuners
தை
20
2024
Saturday @
5.30 PM Doors Open
Venue:
MAPLE HIGH SCHOOL
50 Springside Rd, Maple, ON L6A 2W5
தைப்பொங்கல் விழா தொடர்புகளுக்கு : 437.433.8800
அன்பழகன் (கண்ணன்) : 416.893.9342
நகுலன் : 416.559.1260
www.vaughantamils.ca




இனிய
தைப்பொங்கல்
மற்றும்
தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal & Tamil Heritage Month
Salma Zahid
MP for Scarborough Centre
5-2155 Lawrence Avenue East
Scarborough, ON M1R 5G9
Tel: (416) 752-2358
Email: salma.zahid@parl.gc.ca
SalmaZahid15
@SalmaZahid15

## உதயன் கதிரோட்டம்

# "இமாலயப் பிரகடனம்" இலங்கைத் தமிழர் வரலாற்றில் இழைக்கப்பெற்ற மற்றுமொரு மன்னிக்க முடியாத துரோகம்!

உலகத் தமிழர் பேரவையும் சிறந்த இலங்கைக்கான பௌத்த சங்கமும் ஒன்றாக வெளியிட்ட இமாலயப் பிரகடனமானது வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு சில விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளது. கடந்த 75 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களை ஏமாற்றிய வண்ணம் தங்கள் பாராளுமன்றக் கதிரை-களை அலங்கரித்து அதனால் இலாமடைந்த தென்னிலங்கை அரசியல்வாதிகளும் "தமிழர் தலைமைகள்" என்று தங்களை அழைத்து கொண்டவர்களும் காலத்திற்கு காலம் தீர்வு காணும் விடயங்களில் தங்களுக்கு அக்கறையுள்ளது போல காட்டி. அதன் மூலம் காலத்தை நீட்டியும் வீணாக்கியும் தொடர்ந்த வண்ணம். அந்த காலப்பகுதியில் தங்கள் நலன்களைப் பேணும் முயற்சிகளில் கவனத்தை செலுத்தும் வகையில் காய்களை நகர்த்திக் கொண்டே இருப்பார்கள்.

இலங்கை அரசியலில் தமிழ்த் தேசிய அரசியலானது. கிழக்கிலும் வடக்கிலும் தளத்தைக் கொண்டதாக இயங்கிவந்தது. தூய தமிழ்த் தேசிய அரசியலும் அதனோடு தூர நின்று பயணித்த இடதுசாரி அரசியலும் வடக்கு கிழக்கு மக்களுக்கு பரிட்சியமானதாக நகர்ந்து கொண்டிருந்தது.
இதேவேளை. "கொழும்பு அரசியல்" என்றவொரு "சக்தி" தனது அரசியல் தளத்தை கொழும்புத் தலைநகரில் நிர்வகித்த வண்ணம் கிழக்கு மாகாணம் மற்றும் கண்டி போன்ற நகரங்கள் ஆகியவற்றில் வாழ்ந்து வந்த இஸ்லாமிய மக்களுக்கு தலைமை தாங்குகின்றவர்கள் போன்று அரசியல் அதிகாரத்தைத் தங்கள் பக்கம் தக்க வைத்துக் கொண்டு கொழும்பில் வாழ்ந்த வண்ணம் அரசியல் செய்து கொண்டிருந்தார்கள். இதன் காரணமாக அந்த "கொழும்புத் தலைமைகளுக்கு" பாராளுமன்றக் கதிரைகளும் அமைச்சர் பதவிகளும் தாராளமாகக் கிட்டியவண்ணம் இருந்தன.

இலங்கையின் இஸ்லாமிய மக்களின் அரசியல் வரலாற்றில் இந்த "கொழும்புத் தலைமை" கொழும்பு அரசியல் என்பதை முதலில் உடைக்கக் கிளம்பியவர்களில் முக்கியமானவர் முன்னாள் அமைச்சரும் கல்முனையை வசிப்பிடமாகக் கொண்டவருமான காலஞ் சென்ற எம்.எச்.எம். அஸ்ரப் ஆவார். தொடர்ந்து அவரோடு பல கிழக்கிலங்கை இஸ்லாமிய தலைவர்களும் புத்திஜீவிகளும் கைகோர்த்து நின்றதனால "கொழும்புத் தலைமைகளை" உடைத்தெறிந்து தாங்கள் தனித்துவமான இஸ்லாமிய மக்களுக்கான அரசியலை தொடர்வதற்கு அவர்களுக்கு வழி சமைத்துக் கொடுத்தது.
இதன் காரணமாக கொழும்பை தங்கள் வாசல்தலமாகவும் அரசியல் தலைமையகமாகவும் கொண்டிருந்த எம்.எச். எம் மொகமட் போன்றவர்கள் தங்கள் குடும்பத்தினர்களை அரசியல் பதவிகளில் அமர்த்த முடியாமற் போய்விட்டது.
இதே போன்ற ஒரு சந்தர்ப்பவாத அரசியல் இலங்கை தமிழர் அரசியல்ல் தற்போது காலூன்றத் தொடங்கியுள்ளதை நாம் அவதானிக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமை உறுதியாக இருந்த வரைக்கும் "வால்களைச் சுரட்டிக் கொண்டும் வாய்களை மூடிக் கொண்டும் இருந்தவர்கள் தற்போது "கொழும்புத் தமிழ் அரசியல் என்னும் அத்தியாயத்தை எழுதுவதற்கு தங்கள் கைகளில் பேனாக்களைத் தூக்கிய வண்ணம் நம் தாயக மண்ணுக்கு வந்து போகின்ற காட்சிகளை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறாக கடந்த 2009ம் ஆண்டிற்கு பின்னர் விடுதலைப் புலிகளின் முப்படைகள் கொண்ட சிறு அரசு செயலிழந்து போகவே தங்கள் கால்களை முன்வைக்கத் தொடங்கினார்கள் புலம் பெயர்ந்தவர்கள் சிலர்.அவர்களுக்கு தாங்களும் "கொழும்புத் தலைமைகளாக இருந்து வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றவர்களாக திகழ வேண்டும் என்ற முயற்சியில் இறங்கி கபடத் தனமான படிக்கட்டுக்களில் நகர்ந்து இறுதியில் "இமாலயப் பிரகடனம்" என்னும் தங்கள் நலன் சார்ந்த ஆயுதத்தை கைகளில் எடுத்துக் கொண்டுள்ளார்கள். இவ்வாறானவர்களோடு ஏற்கெனவே கொழும்புத் தலைமைகளாக தங்களை அடையாளமிட்டு கொண்ட ஓரிரு தமிழ் அரசியல் கரங்கள் அந்த புலம் பெயர் கரங்களோடு இணைந்து கொண்டதனால் எழுந்தது தான் இந்த "இமாலயப் பிரகடனம்" என்றே நாம் கருதுகின்றோம்.
எமது தாயகத்தின் தமிழ்த் தேசிய அரசியலின் தலைமைத்துவத்தை தாங்கள் தமது கைகளுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் இந்த "புதிய" முயற்சியில் கபடத் தனமான எண்ணங்களுடன் "களம்" இறங்கியுள்ளனர். வடக்கிலும் கிழக்கிலும் வாழும் ஆயிரக்கணக்கான மாவீரர்களின் குடும்பத்தினரோ அன்றி வேறு துறைகளில் அடையாளம் காணப்படுபவர்களோடு "இமாலயப் பிரகடனத்தின் ஊடாக எமது தலைமையை தங்கள் கைகளுக்குள் எடுத்துக் கொண்டவர்களே அடுத்த கட்டமாக வடக்கு கிழக்கு தலைமையையும் கொழும்பு அரசியலையும் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்வதற்கான ஒரு முன்னேற்பாடு என்றே நாம் கருதுகின்றோம்.
இவ்வாறான ஒரு தந்திரம் நிறைந்த பிரகடனத்தை தமிழர்களின் நலன் கருதி நம் கைகளில் ஏந்தி வைத்துள்ளோம் என்று கூறுகின்றவர்களும் எமது முன்னைய தலைவர்களைப் போன்றோ கால் நூற்றாண்டு அரை நூற்றாண்டு என்று "காலத்தை" கடந்துகின்றவர்களாகவே இருபார்கள் என்றும் நாம் கருத வேண்டியும் உள்ளது எனவே எம்கதும் வடக்கு கிழக்கு தமிழ்த் தேசிய இருப்பிற்கும் இந்த "இமால-யப் பிரகடனம்"பக்கபலமாக இருக்காது என்பதையும் இதனால் முன்னரைப் போன்றே கொழும்புத் தலைமைகளே வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களையும் இஸ்லாமிய மக்களையும் தென்னிலங்கை வாழ் கபடத்தனமான அரசியல் தலைவர்களுக்கு 'அடைவு" வைத்துவிடுவார்கள் என்பதையே நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அத்தோடு. உங்களைச் சுற்றியுள்ளவர்கள் யாராவது "இமாலயப் பிரகடனத்தை பற்றி உயர்த்தி பேசினால் அவர்கள் கூட ஏதோ வகையில் "வாங்கப் பட்டுள்ளார்கள்" என்பதே எமது முடிவாக இருக்க முடியும்.

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# கோண்டாவில் பகுதியில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவம்

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தங்கியுள்ள நிலையில் கோண்டாவில் பகுதியில் வாள் வெட்டு சம்பவம் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.
குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, கோண்டாவில் பகுதியில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றின் உற்சவம் இடம் பெற்றுக் கொண்டிருந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்கள் முச்சக்கர வண்டி ஒன்றை சேதப்படுத்தியதுடன் நபர் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தித் தப்பிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களாக திடீர் தேடுதல் சுற்றி வளைப்புகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில் வாள்வெட்டுச் சம்பவங்கள் சற்று ஓய்ந்திருந்தது.

எனினும் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வட மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வாள்வெட்டுச் சம்பவம் பதிவாகியுள்ளது.

# கில்மிஷாவினை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க



வடமாகாணத்திற்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதியில் ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஸரிகமப .பாடல் போட்டியில் வெற்றிவாகை சூடிய உதயசீலன் கில்மி'ாவையும் அவர்களது உறவுகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதில் அமைச்சர்களான கடற்றொழில் அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, ஊடகத்துறை அமைச்சர் பந்துலகுணவர்த்தன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

- பு.கஜிந்தன்

Commercial Cleaner Wanted
Hiring Commercial Cleaner
Area: Barrie Ont.
Full time 7am to 3pm
Monday to Friday
Industrial / office area cleaner
Call: 647-640-4050

For All your Renovation Needs!
- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno
Call - Siva
416-706-8160

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் மொழிபெயர்ப்பு இல்லாதலால் தொல்லியல் திணைக்கள விடையதானத்தை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் நீக்கிய அமைச்சர் டக்ளஸ்



தொல்லியல் திணைக்களம் தொடர்பான கலந்துரையாடல் தமிழ் மொழிபெயர்ப்பு இல்லாத காரணத்தினால் நிகழ்ச்சி நிரலில் இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணித்தமைக்கு இணங்க அபிவிருத்தி கலந்துரையாடலில் இருந்து நீக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவதாவது, கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இந்த ஆண்டுக்கான இறுதி அபிவிருத்திக் குழு கூட்டம் இடம்பெற்றது.

கூட்ட நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் போது தொல்லியல் திணைக்களம் தொடர்பான விடயதானம் குறித்த கலந்துரையாடலில் சேர்க்கப்பட்டிருந்தது.

ஆனால் தொல்லியல் திணைக்களத்தின் விடைய தானங்கள் தமிழ் மொழிபெயர்ப்பு இல்லாமை தொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் தமிழ் மொழிபெயர்ப்பு இல்லாத விடயங்கள் அனைத்தையும் நீக்குமாறு அபிவிருத்தி குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கிய நிலையில் குறித்த விடையதானம் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கப்பட்டது.




# ஒற்றுமையை விரும்புபவர் மாவை: சிறிதரன் சுமந்திரன் விரும்பாதவர்கள்

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் விந்தன்

தமிழரசு கட்சியின் தலைமை வேட்பாளர்களான சுமந்திரன் மற்றும் சிறிதரன் இருவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை விரும்பாதவர்கள் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினரும் ரெலோவின் நிதிச் செயலாளருமான விந்தன் கனகரட்னம் தெரிவித்தார்.

02-01-2024 செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தமிழரசு கட்சி உடைய தலைவராக யார் வந்தால் ஒற்றுமையுடன் செயல்படலாம் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரசு கட்சியின் தலைவர் யார் என்பது அவர்களுடைய கட்சி தீர்மானித்துக் கொள்ளட்டும் ஆனால் இவர்கள் இருவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமைக்கு எதிராகச் செயற்பட்டவர்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தொடர்பில் நான் அதிகம் கூற வேண்டிய தேவையில்லை. பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் 2018 பிரதேச சபை தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவிப்பின் போது மூன்று பிரதேச சபைகளில் சக கட்சிகளுக்கு ஆசனம் வழங்க மறுத்து விட்டார்.

தான்தான் கிளிநொச்சி நாட்டாமை என நினைத்து தனது ஆதரவாளர்களையே வேட்பாளராக்க வேண்டும் சகா தமிழ் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது என நினைப்பவர் எவ்வாறு ஒற்றுமையை விரும்புவார்.

தமிழரசு கட்சியின் உடைய தற்போதைய தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜா உண்மையிலே தமிழ் தேசியக் கூட்டமைப்பாக ஒற்றுமையாக இருக்க வேண்டும் என விரும்புபவர்.

அவர் தமிழரசு கட்சியின் தலைவராக இருக்கும் நிலையில் எத்தனையோ விடயங்களில் அவருக்கு எதிராக அவருக்குத் தெரியாமல் பல செயல்பாடுகளை இந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் செய்தவர்கள்.

நாங்கள் தமிழ் மக்களுக்காக அரசியல் செய்கிறவர்கள் மக்களின் விருப்பங்களுக்கு மாறாகவும் எமது கொள்கைகளுக்கு புறம்பாகவும் செயல்படக்கூடாது.

உதாரணமாக கூறின் தமிழ் மக்களின் தீர்வாக அமையாத 13வது திருத்தத்தை கூட சிங்கள தலைமைகள் வழங்கக் கூடாது என்பதில் ஒற்றுமையாக நிற்கிறார்கள். தமிழ் மக்களுக்காக அரசியல் செய்கிறோம் என கூறும் சக தமிழ் கட்சிகள் குறுகிய அரசியல் நோக்கத்திற்காக செயற்படும் நிலையில் இது எம்மை தெற்கு கையாள்வதற்கு ஏற்றதாக அமைகிறது.

ஆகவே தமிழரசு கட்சியின் உடைய தலைவர் யார் என்பதற்கு அப்பால் சகா தமிழ் கட்சிகளுடன் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பாக தமிழ் மக்களின் குரலாக ஒளிப்பவர்கள் தான் தலைமை பதவியில் இருக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்து என அவர் மேலும் தெரிவித்தார்.

# கேவலமான ஜனாதிபதி ஆட்சி நடைபெறும் இலங்கைத் தேசம்.



### கலக்கத்துடன் வருகை தரும் ஜனாதிபதியின் ரணிலின் யாழ். விஜயம்: தொடர்பில் 08 பேருக்கு எதிராக தடை உத்தரவு கோரியுள்ள பொலிஸார்.

### தமிழரசுக் கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிடும் சுமந்திரன். ஸ்ரீதரன் சிவஞானம் ஆகியோரின் பெயர்கள் இந்த பட்டியலில் இல்லை.

(03-01-2024)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் அதற்கு எதிராக போராட்டங்கள் முன் னெடுக்கப்படலாம் என கருதி 8 பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கானது யாழ்ப்பாணம் பொலிஸாரால் 02-01-2024 செவ்வாய் அன்று குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து பல்வேறு கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்காக 04ம் திகதி முதல் 07ம் திகதி வரை விஜயம் செய்யவுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கான போராட்டத்தை தடுக்கும் பொருட்டு தடை கட்டளை கோரி பொலிஸார் நீதிமன்றில் விண்ணப்பித்துள்ளனர்.

இது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாட்டினை நேரடியாகவோ, சட்டத்தரணி ஊடாகவோ யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில், புதன்கிழமை (03) மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு கட்டளையிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் என 8 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிடும் சுமந்திரன். ஸ்ரீதரன் சிவஞானம் ஆகியோரின் பெயர்கள் இந்த பட்டியலில் இல்லை. இவர்கள் இருவரும் ஜனாதிபதியை வரவேற்கவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் யாழ்ப்பாண ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார.




# மன்னாரில் நீராலும் உணவாலும் நோய் தொற்று பரவ கூடிய அபாயம்

## சுகாதார திணைக்களம் எச்சரிக்கை

- மன்னார் நிருபர் (03.01.2024)

மன்னாரில் திண்ம கழிவகற்றல் பிரச்சினைக்கு விரைவில் ஒரு நிரந்தர தீர்வு எட்டப்படாது விட்டால் மன்னார் மாவட்டத்தில் டெங்கு பரவல் அதிகரிக்கலாம் என்பதுடன் நீர் மற்றும் உணவுகள் ஊடாக பரவும் நோய் தொற்றும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு புதன்கிழமை (03) கருத்து தெரிவிக்கையில் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் நகர சபையின் திண்மக் கழிவகற்றல் செயற்பாடு தற்போது ஒழுங்கான முறையில் இடம் பெறாமையினால் மன்னார் நகர் பகுதி பாரிய தொரு சுகாதார சீர்கேட்டு நிலமைக்கு தள்ளப் பட்டிருக்கிறது.

மக்கள் திண்மக் கழிவகற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளும் போது சுகாதார துறையினரின் அறிவுறுத்தல்களை பின் பற்றுமாறு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதே நேரம் மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபை எல்லைக்குள் காணப்படும் வைத்தியசாலைகளிலும் திண்ம கழிவகற்றல் செயன் முறை முற்றாக முடங்கியுள்ளது.

நகர் புறங்களிலும், பொது இடங்களிலும் அதே நேரம் வைத்தியசாலை சூழலிலும் மருத்துவ கழிவுகள் அல்லாத ஏனைய கழிவுகள் சூழ்ந்து காணப்படுகின்றது.

தற்போது மழைக் காலம் என்பதனால் நோய் கிருமிகளின் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது.

குறிப்பாக டெங்கு நுளம்புகளின் பரவல் அதிகமாக காணப்படுகின்றது.

அதே நேரம் வயிற்றோட்டம்,வாந்திபேதி போன்ற நோய்களும் மழைக் காலத்தில் அதிகமாக பரவுவதற்கான வாய்ப்பு காணப்படும் என்பதுடன் மன்னார் நகர் பகுதியில் தேங்கியிருக்கும் இந்த திண்மக் கழிவுகள் இவ்வாறான கிருமி தொற்று பரவலுக்கு ஏதுவாக அமைவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் மன்னார் பொது வைத்தியசாலை சூழலிலும் கழிவுகள் மற்றும் புற்கள் உட்பட பல இடங்களில் நீர் தேங்கியுள்ளதாகவும் ஆனாலும் மன்னார் வைத்தியசாலை சுத்தப்படுத்தலுக்கு போதிய ஆளனியினர் இன்மையால் இந்த பிரச்சினை நீடித்து வருவதாகவும் எனவே மன்னார் மக்களின் ஆரோக்கியத்தில் அக்கரை உள்ள பொது மக்கள்,நலன் விரும்பிகள் வைத்தியசாலை சுழலை சுத்தப்படுத்த உதவிகளை வழங்க முன் வருமாறும் குழுக்களாகவும், தனி நபர்களாகவும் சிரமதான பணிகளை மேற்கொண்டு தங்களுடைய உதவியை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

சுகாதார பணி உதவியாளர்கள் 85 பேர் மன்னார் வைத்தியசாலையில் பற்றாக்குறையாக காணப்படுகின்ற நிலையில் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள 10 நபர்களே குறித்த சுத்தப்படுத்தல் பணிகளை மன்னார் வைத்தியசாலை சூழலில் மேற்கொண்டு வருகின்றதாக அவர் மேலும் தெரிந்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வரிக்கு பதிவு செய்வது அவசியம், ஆனால் தண்டம் அறவிடுவது சட்டவிரோதம் – ரெலோ ஊடகப் பேச்சாளர் சுரேன் தெரிவிப்பு



18 வயசுக்கு மேற்பட்ட வற் வரிக்கு விண்ணப்பம் செய்யாதவர்களுக்கு தண்டப்பணம் அறவிட முடியாது என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இம்மாதம் ஜனவரி மாதம் முதல் 18 வயசுக்கு மேற்பட்டவர்கள் வரி செலுத்துவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக் களத்தில் தமது பெயர்களைக் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என அறிவிப்பு வெளியாகி இருக்கிறது.

இலங்கையில் 18 வயசுக்கு மேற்பட்டவர்கள் வரி செலுத்துவதற்காக பதிவு செய்யப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடையம் ஆனால் பதிவு செய்யாவிட்டால் தண்ட பணம் அறவிடப்படும் என்பது சட்டவிரோதம்.

ஏனெனில் இலங்கையில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட மாத வருமானத்தைப் பெறுபவர்கள் கட்டாயம் வரி செலுத்த வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் 18 வயசுக்கு மேற்பட்ட எல்லோரும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுபவர்களாக கருத முடியாது.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்கள் வரி செலுத்த முடியாது அவர்களின் வருமானம் அதிகரிக்கும் போது வரி செலுத்த முடியும் பதிவு செய்யவில்லை என தண்டம் அறவிட முடியாது.

அதுமட்டுமல்லாது 18 வயசுக்கு மேற்பட்டவர்கள் வருமான வரிக்காக பதிவு செய்யாவிட்டால் 50ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்படும் என அறிவித்த அரசாங்கம் இவ்வளவு காலமும் வரி வருமானம் செலுத்தாதவர்களுக்கு என்ன தண்டம் என அறிவிக்கவில்லை.

ஆகவே இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருமான வரிக்காக பதிவு செய்வது கட்டாயமாக்குவது நல்ல விடயம் ஆனால் பதிவு செய்யாவிட்டால் 50 ஆயிரம் ரூபாய் தண்டம் என கூறுவது சட்ட விரோதம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தரின் அநாகரிகமான செயல்!



03-01-2024 அன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சிறி என்று அழைக்கப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் பார்வையாளர்களுடன் அநாகரிகமான முறையில் நடந்துள்ளதுடன் ஒருவரை தாக்கவும் முயன்றுள்ளார். இச்சம்பவம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண் தனது தாயாரினை கண் சத்திர சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்திருந்தார். அவர் வீட்டுக்கு வந்து உணவு எடுத்துக் கொண்டு சென்று தாயாருக்கு வழங்கியுள்ளார்.

இதன்போது அங்கு வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் அந்த பெண்ணுடன் அநாகரிகமான முறையில் நடந்து நாகரீகமற்ற வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டார். இதன்போது குறித்த பெண், தான் தாயாரை விடுதியில் நின்று கவனித்து வருவதாகவும் சாப்பாடு கொடுக்க வந்ததாகவும் தெரிவித்தார்.

அந்த பெண் கூறியதை செவிமடுக்காத குறித்த பாதுகாப்பு உத்தியோகத்தர் அவரை வெளியே விரட்டியடித்தார். இவ்வாறு செய்துவிட்டு அருகில் இருந்த விடுதிக்கு சென்று வேறொரு ஆணொருவருடன் முரண்பட்டு அவரை தாக்குவதற்கு முயற்சித்துள்ளார். இதன்போது அவ்விடத்திற்கு வந்த வைத்தியர் அவரை தடுத்துள்ளார்.



குறித்த பாதுகாப்பு உத்தியோகத்தர் இதற்கு முன்னரும் பல தடவைகள் நோயாளிகளுடனும் பார்வையாளர்களுடனும் அநாகரீகமான முறையில் நடந்ததால் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர் என்றும் இவர் தொடர்ந்தும் இவ்வாறே செயற்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் இவர் வைத்தியர் ஒருவரது உறவினர் என்பதால் இவருடன் ஏனையோர் பேசுவதற்கு பயப்படுவதாக கூறப்படுகிறது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் அட்டகாசம் தலைவிரித்து ஆடுகின்றது. இதற்கு முன்னரும் பார்வையாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவங்களும் பாதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் அநாகரிகமான செயற்பாடுகளால் மக்களும் நோயாளிகளும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு செல்வதற்கு தயங்குகின்றனர்.

# மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் திருட்டு!

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் சிசிடிவி கமெரா, 17 ஆயிரம் ரூபா காசு மற்றும் கணினி என்பன களவாடப்பட்டுள்ளன.

பாடசாலைக்கு சென்ற நிர்வாகத்தினர் பாடசாலை உடைக்கப்பட்டு குறித்த பொருட்கள் மற்றும் காசு என்பன களவாடப்பட்டதை அவதானித்தனர்.

இச்சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடமராட்சி கிழக்கில் இரண்டு படகுகள், பல இலட்சம் பெறுமதியான வலைகள் விசமிகளால் தீயிட்டு எரிப்பு!







யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கேவில் கடற்றொழிலாளர்கள் சங்கத்திற்கு உட்பட்ட இரண்டு மீனவர்களுக்கு சொந்தமான இரண்டு படகுகள், மற்றும் ரூபா 14 இலட்சம் பெறுமதியான வலைகள் என்பவற்றை விசமிகள் தீயிட்டு எரித்துள்ளனர்.

இச் சம்பவம் நள்ளிரவு கேவில் பாலையடி மேற்கு களப்பில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற கேவில் கடற்றொழிலாளர் கூட்டத்தில் இறால்களின் இனப்பெருக்கத்திற்காகவும், அதனை இறாலின் பருமன் வளர்சியை அதிகரிப்பதற்க்காகவும் இறால் கூடு கட்டுவதை தற்காலிகமாக தடை செய்திருந்தது.

இதை மீறி தொழிலில் ஈடுபட்ட பலரின் உபகரணங்கள் கைப்பற்றப்பட்ட போதும் விசமி ஒருவர் இரண்டு மீனவர்களுக்கு சொந்தமான மீன்பிடி உபகரணங்களை தீயிட்டு எரித்துள்ளதாக கேவில் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதில் க.மதிவாணன், க.சிவம், ஆகியோர்களது இலட்சக்கணக்கான மீன்பிடி உபகரணங்களே இவ்வாறு நாசமாக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிசாரிடம் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்டத்தின் இவ் வருடத்திற்கான இறுதி ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் – பல்வேறு விடையங்கள் குறித்து ஆராய்வு



- மன்னார் நிருபர் (29-12-2023)

மன்னார் மாவட்டத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான இறுதி ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் வெள்ளிக்கிழமை (28) மாலை 2.30 மணியளவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோ நோகராதலிங்கம், கே.திலீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். எனினும் இணைத் தலைவர்களில் ஒருவரான வடமாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

குறித்த கூட்டத்தில் பல்வேறு விடையங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு திட்டங்கள் சில சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தி கோபுரம் அமைத்து வருகின்றமை மற்றும் சட்ட விரோதமாக காணிகள் அபகரிப்பு, சட்ட விரோத மரம் வெட்டபடுகின்றமை குறித்தும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.



மேலும் நானாட்டான் பிரதேச கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரவை தொடர்பாக ஆராயப்பட்டது.

நானாட்டான் புல்லறுத்தான் கண்டல் பிரதேசத்தில் ஒதுக்கப்பட்ட காணியில் பயிர்ச்செய்கை செய்து வருபவர்களை உடனடியாக வெளியேற்றி அக்காணிகளை மேய்ச்சல் தரவைக்கு கையளிக்க உரிய அதிகாரிகளுக்கு வடமாகாண ஆளுநர் ஏற்கனவே பணித்திருந்தார்.

எனினும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போது குறித்த காணி சரணாலயமாக பிரகடனப் படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த பிரதேசம் தொடர்பாக சகல ஆவணங்களும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வனவள திணைக்களத் திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.





மேலும் காணி இல்லாதவர்களுக்கு வன வளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் களிடம் இருந்து காணிகளை விடுவித்து பகிர்ந்தளித்தல் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன் போது விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பான விபரங்கள் தேசிய ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் வெளியானவுடன் ஏனைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நஸ்ட ஈடு குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் திணைக்கள தலைவர்கள், அரச சார்பற்ற அமைப்புகள், இராணுவம், பொலிஸ், கடற்படை உயரதிகாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மடுக்கரை கிராமத்தில் இடம் பெறும் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு முருங்கன் பொலிஸார் துணை போவதாக மக்கள் விசனம்



(30-12-2023)

மன்னார் - முருங்கன் பொலிஸ் பிரிவில் உள்ள மடுக்கரை கிராமத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோத மண் அகழ்வு மற்றும் சட்டவிரோத மது உற்பத்தி இடம் பெற்று வருகின்ற போதும் முருங்கன் பொலிஸார் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு துணை போவதாக அக்கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மடுக்கரை கிராமத்தில் சில தொடர்ச்சியாக சட்டவிரோதமாக வடி சாராயம் (கசிப்பு) உற்பத்தி இடம் பெற்று வருகிறது. இதனால் மடுக்கரை கிராமத்தில் தொடர்ச்சியாக குடும்ப வன்முறைகள் இடம்பெற்று வருகின்றது.

மடுக்கரை கிராமத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி இடம் பெற்று வருகின்றமை குறித்து முருங்கன் பொலிஸாரிடம் பல தடவைகள் மக்களினால் முறைப்பாடு செய்யப்படுகின்ற நிலையில் முருங்கன் பொலிஸார் வருகை தந்து சட்டவிரோத மதுபானங்கள் மற்றும் பொருட்களை மீட்டுச் செல்கின்றனர்.

எனினும் சட்ட விரோத மது உற்பத்தியில் ஈடுபடுகிறவர்கள் தொடர்பாக முழு விபரங்களும் வழங்கப்படுகின்ற போதும் அவர்களை கைது செய்யாது விட்டுச் செல்கின்றனர்.

மேலும் மடுக்கரை கிராமத்திற்கு வருகின்ற பொலிஸார் சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபடுகின்றவர்களுடன் நற்புரவை பேணி வருவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மது உற்பத்தியால் குறித்த கிராமத்தில் பல குடும்பங்களில் தொடர்ச்சியாக குடும்ப வன்முறைகள் இடம்பெற்று வருகின்ற தாகவும், குறிப்பாக குடும்பங்களில் கணவன் மனைவிக்கு இடையில் இடையில் பிரச்சனை ஏற்படுகின்றமையினால் சில மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மடுக்கரை கிராமத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெற்று வருகின்ற போதும் பொலிஸார் வருகை தந்து சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, தமக்கு வேண்டிய சட்டவிரோத மணல் அகழ்வு செய்பவர்களுக்கு ஆதரவாக செயல்படுவதாகவும், முருங்கன் பொலிஸாரின் குறித்த நடவடிக்கை குறித்து பிரதி பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வர உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.



# கருத்துச் சுதந்திரத்திற்கு தடை ஏற்படுத்தும் வட மாகாண ஆளுநரின் செயலாளர் – ஊடகவியலாளரிடம் வாக்குமூலம் பெற்ற மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு

(30-12-2023)

ஊடகவியலாளர் வர்ணன் தனது முகநூலில் பதிவிட்ட கிழக்கு ஆளுநர் 24 மணித்தியால பொது மக்கள் சேவை வடக்கில் இடம்பெறுவதில்லை. முகநூல் பதிவை அடிப்படையாக வைத்து வட மாகாண ஆளுநரின் செயலாளர் நந்தகோபன் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மாவட்ட குற்ற தடுப்பு பிரிவு சனிக்கிழமை (29) குறித்த ஊடகவியலாளரிடம் வாக்குமூலத்தை பதிவு செய்தனர்.

வாக்கமூலம் வழங்கிய பின்னர் கருத்து தெரிவித்த ஊடகவியலாளர் பொலிசாரால் வழங்கிய அழைப்புக் கடிதத்தில் முறைப்பாடு என்ன என்பதும் முறைபாட்டாளர் யார் என்பது தொடர்பிலும் தெளிவுபடுத்தப்படவில்லை.


வாக்குமூலம் வழங்குவற்கு முன்னர் ஆளுநரின் செயலாளரின் கையொப்பத்துடன் வழங்கப்பட்ட கடிதப் பிரதியை பொலிசார் எனக்கு காண்பித்தனர்.

எனது முகநூலில் பதிவிட்ட கிழக்கு மற்றும் வடக்கு ஆளுநரின் செயற்பாடுகளை ஒப்பிட்டு எழுதிய பதிவை ஆளுநரின் செயலாளர் வடமாகாண பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாட்டுக்காக வழங்கியிருந்தார்.

அதன் அடிப்படையில் என்னிடம் வாக்குமூலத்தை கேட்ட நிலையில் கருத்தை சுதந்திரம் அடிப்படை உரிமை ஒரு ஊடகவியளார் என்ற நீதியில் வடக்கு ஆளுநரினால் மக்களுக்கு கிடைக்க வேண்டிய சேவை கிழக்கு ஆளுநரை ஒப்பிடும் அளவில் போதாது என்ற விடயத்தை கூறினேன்.

எனது கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை கட்டுப்படுத்தம் நோக்கிலும் ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்த நோக்கிலும் ஆளுநரின் செயலாளர் செயற்பட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பருத்தித்துறை பகுதியில் அமைந்துள்ள களஞ்சியசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்





பருத்தித்துறை, முனைப்பகுதியில் அமைந்துள்ள கடற்றொழில் உபகரண களஞ்சியசாலை ஒன்றிலேயே அதிகாலை இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் உடப்புசல்லாவ பிள்ளையார் லோமன் தோட்டத்தைச் சேர்ந்த வேலாயுதம் புவனேஸ்வரம் என்ற 46 வயதானவரும், அவரது சகோதரருமான வேலாயுதம் ரவி என்கிற 38 வயதானவருமே விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தீவிபத்துக்கான காரணம் இதுவரையில் தெரியவில்லை சம்பவம் நடந்த இடத்திற்கு பருத்தித்துறை நீதவான் வருகைதந்து சம்பவ இடத்தை பார்வையிடுகின்றார். இதேவேளை தடயவியல் பொலிஸாரும் தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னுதாரணமாக செயற்பட வேண்டும் - கடற்றொழில் கிராமிய அமைப்பின் தலைவர் நற்குணம் வேண்டுகோள்

**பு. கஜிந்தன்**




பாராளுமன்ற உறுப்பினர்கள், சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கலந்துரையாடல்களில் முன்னுதாரணமாக செயல்பட வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட கிராமிய தொழிலாளர் கிராமிய அமைப்புகளின் தலைவர் நற்குணம் வேண்டுகோள் விடுத்தார்.

வெள்ளிக்கிழமை (28) யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வியாழக்கிழமை (27) யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி வரும் இணைப்பு குழு கலந்துரையாடலில் எமது மீனவர் எதிர்நோக்கும் பிரச்சனை தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்தேன்.

அச் சமயம் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனுடன் ஏற்பட்ட கருத்து மோதலால் எமது மீனவ சங்கப் பிரதிநிதிகளை காடையார்கள் என பேசியமையை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதிகளை இவ்வாறு பேசுவது சபை நாகரிகம் அல்ல. பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதை ஊடகங்கள் ஊடாக பார்க்கிறோம்.

மிளகாய் தூளுடன், வருகிறார்கள் தண்ணீர் போத்தலுடன் வருகிறார்கள் சமூகத்துக்கு ஒவ்வாத வார்த்தை பிரயோகங்களால் சக பாராளுமன்ற உறுப்பினர்களை பேசுகின்றார்கள் இவை அனைத்தையும் ஊடகங்கள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

பாராளுமன்றம் போல் மாவட்ட மட்டங்களிடம் வரும் கலந்துரையாடல்களில் பாராளுமன்ற உறுப்பினர் ஒரு சமூகத்தை பார்த்து இழிவான வார்த்தை பிரயோகத்தை பிரயோகிப்பதை இனி வரும் காலங்களிலாவது நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயரை சந்தித்த கில்மிஷா!

இந்தியா Zee தமிழ் தொலைக்காட்சியின் ஸரிகமப பாடல் போட்டியில் யாழ்ப்பாணத்திலிருந்து பங்குபற்றி சாதனை படைத்துள்ள செல்வி. கில்மிஸா உதயசீலன் 29-12-2023 யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களை சந்தித்தார்.

ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் ஆயர் அவர்கள் தனது வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் ஆசிரையும் வழங்கினர். இந்நிகழ்வில் செல்வி. கில்மிஸா அவரின் குடும்பத்தினரும் இணைந்துகொண்டனர்.




# யாழ்ப்பாண விதை உருளைக்கிழங்கில் கமிஷன் விவகாரத்தில் நடவடிக்கை எடுப்பேன் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணத்தில் பழுதடைந்த விதை உருளைக்கிழங்கு விவகாரத்தில் கமிஷன் நடந்தமைக்கான சாத்திய கூறுகள் அதிகம் தென்படுவதாக யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் விவசாய நவீன மாக்கல் செயற் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்காக சுமார் 21 மெட்ரிக் தொன் விதை உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டது.

ஆனால் குறித்த விதை உருளைக்கிழங்குகள் ஒருவகை பக்ரீரியா தாக்கத்திற்கு உள்ளாகிய நிலையில் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டதில் தரகு பணம் கைமாறப்பட்டமை தொடர்பில் சந்தேகத்திற்கு இடமான பல விடயங்கள் இடம் பெற்றுள்ளமையை அறிகிறேன்.

குறித்த விடயம் தொடர்பில் விவசாய அமைச்சரிடம் அறிக்கை கேட்டுள்ள நிலையில் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள்.

அதுமட்டுமல்லாது குறித்த விதை உருளைக்கிழங்கை இறக்குமதி செய்தவர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# கைதடி அரச சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டுவரும் குழந்தைகளுக்கு அவசிய பொருட்களை அன்பளிப்புச் செய்த "ஸரிகமப" இசைப்போட்டியின் வெற்றியாளர் கில்மிஷா

இலங்கை செய்திகள் Sri Lanka News

புு. கஜிந்தன்



இந்தியாவின் ZEE தமிழ் ஸரிகமப போட்டியின் வெற்றியாளர் பட்டத்தைச் சூடிய கில்மிஷா உதயசீலன் அவர்களை வரவேற்கும் நிகழ்வு அண்மையில் அரியாலை ஸ்ரீகலைமகள் மக்களால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டது.

இவ் வரவேற்பு நிகழ்வுகளில் கில்மிஷா உதயசீலன் அவர்களது அபிமானிகளான பல அனுசரணையாளர்கள் தமது விருப்பில் பல நிகழ்வுகளை நடத்தி ஒத்துழைத்தனர். இதனால் செலவுகள் மீதமாகியதால் மிகுதிப் பணத்தை கில்மிஷா உதயசீலன் அவர்களிடம் ஏற்பாட்டுக்குழுவினர் கையளித்துள்ளனர்.

இம் மிகுதிப் பணத்தில் கைதடி அரச சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டுவரும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வேண்டிய அவசிய பொருட்களை கில்மிஷா உதயசீலன் அவர்கள் அன்பளிப்புச் செய்ய விரும்பி அவற்றை செவ்வாய்க்கிழமை (02.01.2024) தமது கரங்களால் வழங்கிவைத்துள்ளார்.

கில்மிஷா உதயசீலன் அவர்களது இவ் முன் மாதிரியான செயலுக்கு குறித்த அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்ல பொறுப்பதிகாரி நன்றி தெரிவித்துப் பாராட்டியுள்ளார்.

# யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நுளம்பு பரம்பலை அதிகரிப் பதற்கான சுற்றுச்சூழலை உருவாக்கிய 35 பேருக்கு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்!



2024 ஆம் ஆண்டு கடந்த ஜனவரி 02 ஆந் திகதி 12 பேருக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 78 பேருக்கு எச்சரிக்கைக் கடிதம் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. ஜனவரி 03 ஆந் திகதி 23 பேருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 189 பேருக்கு எச்சரிக்கைக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலாநிதி. ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமணை அலுவலகத்தில் 04-01-2024 அன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் தற்போது மிகத் தீவ-ிரமாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 70 முதல் 100 வரை புதிய நோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர்.

டிசெம்பர் மாதத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே அதிகளவு பரம்பல் காணப்பட்டது. தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி, நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய 13 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

கடந்த வருடத்தில் (2023) யாழ்ப்பாண மாவட்டத்தில் 3986 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதுடன், 06 இறப்புக்களும் பதிவுசெய்யப்பட்டன. இந்த வருடத்தின் முதல் 03 நாட்களிலும் புதிய நோயாளர்கள் 282 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுகாதார திணைக்களம், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் பொலிசார் மற்றும் முப்படையினருடன் இணைந்து வீடுவீடாகச் சென்று டெங்கு கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் பல்கலைக்கழக வளாகத்திலும் அதனைச் சூழவுள்ள வீடுகளிலும் பாரிய சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

க.பொ.த.உயர்தரப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளில் பூச்சியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சுத்திகரிப்புப் பணிகள் இடம்பெற்று புகையூட்டல் நடவடிக்கைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் பரம்பலை முன்கூட்டியே அடையாளம் காணும் பூச்சியியல் ஆய்வுகளும் பல்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் புகையூட்டல் நடவடிக்கைகள் டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்படும் வைத்தியசாலைகளில் வாராந்தம் மேற்கொள்ளப்படுவதுடன், நோயாளர்கள் அதிகம் இனங்காணப்படும் இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி மன்றங்கள் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் கொள்கலன்களைச் சேகரிக்கும் விசேட வேலைத்திட்டத்தை தற்போது முன்னெடுத்து வருகின்றன. பொது மக்கள் உங்கள் வீடுகளிலும் வேலைத்தலங்களிலும் பொது இடங்களிலும் உள்ள கொள்கலன்களைச் சேகரித்து உள்ளூராட்சி மன்ற கழிவகற்றும் வாகனங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு முன்னறிவித்தல் வழங்கியும் ஒத்துழைப்பு வழங்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஜனவரி 02 ஆந் திகதி 12 பேருக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 78 பேருக்கு எச்சரிக்கைக் கடிதம் (நோட்டீஸ்) வழங்கப்பட்டுள்ளது. ஜனவரி 03 ஆந் திகதி 23 பேருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 189 பேருக்கு எச்சரிக்கைக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

எச்சரிக்கைக் கடிதம் வழங்கப்பட்டவர்கள் குறித்த காலப்பகுதிக்குள் தமது வளாகத்தை சீர் செய்யாதுவிடின் அவர்களுக்கெதிராகவும் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும். டெங்கு நோயிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்கவும் இறப்புக்களைத் தவிர்க்கவும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்க சுக-ாதார திணைக்களம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது என்பதனை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

இக்காலப்பகுதியில் காய்ச்சல் ஏற்பட்டால் அது டெங்கு நோயாகவும் இருக்கலாம். எனவே தாமதிக்காது உடனடியாக தகுந்த மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள். கடந்த காலங்களில் மிகத்தாமதமாக வைத்திய ஆலோசனைகளை நாடிய வேளைகளில் இறப்புக்கள் ஏற்பட்டதை அவதானித்திருந்தோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயின் தீவிர பரம்பலைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணைவோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு வினயமாகக் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

# வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் கரையொதுங்கியுள்ள மர்ம பொருள்!

வடமராட்சி கிழக்கு உடுத்துறை ஒன்பதாம் வட்டாரம் அரசடி முருகன் கோவிலடியிலையே மர்ம பொருள் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

கரையொதுங்கிய குறித்த பொருளை பொதுமக்கள் அதிகளவானோர் பார்வையிட்டு வருவதுடன் பொலிசாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொருளில் யுளயை 2 என பெயரிடப்பட்டுள்ளதாகவும் கப்பலில் இருந்து தவறி விழுந்து கரையொதுங்கியிருக்கலாமென சந்தேகம் வெளியிடப்படுகின்றது.

அண்மைய நாட்களாக உடுத்துறை வேம்படி, நாகர்கோவில், உடுத்துறை என பல்வேறு விதமான மர்ம பொருட்கள் கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது.



# வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்திரவதையால் இளைஞன் அலெக்ஸ் மரணம் – நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு உயிரிழந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் ஒரு மனித ஆட்கொலை என யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த வழக்கு (02.01.2024) யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது குறித்த இளைஞனின் பிரேத பரிசோதனை அறிக்கை மன்றிற்கு கிடைக்கப்பெற்றது.

சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட காயங்கள் உடலில் காணப்பட்டதாகவும் இதனால் உயிரிழப்பு நேர்ந்துள்ளதாகவும் பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

21 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் முதல் தோற்ற அடிப்படையில் இது மனித ஆட்கொலை என நீதிபதி தெரிவித்தார்.

மேலும் இரண்டாவது சாட்சி ஐந்து பொலிஸார் சித்திரவதை செய்ததாக தெரிவித்த நிலையில் மேலதிக சந்தேகநபரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி மன்றில் முன்னிலைப்படுத்துமாறு இந்த வழக்கின் விசாரணைப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார்.

மேலும் குறித்த குற்றத்தில் பொலிஸார் ஈடுபட்டிருப்பதால் நீதிமன்ற கட்டளையின் பிரதியை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்புமாறு மன்று கட்டளையிட்டது.

இது சித்திரவதைக்கு உள்ளான மனித ஆட்கொலை வழக்கு என்பதால் மேல் நீதிமன்றத்திலேயே இறுதியான தீர்ப்பை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்த நீதிபதி வழக்கின் குற்றப் பத்திரத்தினை மேல் நீதிமன்றில் தாக்கல் செய்வதற்கு சட்டமாஅதிபருக்கு அறிவுறுத்தியதுடன் மூல வழக்கை சட்டமாஅதிபருக்கு அனுப்பி வைக்குமாறு மன்றின் பதிவாளருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

மேலும் சந்தேக நபர்கள் நாலவரையும் எதிர்வரும் 16ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# 96 வயது மூதாட்டி கால் தவறி கிணற்றில் விழுந்து உயிரிழப்பு – அராலியில் துயரம்!

96வயது மூதாட்டி ஒருவர் கால் தவறி கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் அராலி மேற்கு, வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கம்மா என்ற மூதாட்டியே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த மூதாட்டி கிணற்றில் தண்ணீர் கிள்ளுவதற்கு முயன்றவேளை கிணற்றினுள் விழுந்தது உயிரிழந்தாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கனடிய செய்திகள்
Canadian News

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கனடா மொன்றியால் நகர புறுட்ஸ் கபி (Fruits Haby) தமிழர் நிறுவனத்தினால் கையளிக்கப்பெற்ற கண் பரிசோதனை இயந்திரம்!

அண்மையில் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் மேற்படி கிளிநொச்சி வைத்தியசாலைக்கு, 2.5 மில்லியன் ரூபா பெறுமதியிலான கண் பரிசோதனை இயந்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளரால், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களிடத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய, கனடா மொன்றியால் நகரத்தில் நீண்டகாலமாக இயங்கும் புறுட்ஸ் கபி (Fruits Haby) தமிழர் நிறுவன உரிமையாளரான சின்னத்துரை சண்முகலிங்கம் அவர்களின் 2.5 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில் கொள்வனவு செய்யப்பட்ட, ஜப்பான் தொழிநுட்பத்துடன் கூடிய இப்பரிசோதனை இயந்திரம் வைத்தியசாலை கண்சிகிச்சைப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், வைத்தியசாலை நிருவாகத்தினரால் தெரிவுசெய்யப்பட்ட 100 பயனாளிகளுள் முதற்கட்டமாக 39 பேருக்கான இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி சுகந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி. துஸ்யந்தன், கண் சிகிச்சை நிபுணர், வைத்தியகலாநிதி. ஞானரூபன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அருட்தந்தை யூட் அமலதாஸ் அடிகளார், புறுட்ஸ் கபி நிறுவன உரிமையாளர் சின்னத்துரை சண்முகலிங்கம் மற்றும் அவரது குடும்பத்தினர், வடக்குமாகாண மேனாள் கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா, கரைச்சிப் பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கத்தினர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையினர், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கண்பரிசோனை இயந்திரம் மற்றும் மூக்குக் கண்ணாடிகள் ஆகியவை வழங்கப்பெற்றதன் பின்னர் வைத்தியசாலை நிர்வாகத்தால் கொடையாளர் புறுட்ஸ் கபி (Fruits Haby) தமிழர் நிறுவன உரிமையாளரான சின்னத்துரை சண்முகலிங்கம் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நன்றி தெரிவிக்கப்பெற்றது.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

**- செய்தி: சத்தியன் -**











# கனடாவில் வோட்டலூ பிராந்திய தமிழ்க் கலை பண்பாட்டுக் கழகம் நடத்தும் வருடாந்த தைப்பொங்கல் — தமிழர் மரபுரிமை நாள் கொண்டாட்டம் - 2024

TCA பெருமையுடன் வழங்குகிறது
வாட்டலூ பிராந்திய
தமிழ் பாரம்பரிய மாத விழா

**தை பொங்கல் 2024**

**நாள்:**
ஞாயிறு, ஜனவரி 14, 2024

**நேரம்:**
மாலை 3.30 - இரவு 8.30

**இடம்:** Holy Family Croation Roman Chatholic Banquet Hall
180 Schweitzer Street, Kitchener, ON.

E-Tickets: Member - $20, Non-Member - $30
Child - $15 (5-15 years), Under 5 Years - FREE
Member Family: $60 (2 Adults & 2 Kids Under 12 Years)

Event Admission: Ticket ONLY
Limited guests.



Admission closing: Tuesday January 09 2024

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# புதிய ஆண்டைத் திட்டமிடுவது?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



சந்தேகத்துக்கிடமின்றி புதிய ஆண்டு பொருளாதார ரீதியாக கஷ்டமான ஒரு ஆண்டாகத்தான் இருக்கும். கடந்த வாரம் எனது கட்டுரையில் கூறப்பட்டது போல மரக்கறி விலை அதிகரித்துக் கொண்டே போகிறது. வடக்கு கிழக்கின் ஆகப்பெரிய மரக்கறி சந்தை திருநெல்வேலியில் உள்ளது. அதில் ஒரு கிலோ பச்சை மிளகாய் வருட இறுதியில் அதாவது கடந்த வார கட்டுரை எழுதப்படுகையில், 1800 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஆனால் வருடப் பிறப்பின் பின் பச்சை மிளகாய் கிலோ 2000 ரூபாய் போகின்றது. மரக்கறிச் சாப்பாடு சில கடைகளில் 450 ரூபாய் போகிறது. வற் வரி அதிகரிப்பின் விளைவாக எல்லாப் பொருட்களின் விலைகளும் உயரும் ஆபத்துத் தெரிகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் போண்டாவிலில், ஒரு சன சமுக நிலையத்தில் ஒரு சமகால அரசியல் கருத்தரங்கு நடந்தது. தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட அந்த அமர்வுக்குத் தலைமை தாங்கிய ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் சொன்னார்.... தன்னோடு கதைக்கும் பலர் காலை உணவை உட்கொள்வதில்லை என்று. மருத்துவர்களின் ஆலோசனைப்படி காலை உணவை தவிர்க்கக் கூடாது. இரவு உணவைத் தவிர்க்கலாம். என்று அவர் ஆலோசனை சொல்லியிருக்கிறார். அதற்கு அவர்கள் பின்வருமாறு பதில் சொன்னார்களாம் "காலை சாப்பிடாவிட்டால் பகல் முழுதும் வேலை செய்யும் பொழுது அல்லது வேறு வேறு அலுவல்களில் ஈடுபடும் பொழுது பசி தெரியாது. ஆனால் இரவு சாப்பிடாவிட்டால் பசி தெரியும். நித்திரை வராது" என்று. ஆண்டு இறுதியில் இதுதான் நிலைமை என்றால் தை பிறந்தாலும் வழி பிறக்குமா?

சாதாரண மக்களுக்கு வழி பிறக்குமோ இல்லையோ, அரசியல்வாதிகள் அதிகாரத்தைச் சுவைப்பதற்கான புதிய வழிகளைத் தேடித் திறக்கத் தொடங்கிவிட்டார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வைப்பதற்காகப் புதிய கூட்டணி ஒன்றை நோக்கி ஒரு புதிய அலுவலகம் கடந்த முதலாம் தேதி ராஜகிரியவில் திறந்து வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரியதர்ஷன் யாப்பா, நிமல் லான்சா ஆகிய இருவரும் புதிய கூட்டணி அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்கள்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மொட்டு கட்சியின் ஆதரவோடு பொது வேட்பாளராக ரணில்தான் நிறுத்தப்படுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் ரங்கே பண்டார கூறியிருக்கிறார்.

ரணிலுக்கு ஆதரவான பரந்துபட்ட கூட்டணியின் அலுவலகம் திறக்கப்பட்ட அதே நாளில், மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகிய ஷான் விஜயலால் டி சில்வா எதிரணியோடு அதாவது ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்டார். இவர் தென்மாகாண சபையின் முதலமைச்சராக இருந்தவர். அவர் எதிரணியில் இணைந்து கொண்டதன் மூலம் எதிரணி தானும் பலமடைவதான ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றது.

அதாவது, புதிய ஆண்டு அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான தயாரிப்புகளோடு பிறந்திருக்கிறது என்று பொருள். மக்கள் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் இருக்கலாம். மரக்கறிகளின் விலை வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்து போகலாம். புதிய வரிகள் மக்களை ஈவிரக்கமின்றிக் கசக்கிப் பிழியலாம். மோட்டார் சைக்கிள் ஒரு லக்சறிப் பொருளாக மாறலாம். ஆனால் அரசியல்வாதிகள் தங்களுடைய அதிகாரத்தை அனுபவிக்கும் ஆசையை குறைத்துக் கொள்ளப் போவதில்லை என்பதைத்தான் ஆண்டின் தொடக்கம் நமக்கு உணர்த்துகின்றது.

இவ்வாறு தென்னிலங்கையில் ஒரு ஜனாதிபதி தேர்தலை நோக்கி பிரதான கட்சிகள் ஏற்கனவே உழைக்க தொடங்கி விட்டிருக்கும் ஒரு பின்னணியில், தமிழ்த் தரப்பு என்ன செய்து கொண்டிருக்கிறது?

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக முதலில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது குத்துவிளக்கு கூட்டணிதான். சில மாதங்களுக்கு முன் கூட்டணியின் கூட்டம் மன்னாரில் நடந்த பொழுது ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவது என்று அக்கூட்டு முடிவெடுத்தது. அந்த முடிவை வலியுறுத்தி கூட்டுக்குள் அங்கம் வகிக்கும் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவ்வப்போது கருத்து தெரிவித்து வருகிறார். சுரேஷ் அவ்வாறு கருத்து தெரிவித்த பின் அண்மையில் விக்னேஸ்வரன் அதற்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்திருந்தார். ஒரு தமிழ் பொது வேட்பாளராகத் தான் களமிறங்கத் தயார் என்றும் அவர் அறிவித்துவிட்டார்.

இவ்வாறு விக்னேஸ்வரன் அறிவித்த பின் கஜேந்திரக்குமார் அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலை பகிஷ்கரிக்கும் என்பது அக்கட்சியின் நிலைப்பாடாகும்.

அதே சமயம் தமிழரசுக் கட்சி அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. அது தன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் மினக்கெடுகின்றது. எனினும் சுமந்திரனுக்கு நெருக்கமான சாணக்கியன் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவுக்கு எதிராகக் கருத்து தெரிவித்திருக்கிறார்.

கடந்த 15 ஆண்டுகளில் நடந்த மூன்று ஜனாதிபதி தேர்தலின் போதும் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலிமையாக முன் வைத்தது கடைசியாக நடந்த ஜனாதிபதி தேர்தலையொட்டி தமிழ் மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்ட சுயாதீனக் குழுதான். குழுவின் முயற்சிகள் வெற்றி பெறவில்லை. என்ற போதிலும் அக்குழு அந்த முடிவை நோக்கி கருத்துருவாக்க வேலைகளைச் செய்தது.

இம்முறை குத்து விளக்கு கூட்டணி அந்த முடிவை எடுத்திருக்கின்றது. குத்துவிளக்கு கூட்டணி இந்தியாவுக்கு ஆதரவான ஒரு கூட்டணியாகவும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த கேட்கும் ஒரு கூட்டணியாகவும் பார்க்கப்படுகின்றது. இந்தியாவுக்கு ஆதரவான ஒரு கூட்டு என்று கருதப்படும் குத்துவிளக்கு கூட்டணி தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்தை கையில் எடுத்ததனால் அது இந்தியாவின் வேலையோ என்ற சந்தேகம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஏற்பட்டிருக்கலாம்.

முதலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும் என்று பார்ப்போம். ஒரு தமிழ் பொது வேட்பாளர் நிச்சயமாக வெல்லப் போவதில்லை. ஆனால் அவர் பிரதான சிங்கள வேட்பாளர்களின் வெற்றிகளை சவால்களுக்கு உட்படுத்துவார். எப்படியென்றால், ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி தமிழ் கட்சிகள் கடுமையாக உழைத்தால், தமிழ் வாக்குகள் பெருமளவுக்கு அவருக்குத்தான் விடும். அப்படி விழுந்தால் இரண்டு பிரதான சிங்கள வேட்பாளர்களுக்கும் 50 வீதத்துக்கு மேலான வாக்குகள் கிடைக்காமல் போகக்கூடும். அப்பொழுது இரண்டாவது சுற்று வாக்கு கணக்கெடுப்புக்கு போக வேண்டி வரும். அதில் தமிழ் மக்கள் யாருக்கு தமது இரண்டாவது விருப்பு வாக்கை வழங்குகிறார்களோ அவரே வெற்றி பெறுவார். அதாவது யார் ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதனை தீர்மானிக்கும் பேர வாய்ப்பை பரிசோதிக்கும் ஒரு முயற்சியே அது.

இரண்டு பிரதான சிங்கள வேட்பாளர்களுக்கும் தமிழ் வாக்குகள் கிடைக்காது என்றால், அவர்கள் தமிழ்த் தரப்போடு பேரம் பேச வருவார்கள். அப்பொழுது தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் ஒருவருக்கு தமிழ் மக்கள் தமது இரண்டாவது விருப்பு வாக்கை அளிக்கலாம். அதாவது தமிழ் வாக்குகளை ஒரு சிங்கள வேட்பாளருக்கு "பிளாங்க் செக்"காக வழங்குவதற்கு பதிலாக பேர வாய்ப்பாக அதைப் பயன்படுத்துவது.

ஆனால் இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் தமிழ் மக்களோடு ஓர் உடன்பாட்டுக்கு வரும் சிங்கள வேட்பாளர் தென்னிலங்கையில் தோற்கடிக்கப்படும் ஆபத்து அதிகம் உண்டு என்பதுதான். அதனால் எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் தமிழ் மக்களோடு பேரம்பேச வர மாட்டார். ஆனால் அது கூட தமிழ் மக்கள் வெளி உலகத்துக்கு ஒரு உண்மையைச் சொல்வதற்குரிய வாய்ப்பை உருவாக்கும். அது என்னவெனில், சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் யாருமே இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ் மக்களுக்கு வெளிப்படையான வாக்குறுதிகளை வழங்கத் தயாரில்லை என்பதுதான்.

எனவே ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ் மக்களுக்கு உள்ள பேர வாய்ப்புகளை பரிசோதிக்கலாமோ இல்லையோ, தமிழ் மக்களின் மக்கள் ஆணையை புதுப்பிப்பதற்கு உதவுவார். அவர் தமிழ் மக்களின் உச்சபட்ச கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் வாக்குகளைக் கேட்பார். தேர்தல் என்று வந்தால் அது ஒரு ஜனநாயகக் கொண்டாட்டம். அங்கே கட்சிகளுக்கு புது ரத்தம் பாய்ச்சப்படும். கட்சித் தொண்டர்கள் உற்சாகமாக இறங்கி வேலை செய்வார்கள். கிராமங்கள்தோறும் கட்சி அலுவலகங்கள் திறக்கப்படும். கிராம மட்டத்தில் கட்சி வலையமைப்புகள் பலப்படுத்தப்படும். ஒரு தமிழ் பொது வேட்பாளரை நோக்கி எல்லா கட்சிகளும் அவ்வாறு உழைக்கும் பொழுது, அது தமிழ் மக்களை ஆகக்கூடிய பட்சம் ஒரு தேசமாகத் திரட்டும்.

ஏற்கனவே கடந்த 15 ஆண்டுகளிலும் நடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தலில் போதும் தமிழ் மக்கள் ராஜபக்சங்களுக்கு எதிராகத் திரளாக வாக்களித்து இருக்கிறார்கள். அவ்வாறு ஒரு சிங்கள வேட்பாளருக்கு எதிராக விழும் வாக்குகளை தமிழ் மக்கள் ஆணைக்கான ஒரு வாக்காக மாற்றினால் என்ன?

கஜேந்திரகுமார் கூறுகிறார், ஒரு தமிழ் பொது வேட்பாளர் இறுதியாக யாராவது ஒரு சிங்கள வேட்பாளரை ஆதரிப்பார் என்பதனால் அந்தத் தெரிவை தாம் ஏற்கவில்லை என்று. மேலும் ஒற்றை ஆட்சிக்குள் ஒரு தீர்வை ஏற்றுக் கொள்ளும் கட்சிகள் அவ்வாறு ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டுகிறார்.

ஆனால் இங்கு ஏற்கனவே பார்த்ததுபோல, பிரதான சிங்கள வேட்பாளரோடு பேரம் பேசக்கூடிய நிலைமைகள் குறைவாக இருக்கும் என்றால், அதை தமிழ் மக்களின் ஆகப்பிந்திய ஆணையைப் பெறுவதற்கான ஒரு மறைமுக வாக்கெடுப்பாக தமிழ் மக்கள் பயன்படுத்தலாம். தமது உச்சமான கோரிக்கைகளை முன்வைத்து அதற்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்பதனை வெளியுலகத்துக்கு எடுத்துக் கூறலாம்.

இந்த கோரிக்கையை முன்வைப்பது சுரேஷ்புரிமைச்சந்திரன் அல்லது குத்து விளக்கு கூட்டணி அல்லது விக்னேஸ்வரன் என்பதற்காக அதனை எதிர்க்கத் தேவையில்லை. அது தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் வாய்ப்புகளை அதிகப்படுத்தும் என்ற அடிப்படையிலாது அதைப் பரிசோதிக்கலாம்.

ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் ரணில், சஜித் உட்பட எல்லா சிங்கள வேட்பாளர்களையும் சவால்களுக்கு உட்படுத்துவார். அவர்களை தமிழர்களை நோக்கி வரச்செய்வார். அல்லது அவர்கள் தமிழர்களுக்கு எதிரான வெளிப்படையான நிலைப்பாட்டை எடுக்கக் கூடிய நிலைமைகளை ஏற்படுத்துவார். அதாவது சிங்கள வேட்பாளர்களை அம்பலப்படுத்துவார். ஆனால் இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக, அவர் தமிழ் மக்களின் ஆகப் பிந்திய மக்கள் ஆணையை வெளிக்கொண்டு வருவார். தமிழ் மக்களை ஐக்கியப்படுத்துவார். அந்த ஐக்கியத்துக்கு தகுதியானவர்கள் தலைமை தாங்கலாம்.

ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் கட்டாயமாக விக்னேஸ்வரனாகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை. அவர் கிழக்கில் இருந்து வந்தால் அது மிகச் சிறப்பு. ஒரு பெண்ணாக இருந்தாலும் சிறப்பு. அவர் ஒரு குறியீடு. அவர் ஒரு நிரந்தரத் தலைவர் இல்லை. ஆனால் கட்சிகளாக, வடக்குக் கிழக்காக, சமயங்களாக, சாதிகளாக, ஒரே கட்சிக்கு இரு வேறு குழுக்களாக, முகநூல் குழுக்களாக, சிதறிக்கிடக்கும் ஒரு சமூகத்தை ஒரு தேர்தலை நோக்கியாவது ஒன்றாகத் திரட்ட முடியும் என்றால் அது ஒரு நற்செயல்தானே?

## வீணாவின் கவிக்கணை

இருக்கும் வரை
புரிந்துணர்வின்றி
வாழ்ந்துவிட்டு,
இழந்த பின்
மனம் வருந்துவதில்
பயனில்லை,
இருக்கும் போதே
உணர்ந்திருந்தால்
வாழும் வாழ்க்கை
இனிமையாக
இருந்திருக்க கூடும்,
உயிர் பிரிகையிலும்
நிம்மதியாக
இருந்திருக்க கூடும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சட்டவிரோதமாக கடலாமை இறைச்சியை வைத்திருந்தவர் கைது!

சட்டவிரோதமாக கடலாமை இறைச்சியை வைத்திருந்த 54 வயதுடைய நபர் ஒருவர் நாவற்குழி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடம் இருந்து 14 கிலோ 800 கிராம் எடையுடைய கடலாமை இறைச்சி மீட்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரினால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்ட பழுதடைந்த உருளைக்கிழங்கின் பின்னால் சதி — தியாகலிங்கம் தெரிவிப்பு



யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்ட பழுதடைந்த உருளைக்கிழங்கு விதைகளின் பின்னால் சதி நடவடிக்கை என எண்ணத் தோன்றுவதாக யாழ்ப்பாண மாவட்ட கமக்கார அமைப்புக்களின் அதிகார சபை தலைவர் கந்தையா தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாபாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் கடந்த 3 வருடங்களாக உருளைக்கிழங்கு செய்கையினை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளது.

அதாவது கொரோனா மற்றும் சேதன உரத் தட்டுப்பாடு காரணமாகவும் உருளைக்கிழங்கு செய்கை பாதிக்கப்பட்டது.

இவ்வருடமும் உருளைக் கிழங்கு செய்கைக்காக கொண்டுவரப்பட்ட விதை உருளைக் கிழங்குகள் பற்றீரியா நோய்த் தாக்கத்தால் அழிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை விவசாய நிலங்களை கடந்த 6மாதங்களாக பண்படுத்திய நிலையில் தற்போது உடனடியாக உருளைக் கிழங்கு இல்லை என்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்ட பக்றீரியாக்களுடன் கூடிய உருளைக் கிழங்குகளின் பின்னணியில் சதி நடவடிக்கையா என எண்ணத் தோன்றுகிறது.

அடுத்த வருடமாவது யாழ் மாவட்டத்தில் 150 ஹெக்டேரில் உருளைக் கிழங்கு செய்கையை மேற்கொள்ள தரமான உருளைக்கிழங்கு விதைகளை 50 வீத மானிய அடிப்படையில் பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுப்பதாக தெரிவித்தார்.

# ரணிலின் வருகைக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்!



தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் எற்பாட்டில், ஜனாதிபதியின் யாழ்ப்பாண வருகையினை முன்னிட்டு இன அடக்குமுறை எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் உள்ள பழைய பூங்காக்கு





அருகாமையில் இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே, நல்லிணக்க நாடகம் போடாதே, தென்கோனை கைது செய், மக்களின் வாழ்கையினை அழாக்காதே, கைதுசெய்தவர்களை விடுதலை செய், ஜனநாயக போராட்டத்தினை தடுத்து நிறுத்தாது என்று கோஷமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களை தடுத்து நிறுத்திய பொலிஸார்கள் வீதி மறியல் செய்துள்ளனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் சட்ட ஆலோசகர் கனகரத்தினம் சுகாஷ், உறுப்பினர்களாகிய பொன்மாஸ்டர், அருண்மதி, ஜெகன், பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் மூதாட்டியிடம் தாலியை அபகரித்த இருவர் கைது!

யாழ்ப்பாணத்தில் தேன் விற்பனையில் ஈடுபடுவது போல பாசாங்கு செய்து மூதாட்டியிடம் 7 பவுண் பெறுமதியான தாலியை அறுத்து சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோண்டாவில் மற்றும் தெல்லிப்பழையை பகுதியைச் சேர்ந்த முறையே 50, 41 வயதானவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை - தொண்டமானாறு பகுதியில் கடந்த டிசம்பர் மாதம் 27ம் திகதி நடைபெற்ற சம்பவம் தொடர்பாகவே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் சந்தேக நபர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



# கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் உணவகங்களில் சுகாதார சீர்கேடு — பொதுமக்கள் விசனம்

(04-01-2024)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள உணவகங்களில் அண்மைக்காலமாக சுகாதார சீர்கேடுகள் இடம்பெற்று வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உணவு சீர்கேடுகள் மற்றும் உணவகங்களில் பாராதூரமான குறைபாடுகள் காரணமாக அரச தனியார் அலுவலகர்கள் உட்பட பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள் என ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மாநகர சபை அண்டிய புறநகர் பகுதிகளிலும் இவ்வாறான சம்பவங்கள் உணவங்களில் தொடர்ந்து இடம்பெறுவதாக சுட்டிக்காட்டுகின்றனர். இது தவிர உணவுக்கழிவுகள் கூட உடனடியாக அகற்றப்படாமல் உணவகங்களில் தேங்கிக் காணப்படுகின்றன.

கல்முனை நகரப்பகுதி பெரிய நீலாவணை மருதமுனை நற்பிட்டிமுனை பாண்டிருப்பு கல்முனை சாய்ந்தமருது உள்ளிட்ட பகுதிகளில் வீதியோரங்களில் உள்ள உணவகங்களில் இவ்வாறான நிலை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்தில் உணவகங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக காணப்படுகின்றதுடன் அதிகளவான பொதுமக்கள் உணவுத்தேவைகளை இவ்வுணவகங்களில் பூர்த்தி செய்வதை அவதானிக்க முடிகின்றது. ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் திடீர் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக உணவு பாதுகாப்பு கண்காணிப்பாளர்கள் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் கடமையாற்றுகின்ற போதிலும் இவ்வாறான சுகாதார சீர்கேடுகள் தொடர்கதையாகவே உள்ளதாக பாதிக்கப்பட்டோர் குறிப்பிடுகின்றனர். இவ்வாறான சீர்கேடான குறைகளை சுட்டிக்காட்டும் போது உணவக உரிமையாளர்கள் அராஜகத்தில் ஈடுபடுவதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பிரதேசங்களில் உள்ள உணவகங்களில் உணவு பரிமாறும் பணியாளர்களின் உடைகள் அசுத்தமாக உள்ளமை உணவகங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் முறையாக அகற்றப்படாமை, உணவு பரிமாறும் பாத்திரங்கள் மீள சுத்தப்படுத்தப்படாமை, உணவுப் பண்டங்கள் காட்சிப்படுத்தப்படும் கண்ணாடிப் பெட்டிகள் சுத்தமின்மை, சீராக மூடப்படாமை, உணவக சமையல் பகுதி அசுத்தமாக உள்ளமை பழைய உணவுகளை சூடு காட்டி உண்ணக் கொடுத்தல், போன்ற செயற்பாடுகளால் சுகாதார சீர்கேடுகள் இடம் பெறுகின்றன என்பதை மக்களின் கருத்துக்களில் இருந்து அறிய முடிகிறது.

இவ்வாறான செயற்பாடுகளால் வெளிமாவட்டத்தில் இருந்து கல்வி, வேலை நிமிர்த்தம் வந்தவர்களும், உள்ளூர் மக்களும் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர். மேலும் இச்சீர்கேடுகளினாலும் உரிய பராமரிப்பின்மையினாலும் மேற்படி பிரதேசங்களில் இலையான்களின் பெருக்கம் அதிகரித்து காணப்படுவதுடன் அதிக தொற்று நோய்களும் ஏற்படுவதற்கான சூழலும் ஏற்பட்டுள்ளன.

இது தவிர பெரும்பாலான உணவங்களின் கழிவு நீர் வெளியேற்றும் பகுதி பிரதான வீதியால் வெளியேற்றப்படுவதனால் பாதசாரிகள் விபத்துக்களுக்கு உள்ளாவதுடன் சுகாதார ரீதியாக பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இத்தகைய சீர்கேடு தொடர்பாக உரிய சுகாதார அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டுகின்ற போதிலும் அந்த உணவகங்களில் தேநீர் அருந்திச் செல்கின்கின்றார்களே தவிர தகுந்த நடவடிக்கை எதனையும் இதுவரை மேற்கொள்ளவில்லை என பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இனியாவது இச் சீர்கேடுகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# வியாபார நிலையம் முற்றுகை 7 வியாபாரிகளிடம் பாவனைக்கு உதவாத பெருமளவிலான பொருட்கள் மீட்பு



- கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகர் மற்றும் கல்லடி பகுதிகளில் வீதியோரங்களில் வியாபாரத்ங்களில் ஈடுபட்டுவரும் வியாபார நிலையங்களை வியாழக்கிழமை (4) மட்டக்களப்பு பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் முற்றுகையிட்டு 7 வியாபார நிலையங்களில் மனித பாவனைக்கு உதவாத கரட், கருவா: வாழைப்பழம், ஒரேஞ், இனிப்புபண்டமான பூந்தி ஆகிய பெருமளவிலான பொருட்களை கைப்பற்றியுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் த.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

மட்டு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் சுகுணன் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்களான த.மிதுன்ராஜ், சோதிராஜா அமிர்தன், சோமசுந்தரம் யசோதன் ஆகியோர் கொண்ட குழுவினர் சம்பவதினமான இன்று காலை 10 மணியளவில் கல்லடி பொது சந்தை சதுக்கம், கல்லடி, திருகோணமலைவீதி, அரசடி, ஊறணி போன்ற பகுதிகளில் வீதியோரத்தில் மரக்கறிவகைகள், பழவகைகள், மீன்கள் கருவாடு போன்ற பொருட்களை வீதியோர வியாபாரம் செய்துவரும் வியாபார நிலையங்களை முற்றுகையிட்டு பரிசோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன் போது மனித பாவனைக்கு உதவாத வாழைப்பழம், ஒரேஞ், உணவு பண்டமான தேன்குழல், கருவாடு கரற், போன்ற பொருட்களை 7 வியாபார நிலையங்களில் இருந்து கைப்பற்றியுள்ளதுடன் அவற்றை அழிக்கும் நடவடிக்கை முன்னெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.





இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை!





சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்றையதினம் நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது. இதன்போது நடைபெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து சம்பிரதாயபூர்வமாக கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் சார்பாகா அரசியல் ஆலோசகர் திரு. ஜோதிலிங்கம், வடக்கு மாகாண கடற்றொழில் சமாசம் சார்பாக அ.அன்னராசா, தந்தை செல்வநாயகம் அறக்கட்டளையினர், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர், ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்வாறு கையொழுத்திட்ட மகஜரானது யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

# கடவை காப்பாளர்கள் மேற்கொண்டுள்ள 48 மணி நேர பணிப்புறக்கணிப்பில்

வடமாகாணத்தைச் சேர்ந்த பாதுகாப்பற்ற புகையிரத கடவையில் பணியும் கடவை காப்பாளர்கள் மேற்கொண்டுள்ள 48 மணி நேர பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளனர்.

தமக்கான சம்பளத்தை அதிகரிக்க வலியுறுத்தியும், நிரந்தர நியமனத்தை வலியுறுத்தியும் குறித்த பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

2013ம் ஆண்டு தொடக்கம் குறித்த கடவை காப்பாளர்கள் பொலிஸ் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் நாளார்ந்தம் 250 ரூபாக வீதம் மாதார்ந்தம் 7500ரூபா பெற்றுவருகின்றனர்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள வட் வரியில் எப்படி வழமுடியும் எனவும், வாழ்நாளில் பாதிநாற்களில் பாதிவயிருடன் வழவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு உரிய தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர்.

# வரியை குறைக்குமாறு கோரி சத்தியக்காடு சந்தை வியாபாரிகள் பணி பகிஸ்கரிப்பு!

தாம் விற்பனை செய்யும் மரக்கறிகள் மீதான வரியினை குறைக்குமாறு கோரி வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வியாபாரிகள் 04-01-2024 அன்று பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில், பிரதேச சபையினால் சந்தையானது ஏலத்திற்கு விடப்பட்டது. ஏலத்தில் எடுக்கும் குத்தகைதாரருக்கு வியாபாரிகள் 4 வீத வரி செலுத்த வேண்டும் என்ற விடயம் ஏற்கனவே அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பிரதேச சபையும் சந்தையை குத்தகைதாரருக்கு வழங்கியது. இந்நிலையில் குறித்த வரி பிரச்சினை ஏற்பட்டதனால் குத்தகைதாரர், வலி.மேற்கு பிரதேச சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் குறித்த பகுதிக்கு சென்றனர். அவர்கள் அங்கு இருந்த வியாபாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கடந்த வருடம் குறித்த குத்தகைதாரர் மனிதாபிமான ரீதியில் ஒரு மூடை மரக்கறிக்கு 60 ரூபா வரி வாங்கியுள்ளார். இந்த ஆண்டு விலைகள் அதிகரிப்பு காரணமாக மரக்கிக்கறிகளுக்கு கிலோவுக்கு மூன்று ரூபாவும், வெங்காயத்துக்கு கிலோவுக்கு ஒரு ரூபாவும், உருளைக்கிழங்குக்குக்கு கிலோவுக்கு இரண்டு ரூபாவும் வரியாக கோரியுள்ளார். அல்லது அனைத்து மரக்கறிகளுக்கும் இரண்டும் ரூபா வரியாக கோரியுள்ளார்.



ஆனால் அந்த வரிப்பணத்தை தங்களால் செலுத்த முடியாது என்றும் ஒரு மூடை மரக்கறிக்கு 80 ரூபா வரியாக தருவதாகவும் அல்லது வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குக்கு கிலோவுக்கு ஒரு ரூபா வரியாக தருவதாகவும் ஏனைய அனைத்து மரக்கறிகளுக்கும் கிலோவுக்கு இரண்டு ரூபா படி வழங்குவதாகவும் வியாபாரிகள் கூறினர்.



இறுதியில் இரண்டு தரப்பினரும் அனைத்து மரக்கறிகளுக்கும் இரண்டு ரூபா வரி செலுத்துவதாக தெரிவித்து இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.



# யாழ்ப்பாணத்தில் க.பொ.த.உயர்தரப் பரீட்சை ஆரம்பம்!

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை 04-01-2024 அன்று காலை 8.30 மணியளவில் நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகியுள்ளது.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள பரீட்சை நிலையங்களிலும் பரீட்சை ஆரம்பமாகியுள்ளது.

அந்தவகையில் வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பெற்றுள்ள 141 பரீட்சை நிலையங்களில் 18461 பரீட்சார்த்திகள் இவ்வாறு பரீட்சைக்கு தோற்றுவதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.





# மன்னார் மாவட்டத்தில் மழை நீரை சேமிக்கும் திட்டம் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் தடை இன்றி விவசாய செய்கை

### சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ

- மன்னார் நிருபர் (04-1-2024)

மன்னார் மாவட்டத்தில் மழை நீரை சேமிக்கும் நடை முறை திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில் தடை இன்றி விவசாய செய்கையை முன்னெடுக்க முடியும் என மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வருடா வருடம் ஒவ்வொரு பருவ காலங்களிலும் மழை பெய்வது வழமை. மழை பெய்யும் போது பிரதேசங்களில் வெள்ள நீர் பெருக்கெடுக்கும்.

மழை நீர் கடலுடன் கலக்கும். 8 ஆம் மாதத்திற்கு பின்னர் பெய்யும் மழையின் நீரை நாங்கள் எந்த வகையிலும் சேமிப்பது இல்லை.அனைத்து மழை நீரும் கடலுடன் கலக்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் சுமார் 6 இற்கும் மேற்பட்ட ஆறுகள் காணப்படுகின்றது. அனைத்தும் அதிகமான நீரை கொண்டு செல்லக் கூடிய பெறுமதியான ஆறுகளாக காணப்படுகிறது. இந்த ஆறுகள் ஊடாக வருகின்ற நீர் கடலுடன் கலக்கின்றது.

ஆனால் 6 ஆம் மாதத்தின் பின்னர் நெற்பயிர்ச் செய்கை, தோட்டம் மற்றும் கால்நடைகளுக்கு நீர் இல்லை என அழை மோதி திரிவோம்.

எனவே மன்னார் மாவட்டத்தில் ஆறுகளை அண்மித்த பகுதிகளில் பாரிய குளங்களை கட்டினால் மன்னார் மாவட்ட விவசாயிகள் இரண்டு போகத்திற்கு தேவையான நீரை தேவைக்கு அதிகமாக பயன்படுத்த முடியும்.

அருகில் உள்ள யாழ் மாவட்டத்திற்கும் தேவையான நீரை வழங்க முடியும். பாலியாற்று தண்ணீர் கடலுடன் கலப்பதை அவதானிக்கிறோம். இவ்வளவு சுத்தமான நீர் ஆறுகள் ஊடக சென்று கடலுடன் கலக்கின்றது.

விவசாயிகள் ஒவ்வொரு வருடமும் நீருக்காக பல்வேறு பிரச்சனைகளை சந்தித்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி aches | Stress, Migraine & All Types of Head- |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

கனடிய செய்திகள் Canadian News

# கனடாவில் CTCயின் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாய்மார்கள் கனேடிய பிரமருக்கு கடிதம்

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும், தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறவும் எமது தொடர் போராட்டம் 2,507 நாளாகும். வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக, ஏ-9 வீதியில் உள்ள இந்த பந்தலில் எமது பயணம் தொடர்கிறது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் போது குழந்தைகளை இழந்த பெண்களின் குழுவான காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளின் தாய்மார்கள், தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையை அங்கீகரித்ததற்கும், பாலஸ்தீனப் பிரச்சினைக்கு அவர் வழங்கிய ஆதரவிற்கும் நன்றி தெரிவித்து, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு கடிதம் எழுதியுள்ளோம்.

எவ்வாறாயினும், கனடாவில் புலம்பெயர்ந்த தமிழர்களின் பிரதிநிதியாகக் கூறிக்கொள்ளும் கனேடிய தமிழ் காங்கிரஸ் (CTC) மற்றும் கனடாவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ள இலங்கை போர்க் குற்றவாளியுடன் அதன் தொடர்பு குறித்தும் அவர்கள் தீவிர கவலைகளை எழுப்பியுள்ளனர்.

அந்த கடிதத்தின்படி, ஐ.நா மற்றும் பிற சர்வதேச அமைப்புகளால் தமிழர்களுக்கு எதிரான அட்டூழியங்கள் மற்றும் மனித உரிமைகளை மீறியதாக குற்றம் சாட்டப்பட்ட இலங்கை போர் குற்றவாளியுடன் CTC ஒரு சந்திப்பை நடத்தியது. இது கனடாவின் வெளியுறவுக் கொள்கையை மீறுவதாகவும் ஒரு போர்க் குற்றவாளியின் அங்கீகாரமாகவும் பார்க்கப்படலாம் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளோம். CTCஎன்பது தமிழ் அமைப்பு அல்ல, பணம் மற்றும் புகழால் இயக்கப்படும் சிங்கள அமைப்பு என்றும், அது தமிழர்கள், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் பிற நாடுகளை தவறாக வழிநடத்துகிறது என்றும் அந்தக் கடிதத்தில் குற்றம் சாட்டியுள்ளோம்.

இலங்கை போர்க்குற்றவாளி இலங்கை கருவூலத்தில் இருந்து திருடப்பட்ட நிதியை ரொறன்ரோவில் திருமண மண்டபங்கள் மற்றும் உணவகங்கள் போன்ற வணிகங்களை நிறுவ பயன்படுத்துவதாகவும், சில CTC உறுப்பினர்கள் இந்த மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் கடிதம் மேலும் கூறுகிறது. டொராண்டோவில் உள்ள அய்யப்பன் கோயிலுக்கும் CTC உறுப்பினர்கள் மூலம் போர்க்குற்றவாளிகளின் முதலீடுகளுக்கும் தொடர்பு இருப்பதையும் அந்தக் கடிதம் வெளிப்படுத்துகிறது. இந்த பரிவர்த்தனைகள் குறித்து விசாரணை நடத்தவும், கனடாவில் பணமோசடி நடவடிக்கைகள் எதுவும் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்யவும், கனடாவின் வருவாய் தினைக்களத்தை அந்த கடிதத்தில் வலியுறுத்துகிறோம்.

இலங்கையில் உள்ள அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA) உறுப்பினர் ஒருவர் கனடாவிற்கு விஜயம் செய்த போது ஊவுஊ மற்றும் அதன் ஆதரவாளர்கள் 1,000,000 டொலர் பணம் செலுத்தியதாகவும் கடிதம் குற்றம் சாட்டியுள்ளது. இந்த எம்.பி இந்தப் பணத்தை இலங்கையில்




விமர்சிப்பவர்களை, சக கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஊடகங்களுக்கு லஞ்சம் கொடுத்து வாயடைக்கப் பயன்படுத்துவதாகவும், அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வமற்ற தலைவராகச் செயற்படுவதாகவும் அந்தக் கடிதத்தில் குற்றம் சுமத்துகிறோம்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய்மார்கள், CTC மற்றும் அதன் கூட்டாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும், அவர்களின் செயல்களுக்கு அவர்களைப் பொறுப்பேற்குமாறும் பிரதமர் ட்ரூடோவைக் கேட்டுக்கொள்கிறார்கள். மேலும், தமிழர் நலனுக்காகவும், உலகம் முழுவதும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் அவர் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம்.

நன்றி செயலாளர்
கோ. ராஜ்குமார்
தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம்

இணையத்தள இணைப்பு: https://www.tamildiasporanews.com/58eS7

# மட்டக்களப்பு கொக்கட்டிசோலை கிஸ்ணமூர்த்தி ரூபதர்சன் என்னும்குடும்பஸ்தர் முதலை தாக்கி ஒரு கையை இழந்ததனால் வாழ்வாதாரம் கருதி 3 ஆடுகள் வழங்கப்பெற்றன



இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிசோலை 9ம் வட்டாரத்தைச் சேர்த கிஸ்ணமூர்த்தி ரூபதர்சன் என்னும் குடும்பஸ்தர் மீன்பிடித் தொழிலுக்காக ஆற்றுக்கு சென்றபோது முதலை ஒன்றால் தாக்கப்பட்டு அவர் ஒரு கையை இழக்கவேண்டி ஏற்பட்டுள்ளது இதனால் இந்தக் குடும்பத்தின் வாழ்வாதாரம் முற்றிலும் பதிக்கப்பட்டுள்ளது இதனை கருத்தில் கொண்டு அவர்களது வாழ்வாதாரத்தை மேன் படுத்தும் நோக்கில் கனடாவில் வசித்துவருபவரும் உதவும் பொற்கரம் அமைப்பின் ஸ்தாபகருமான சமூக சேவையாளர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கனடாவில் "உதயன்" பத்திரிகையின் அதிபரும் பிரதம ஆசிரியருமான லோகேந்திரலிங்கம் அவர்களின் நிதி அன்பளிப்பில் 3 ஆடுகள் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு வழங்கப்பெற்றது.



இதற்கு உண்டு சக்தியாக இருந்த உதவு பொற்கரம் அமைப்பின் ஸ்தாபகருமான திரு. விசு கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட வேண்டும் என்ற எண்ணம் கொண்ட கனடா உதயன் பத்திரிகை ஆசிரியருமான நாகமனி லோகேந்திரலிங்கம் அவர்களுக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

# இலங்கையில் இதுவரை இல்லாத அளவில் யானைகள் இறப்பு

இலங்கை சுதந்திரம் அடைந்த பிறகு இதுவரை இல்லாத வகையில் கடந்த ஆண்டு (2023) 474 யானைகள் உயிரிழந்துள்ளன.

கடந்த பல ஆண்டுகளாகவே இலங்கையில் தொடர்ச்சியாகவே யானைகளின் இறப்பு அதிகரித்து வருகிறது. இந்த எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டு 439 என்ற அளவில் இருந்தது. அதற்கு முந்தைய ஆண்டு 375 யானைகள் உயிரிழந்தன. இந்த உயிரிழப்புகளில் மூன்றில் ஒரு பங்கு யானைகளுக்கும் மனிதர்களுக்கும் உருவாகும் மோதல்கள் காரணமாகவே ஏற்படுகிறது.

"சுதந்திரத்திற்கு பிறகான காலப்பகுதியைப் பார்க்கும் போது, அதிகளவிலான யானைகள் இறப்பு பதிவாகியுள்ளது" என்று சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை கற்கைகளுக்கான மையத்தைச் சேர்ந்த டிமுத்து சந்தருவான் செனதீர கூறுகிறார்.

2023ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 74 யானைகள் உயிரிழந்துள்ளன அனால் அவை எப்படி இறந்தன என்பது பற்றி தகவல் இல்லை என்கிறார் அவர். மேலும் "49 யானைகள் துப்பாக்கிச் சூட்டின் மூலமும் 36 மின்சாரம் தாக்கியும் பலியாயின" என்றும் அவர் கூறுகிறார்.

விரைவான நகரமயமாக்கல் மற்றும் யானைகளின் வாழ்விடங்களை மனிதர்கள் ஆக்கிரமித்தது, அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு உணவளிக்க வேண்டிய கட்டாயம் காரணமாக விவசாயத்திற்காக காடுகளை அழித்தது ஆகியவையே உலகளவில் யானைகளின் அழிவிற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக உள்ளது.

யானைகள் மற்றும் மனிதர்களுக்கு இடையே ஏற்படும் மோதல்களை தடுக்க அரசு போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் செனதீர விமர்சிக்கிறார்.

"அரசியல் தலைமைகளும் அதிகாரிகளும் என்ன செய்கிறார்கள் என்றால் யானைகளை ஒருங்கிணைத்து அவற்றை ஒரு பகுதிக்குள் தள்ளி பிறகு மின்வேலி அமைக்கிறார். ஆனால், அதற்கு அப்பாற்பட்டு அவர்களால் எந்த தீர்வையும் அளிக்க முடியவில்லை".

சுற்றுச்சூழல் சிறப்பாக இருப்பதற்கு யானைகளை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதேவேளை இப்பிரச்சனைக்கான நிரந்தர தீர்வைக் காண்பது சுலபமாக இருக்காது என்றும் அவர் அழுத்தமாகக் கூறுகிறார்.

"யானைகள் - மனிதர்களுக்கு இடையேயான மோதல்களுக்கு நிரந்தர தீர்வு காண்பது கடினம் என்றாலும், யானைகளின் ஜனத்தொகையைப் பாதுகாக்கவும் இந்தப் பிரச்சினையை நிரந்தர தீர்வு காண்பது மிகவும் அவசியமானது" என்றும் வலியுறுத்தினார் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை கற்கைகளுக்கான மையத்தைச் சேர்ந்த டிமுத்து சந்தருவான் செனதீர.



- நடராசா லோகதயாளன் -

# எம்மவர்களின் திறமைக்கான களங்கள் இன்னும் விரியட்டும் – பளுதூக்கல் வீரர் புசாந்தனுக்கு சிறீதரன் எம்.பி வாழ்த்து

சர்வதேச மற்றும் தேசிய ரீதியான பளு தூக்கல் போட்டிகளில் அபாரசாதனைகளை நிலைநாட்டியுள்ள, யாழ்ப்பாணம், தென்மராட்சியைச் சேர்ந்த சற்குணராசா புசாந்தனை, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் சென்று வாழ்த்தி மதிப்பளித்துள்ளார்.

அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற ஆசிய கிளாசிக் பவர்லி·ப்டிங் சம்பியன்ஷிப் பளுதூக்கல் போட்டியில் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்ற புசாந்தன், அண்மையில் பண்டாரகம பகுதியில் இடம்பெற்ற தேசியரீதியிலான பளுதூக்கல் போட்டியில் கலந்துகொண்டு, மூன்று பிரிவுகளிலும் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.

120 கிலோவிற்கு மேற்பட்டோருக்கான பிரிவில் கலந்து கொண்ட இவர், squat பிரிவில் 330 கிலோகிராமையும், benchpress பிரிவில் 175 கிலோகிராமையும், deadlift பிரிவில் 261 கிலோ கிராமையும் தூக்கி வெற்றி பெற்றுள்ளதோடு, குறித்த போட்டியில் மொத்தமாக 766 கிலோ கிராமை தூக்கி புதிய சாதனையையும் படைத்துள்ளார்.

இந்நிலையிலேயே, யாழ்ப்பாண மண்ணின் சாதனைமகனான புசாந்தனை, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நேரில் சென்று வாழ்த்தி மதிப்பளித்துள்ளார்.

# கிளிநொச்சியில் படையினருக்கு மேலும் நிலம்?

கிளிநொச்சி மாவட்டத்தில் படையினரின் இருப்பிற்காக 2 ஆயிரத்து 273 ஏக்கர் நிலம் கோருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் (04-01-2024) யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிற்கான விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போதே இத் தரவுகள் ஜனாதிபதி முன்னிலையில் மாவட்டச் செயலாளர் சார்பாக முன்வைக்கப்பட்டது.

இவ்வாறு இடம்பெற்ற விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் படையினர் கோரும் 2 ஆயிரத்து 273 ஏக்கர் நிலத்தில் பூநகரியில் ஆயிரத்து 666 ஏக்கரும், கரைச்சியில் 195 ஏக்கரும், கண்டாவளையில் 197 ஏக்கரும் கோரும் அதே நேரம் பளையில் 145 ஏக்கரும் கோருகின்றனர்.

இவ்வாறு கோரும் 2 ஆயிரத்து 273 ஏக்கர் நிலத்தில் கடற்படையினரே அதிக நிலத்தை கோரி நிற்பதாகவும் அதற்கமைய கடற்படையினர் ஆயிரத்து 295 ஏக்கர் நிலத்தையும், இராணுவத்தினர் 559 ஏக்கர் நிலத்தையும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினர் 290 ஏக்கரை கோரும் அதே நேரம் பொலிசார் 17 ஏக்கரை கோருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதேநேரம் கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பிரதேச செயலாளர் பிரிவிலே இன்னமும் 70 குடும்பங்களைச் சேர்ந்த 238 பேர் மீள் குடியேற்றப்பட வேண்டும் என்ற தரவுகளும் சமர்ப்பிக்கப்பட்டது.

இதேபோன்று நில விடயத்தில் வனவளத் திணைக்களத்மின் பிடியில் தற்போதுள்ள 7 ஆயிரத்து 132 ஏக்கரை விடுவிக்க இணக்கம் தெரிவிக்கும் திணைக்களம் மேலதிகமாக 2 ஆயிரத்து 273 ஏக்கரை கோரிநிற்கின்றது. வன ஜீவராசிகள் திணைக்களத்தை பொறுத்தமட்டில் 100 ஏக்கரை விடுவிக்க இணக்கம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் முக்கிய விடயங்களாக படையினர் வசமுள்ள நிலத்தில் இருந்து 695 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட வேண்டும், 22 கிலோ மீற்றருக்கு யானைத் தடுப்பு முறை அமைக்கப்பட வேண்டும், வயல் அழவிற்கான அழிவு மற்றும் பரந்தனில் விவசாய நிலையத்திற்கான ஓர் புதிய கட்டிடம் அமைக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டது.

இவ்வாறு கோரப்பட்ட வயல் அழிவில் 5 ஆயிரத்து 559 கெக்டேயர் அல்லது 14 ஆயிரம் ஏக்கர் வயல் முழுமையாகவும் 1 ஆயிரத்து 300 கெக்டேயர் அல்லது 5 ஆயிரத்து 700 ஏக்கர் பகுதி அளவிலும் அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திற்கு 4 ஆயிரத்து 714 வீடுகள் தேவைப்படுவதோடு 10 ஆயிரத்து 500 குடும்பங்களிற்கான குடிநார் வசதியும், ஆயிரத்து 10 குடும்பங்களிற்கான மின் இணைப்பும் வழங்க வேண்டியுள்ள அதேநேரம் கேரதீவு சங்குப்பிட்டிப் பாலம், 50 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படவேண்டி உள்ள அதேநேரம் நகரின் மத்தியில் வீதிச் சமிக்கையும் அமைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதேநேரம் அறவியல்நகர், ஆனந்தபுரம், கனேசபுரம் பகுதியில் ஒலியுடன் கூடய புகையிரதக் கடவை சமிக்கைகள் அமைக்கவும் கோரப்பட்டது.

# கடும் பாதுகாப்பின் மத்தியில் ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகைக்கு எதிராகப் போராட்டம் – மூவர் கைது



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு எதிராக வியாழக்கிழமை (4) பிற்பகல் தொடக்கம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு அருகில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களில் மூவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பஸ்ஸில் ஏற்றப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள நிலையில், யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக வளாகத்துக்கு வெளியே நீர்த்தாரைப் பிரயோகிக்கும் வாகனங்கள், கலகமடக்கும் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு உலங்கு வானூர்தியில் வருகை தரும் ஜனாதிபதி மாலை 3 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பார் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், எதிர்ப்புப் போராட்டத்தையடுத்து ஜனாதிபதி மாலை 4.10 மணிக்குத்தான் அதிவிசேட பாதுகாப்புடன் யாழ். மாவட்ட செயலகத்துக்குள் நுழைந்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் பழைய பூங்காவுக்கு அருகிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் போராட்டம் நடைபெற்று வருகின்றது.



இதையடுத்து அங்கு பொலிஸார் வீதித் தடைகளை அமைத்துப் போராட்டக்காரர்களைத் தடுத்து வைத்து நிறுத்தினர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டம் இடம்பெறும் பகுதியை ஜனாதிபதியின் வாகன அணி தாண்டிச் செல்லும்போது அதி வேகமாக பயணித்தது. இதேநேரம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு ஊடகவியலாளர்கள் எவரும் அனுமதிக்கப்படாது ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் ஊடகவியலாளர்களே அனுமதிக்கப்பட்டனர்.

இதேநேரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும் மட்டுமே யாழ்ப்பாணம் சார்பில் கூட்டத்தில் பங்குகொண்டிருந்தனர்.

416 283 6232
இப்பொழுது உங்கள் GEETHAVAANI RADIO வை
தொலைபேசி அழைப்பில் கேளுங்கள் !


Tamil Heritage Month
இனிய தமிழ் மரபுத்திங்கள்
MPP Logan Kanapathi
Markham - Thornhill
மாகாணம் சார்ந்த விடையங்களுக்கு
நீங்கள் என்னை தொடர்பு கொள்ளலாம்.
Tel: 905 - 305 - 1935 | E-mail: logan,kanapathico@pc.ola.org
Visit Us: 7380 McCowan Rd, Unit 3, Markham
https://logankanapathi.ca/


19th January Friday 2024 7PM
செந்தில் குமரனின் நிவாரணம் அமைப்பு பெருமையுடன் வழங்கும்
பொன்மனச் செம்மல், ஏழைகளின் இதய தெய்வம் எம்.ஜி.ராமச்சந்திரன்
அவர்களின் வாழ்வை கொண்டாடும் முகமாக
SCAN ME
MGR 107
மாபெரும் இன்னிசை விருந்து
Metropolitan Centre
3840 Finch Ave East
Scarborough
அவர்களின் அட்டகாசமான பாடல்களுடன், அவரின் சில அபிமான நடிகர்களின் முத்தான பாடல்களையும்
பாடி உங்களை மகிழ்விக்க ஆவலோடு உள்ளோம். வருகை தந்து உயிர்கள் காத்திடுவீர்
Life-Saving Surgeries | Hospital Equipments | Livelihood Assistance | Mobile Medical Clinic
416-200-7652, 647-526-7652
www.Nivaranam.com
$30, $60, $100
திரட்டப்படும் நிதி முழுவதும் தாயகத்தில் நலிந்த நோயாளிகளின் இருதய – சிறுநீரக் சத்திரசிகிச்சைகளுக்காகவும், மருத்துவ கட்டுமானங்களுக்காகவும்,
கிளிநொச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடமாடும் மருத்துவ சேவைக்காகவும், வாழ்வாதர உதவிகளுக்கும், இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.
100% of proceeds will be used for projects without any expenses deducted
முழு நிதி விபரங்களும் சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் | Thanks to all our Media Partners
செந்தில் குமரனின் நிவாரணம் (கனடா)
FREE PARKING
Our Digital Partners


பிரமாண்டமான கலை இரவு
MUSIC & DANCES OVER 500 PERFORMERS
TITLE SPONSOR
eXp REALTY BROKERAGE
MAHESAN SUBRAMANIAM BROKER
BUY OR SELL : 416-816-0141
அனலை எக்ஸ்பிறஸ் Analai Express HD
பாரம்பரியம்
முத்தமிழோடு கலைஞர்களின் சங்கமம்
6 JANUARY 2024
SATURDAY 3.PM
CHINESE CULTURAL CENTRE 5183 SHEPPARD AVE E, SCARBOROUGH, ON M1B 5Z5
647.278.5881 | 416.678.5866
www.analai.ca | analai.parampariyam@gmail.com
GOLD SPONSOR
NANTHA CATERS INC
BEST INDIAN SRI LANKAN TAMIL RESTAURANT IN TORONTO
(416) 626-8421
SILVER SPONSOR
MORTGAGE ALLIANCE
ARI PARAMALINGAM Mortgage Agent
+1 (647) 283-2283
YAARL CAKE HOUSE INC
416-431-6604 | 416-431-6674
DYNEVOR EXPRESS
1-866-DYNEVOR (396-3867)
BRONZE SPONSOR
ABAJEN BEAUTY SPA & AGA BEAUTY LEARNING ACADEMY
+1 416 677-5511
ARIYA Boutique
647-406-2393
CAN LANKA IMMIGRATION SERVICE INC.
HIMALAYA
647-201-7573 | 416-276-6867
Lanka Salon & Spa
லங்கா சலூன்
OATC OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
(416) 285-6900
VAIRAM APPLIANCE REPAIR
905 904 3422
CHAPEL RIDGE
416-258-6759
Mr. Digital Photo Lab
(416) 746-0006
Thana Yoganathan
416-418-5749
UTHAYA'S SUPER MARKET
416-740-7971 | 416-740-8588
VASANTHA JEWELLERY INC.
MEDIA SPONSOR
yugam radio
LUCKY
ஐயா 4U
ஈழநாடு
உதயன்
IBC தமிழ்
CET TV
MONதமிழ்
GTA தமிழ்
Krishna LIVE
Easy 24 News

Historical and Cultural Studies
UNIVERSITY OF TORONTO
SCARBOROUGH

கனடியத் தமிழ்ச்சங்கம் | படிமுறைத்தமிழ் ஒன்றியம் | உலகத் தமிழாசிரியர் பேரவை
Active Brain Center | Department of Historical and Cultural Studies, University of Toronto, Scarborough

இணைந்து நடத்தும்

# 15-ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு

- உலகின் பல நாடுகளிலும் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களின் சங்கமம்.
- அவுஸ்ரேலியா, மலேசியா, பிசி, சிங்கப்பூர், தமிழ்நாடு, மொரிசியஸ், தென்ஆபிரிக்கா, கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின்... ஆசிரியர்கள் பங்குபற்றும் ஆய்வரங்கம்.

தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இடம் – ரொராண்டோ பல்கலைக் கழகம், ஸ்காபுரோ வளாகம்



1265 Military Trail, Toronto, ON
காலம் - 2024 யூன் 1, 2, 3
நேரம் - காலை 9 மணி முதல்
மாலை 9 மணி வரை

மேலதிக விபரங்களை அறிய
padimuraitamil.com wtcc@padimuraitamil.com
416-821-5773 | 416-843-9514



# குடும்ப விளக்கின்
# 5ம் ஆண்டு நினைவுநாள்



| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 15 - 09 - 1961 | 11 - 01 - 2019 |

பனிபெய்யும் தேசமதில் பாங்குடனே வாழ்ந்த
திருமகனாம் குமார் என்னும் அழகனே
காலனவன் கவர்ந்திட்ட நேரமதில்
உன்னை வீழ்த்தும் விதிகள் எழுதப்பட்டிருந்தால்
விதிகளை வீழ்த்தும் அளவிற்கு எங்களின் பலம் போய்விட்டதே
ஞாலமதில் பிறந்திட்ட உன் புகழை நாம்
இவ் நானிலமே பயன் பெறவே நடந்தாயே
கடல் கடந்து நீ சென்று நாம் வாழ வழிவகுத்தாய்
இன்றும், என்றும் உன் நினைவு அழியாது
மனங்களில் நிறைந்தீர் மாசற்ற மனிதராய் உணர்ந்தோம்
மனதை ஈர்ந்தவராய் பாராட்டு பெற்று
பதவி உயர்வுகள் தேடி வந்தன
சினம் கொள்ளல் உம்மிடத்தில் சிறிதளவும் இல்லை
சீரான உடைகள், சிங்கார நடை, சிரித்த முகத்தோடு
செந்நிற மேனி சீக்கிரம் பொருந்திடும்
நட்பு வட்டங்கள் நடுவே சிகரமாய் இருந்தீரே
குதுகலம் நிறைந்து கொண்டாடி மகிழ்ந்தவை இனி வருமோ
ஏங்கி நிற்கும் நாம் உன் பாத கமலத்தை பூசித்து வணங்குவோம்
எங்கிருந்தாலும் அனைவரையும் வாழ்த்துவாய் என்று தெரியும்

திதி: 17-12-2023

## அமரர். சத்தியசீலன் சத்தியகுமார் (குமார்)

(யாழ். சுருவில் ஐயனார் கோவிலடி, கனடா)







17-12-2023 அன்று அன்னாரின் இல்லத்தில் ஆத்மசாந்தி பிரார்த்தனை நடைபெற்றது.

சத்தியசீலன், சத்தியகுமார், சத்தியபவான் மூவரின் நினைவாக 2-1-2024 அன்று ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம் கோவிற்குளம் வவுனியா இல்லத்திலுள்ள குழந்தைகள், சிறுவர்கள். முதியவர்கள் அனைவருக்கும் மூன்றுநேர உணவு வழங்கப்பட்டது.

குடும்பத்தினர். உற்றார், உறவினர், நண்பர்கள்

இலங்கை செய்திகள் Sri Lanka News

# எமது தமிழ் மக்கள் 75 வருடங்களாக சிங்கள ஆட்சியாளர்களால் மாத்திரமல்ல தமிழ்தலைமைகளினாலும் ஏமாற்றப்படுவதும் வரலாறாக உள்ளது

## தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க செயலாளர் ராஜ்குமார் கனடா உதயனுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவிப்பு



"தமிழ் மக்கள் 75 வருடங்களாக ஏமாற்றப்படுவதே வரலாறாக உள்ளது. சிங்கள ஆட்சியாளர்களால் மாத்திரமல்ல தமிழ் தலைமைத்துவங்களினாலும் ஏமாற்றப்படுவதும் வரலாறாக உள்ளது என்பது கசப்பான விடயமாகும். இவ்வாறான ஏமாற்று வேலைகளுக்கு பலியானவர்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோர்களும் உறவினர்களும் உள்ளடக்கப்படுகின்றார்கள். தமிழ் மக்கள் அனுபவித்த அந்த ஏமாற்றங்களையும் நாமும் தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்றோம்".

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பின் செயலாளரான கோ. ராஜ்குமார் கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கத்தை வவுனியாவில் உள்ள அமைப்பின் தற்காலிக பொது ஜனத் தொடர்பு அலுவலகத்தில் சந்தித்தபோது தெரிவித்தார்.

கடந்த வாரம் இலங்கைக்குச் சென்றிருந்த "உதயன்" லோகேந்திரலிங்கம் வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரை சந்திக்க வேண்டும் என்று விடுத்த வேண்டுகோளையடுத்து செயலாளர் ராஜ்குமார் மற்றும் சங்கத்தின் தலைவி திருமதி. காசிப்பிள்ளை ஜெயவனிதா ஆகியோரைச் சந்தித்து உரையாடினார்.

மேற்படி சந்திப்பின் போது வலிகளும் ஏமாற்றங்களும் நிறைந்த தங்கள் அனுபவங்களை இருவரும் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் சார்பில் நாம் உயிரைப் பணயம் வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினோம். இந்தப் போராட்டத்திற்கு உள்நாட்டில் மாத்திரமல்ல உலக அளவிலும் எமக்கு ஆதரவு கிட்டியது. இதனை அடுத்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கென கொழும்பில் அலரி மாளிகையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கென நாம் அழைக்கப்பட்டோம். எங்களுடைய குழுவில் சிரேஸ்ட சட்டத்தரணி இரட்னவேல் தலைமையிலான சட்டத்தரணிகள் அங்கம் வகித்தனர். அந்தப் பேச்சுவார்த்தையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அழையா விருந்தாளிகளாக வந்து அமர்ந்திருந்து எமது கருத்துக்களுக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்த வண்ணம் இருந்தனர்.

அந்த பேச்சுவார்த்தையின் போது காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பின் சார்பில் மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

1. காணாமல் ஆக்கப்பட்டோரை விடுதலை செய்தல்.
2. தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல்.
3. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல்.

இந்த மூன்று கோரிக்கைகளையும் அரசாங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட அப்போதைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன பதினான்கு நாட்களுக்குள் தீர்வு காண்பதாக எழுத்து மூலம் உறுதி மொழி வழங்கினார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ளும் அதே வேளையில் இந்த விவகாரத்துக்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்பதே எமது இலக்காக இருந்தது.

இந்தப் பிரச்சனைக்கு அரசதரப்பில் பதினான்கு நாட்களுக்குள் தீர்வு காண்பதாக எழுத்து மூலம் உறுதி மொழி வழங்கியதை அடுத்து சட்டத்தரணி இரட்னவேல் தலைமையிலான சட்டத்தரணிகள் அந்தக் கூட்டத்தில் அழையா விருந்தாளியாக வந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெளியேற வேண்டுமென கோரிக்கையை அரசாங்க தரப்பிரிடம் முன் வைத்தனர்.

இதனை அடுத்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கான தீர்வு விடயம் கிடப்பில் போடப்பட்டு சிரேஸ்ட சட்டத்தரணி தலைமையிலான குழுவினருக்கும் அழையா விருந்தாளியாக அமர்ந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் மோதல் ஆரம்பித்தது.

அவ்வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் பின்வருமாறு எழுந்து நின்று கூறினார்.

"காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே அரசாங்கத்தரப்புடன் தொடர்ச்சியாகப் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர். கடந்த பொதுத் தேர்தலில் பெருமளவான காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் எனக்கே வாக்களித்தனர். இன்றைய கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பின் சார்பில் பதினான்கு பேரே கலந்து கொண்டுள்ளனர். இந்த 14 பேருக்குத் தீர்வினை வழங்குங்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான் காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரத்தை அரச தரப்புடன் தொடர்ச்சியாகப் பேசி வருகின்றனர். அரச தரப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைத் தவிர்த்துப் பேச்சு வார்த்தை நடத்துவதாயின் அரசாங்கத்துடனான தொடர்பை நாம் துண்டித்துக் கொள்வோம்" என்று கூறிவிட்டு வெளியேறினார். அவர் இவ்வாறு கூறியமை எமக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. அரசாங்கத்தின் பிரதிநிதி எமக்கு வாக்குறுதிகளைத் தந்த தருணத்தில் சுமந்திரன் அவர்கள் அதை இல்லாமல் செய்யும் காரியத்தை செய்ய முனைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பினருக்கு பெருத்த ஏமாற்றமாக அமைந்தது. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வினை கூட்டமைப்பினருடன்தான் பேச வேண்டும் எனக் கூறி சுமந்திரன் எம்.பி தடுத்துவிட்டார்.

எத்தையோ வருடங்களாக நாம் எமது உறவுகளை இழந்தவர்களுக்காக போராடி வருகின்றோம். ஆனால் எவரை நம்புவது என்பது தெரியவில்லை. அரசாங்கம் தமது நிகழ்ச்சி நிரழ்களுக்காக தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது. தமிழ்த் தலைமைகளும் சட்டத்தரணிகளும் தமது கொழும்பு அரசியலுக்காக எங்களையும் ஏமாற்றி தமிழ் மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர் என்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பின் செயலாளர் ஜெயக்குமார் தெரிவித்தார்.

அப்போது உதயன் பிரதம ஆசிரியர் பின்வரும் கேள்வியை அவரிடம் முன்வைத்தார்.

கேள்வி : இந்தப் போராட்டம் வவுனியாவில் நடைபெறுகின்றது. இன்றைய நிலையில் போராட்டக்காரர்களுக்ளாகிய உங்களுக்கு எதுவும் எந்நேரத்திலும் நடக்கலாம் என்ற சூழ்நிலையே உள்ளது. மிகுந்த சவால் நிறைந்த போராட்டம். இதனை எவ்வாறு முகம் கொடுக்கின்றீர்கள்?.

பதில்: நான் சவால்கள் என்பதற்கு அப்பால் எதிர்கால நகர்வுகள் எவ்வாறு இருக்க வேண்டுமென்றே கூடுதலாகக் கவனம் செலுத்துகின்றேன். முட்டையை உடைத்துக் கொண்டுதான் கோழிக் குஞ்சு வெளியில் வருகின்றது. எனவே சவால்களுக்கு நாம்தான் முகம் கொடுத்தாக வேண்டும். அதாவது அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விகளே என்றும் எங்கள் முன் நிற்கின்றதன.

கேள்வி: இலங்கை ஆட்சியாளர்களின் நல்லிணக்கம் குறித்து என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில்: இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்றது. ஒருபுறம் நல்லிணக்கம் பேசும் இலங்கை ஆட்சியாளர்கள் மறுபுறம் தமிழர் பகுதிகளை சிங்களக் குடியேற்றங்களாலும் புத்த விகாரைகளாலும் நிரப்பி வருகின்றனர். உண்மையில் ஒடுக்குமுறையாளர்களே நல்லிணக்கத்தை காட்ட வேண்டும். நல்லிணக்கம் என்பது தமிழ் மக்கள் 1947ம் ஆண்டைப் போன்று இலங்கை நிலைமைக்குத் திரும்ப வேண்டும்.

கேள்வி: தமிழ்த் தலைமைகள்குறித்த தங்களது அபிப்பிராயம் என்ன?

தமிழ்த் தலைமைகள் இன்று ஒன்று நாளை ஒன்று என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர். நாற்பது வருடங்களுக்கு முன்னர் தமிழர் சுயாட்சிக் கழகத்தினை நிறுவி தேர்தலில் போட்டியிட்ட ஊர்காவற்றுறை நவரட்னம் அவர்களை நினைத்து அவரது மறைவு நாளைக் கொண்டாடுகின்றனர். அன்று அவரது கொள்கை பிழை என தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கூறினார். ஆனால் அவரே 1977லில் தனி நாட்டுக் கோரிக்கைக் முன்வைத்து தமிழ் மக்கள் ஆணையை வேண்டி நின்றார். 1977 ஆம் ஆண்டு மக்கள் வழங்கிய ஆணையைத்தான் தமிழ் இளைஞர்கள் கைகளில் எடுத்தனர். இதனையே தொடர்ந்து தலைவரம் பிரபாகரன் முன்னெடுத்தார்.

எனவே எங்களுக்கு சார்பான கோரிக்கையை முன்வைத்துப் போராடும் தரப்பை இனம் காண்பது தற்போது கடினமாக உள்ளது.எங்களுக்கு மாத்திரம் அல்ல ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கும் இது பெரும் பிரச்சனையாகவே உள்ளது.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவர்கள் அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம் இந்தியா என்பன இலங்கை விவகாரத்தில் மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமெனக் கோருகின்றார். தான் தமிழரசுக்கட்சியின் தலைவராக வரவேண்டும் என்பதற்காகவே இவ்வாறு கூறுகின்றார்" என்று பலரும் கருத்து வெளியிட்டிருந்தனர்.

மறுபுறம் தமிழ்த் தலைமையை வைத்திருப்பதாகக் கூறும் சம்பந்தன் ஐயா ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவுடனான சந்திப்பின்போது நல்லிணக்கம் என்று ஏமாற்றாதீர்கள். நாம் சர்வதேசத்திடம் செல்வோம் என்று கூறுகின்றார். இவ்வாறாக ஒவ்வொருவரும் தங்கள் பாராளுமன்றம் நோக்கிய பார்வையை முன்வைத்தே அரசியல் செய்கின்றனர் தவிர தமிழ் மக்கள் நலன் கருதி அல்ல.

மொத்தத்தில் பார்த்தால் இன்றைய தமிழ்த் தலைமைகள் ஊடகச் செய்திகளுக்கான பரப்புரையிலேயே அதிக கவனம் செலுத்தி வருகின்றனர் என்றும் ஜெயக்குமார் அவர்கள் விசனம் தெரிவித்தார்.

**(வவுனியாவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)**

**Sapphire Banquet & Catering**

**Specializing in Videography & Photography**

- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

**SHIVA SUBRAMANIAM (647) 406-4868**

# டிரான் மற்றும் தேசபந்துவின் ‘யுக்தியா’ முன்னெடுப்பு ‘அநீதியான ஒரு நடவடிக்கை’ என்று இடித்துரைப்பு

**போ**தைப் பொருட்களுக்கு எதிரான இலங்கை பொலிசார் முன்னெடுத்துள்ள சர்ச்சைக்குரிய நடவடிக்கை, கடும் மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்துள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இடைக்கால பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட தேசபந்து தென்னக்கோன், உடனடியாக “ஒபரேஷன் யுக்தியா” என்ற போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கையை தொடங்கினார். அவர் ஏற்கெனவே மிரிஹான பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர்களை சித்திரவதை செய்தார் என்ற குற்றச்சாட்டில் குற்றவாளி என்று கண்டறியப்பட்டவர். அடிப்படை மனித உரிமைகளை மீறியவர் என்ற வகையில் அவர் பொலிஸின் தலைமைப் பொறுப்பிற்கு நியமிக்கப்பட்டிருக்கக் கூடாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவர் அப்பதவியில் நியமிக்கப்பட்டு இரு வாரங்களில் அவர் தடுத்து வைக்கப்பட்ட பல நபர்களைச் சித்திரவதை செய்தார் என்றார் என்ற குற்றச்சாட்டு நிரூபணமானது.

அவரது நடவடிக்கைகளை “அதர்மத்தின் ஒரு செயல்பாடு” என்று சிறைவாசிகள் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் செயற்பாட்டாளர் சுதேஷ் நந்திமல் சில்வா கூறியுள்ளார். “ஒபரேஷன் யுக்தியா” மூலம் ஏராளமான சட்டவிரோத கைதுகள் இடம்பெறுவதற்கு அப்பாற்பட்டு இதர மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெறுகின்றன என்று அவர் கூறுகிறார்.

“மக்கள் எவ்விதமான காரணங்களும் இன்றி கைது செய்யப்படுகின்றனர். போதைப் பொருட்கள் அவர்கள் இடங்களில் வைக்கப்பட்டு அதைக்காட்டி கைது செய்யப்படுகின்றனர். மேலும் சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன. கைதிகளால் நித்திரைகொள்ளக் கூட முடியவில்லை. அவர்களுக்கு முறையாக உணவு கூட கிடைப்பதில்லை. இதெல்லாம் இந்த அதர்ம செயல்பாட்டின் விளைவு” என்றார் சுதேஷ் நந்திமல்.

கடந்த டிசம்பர் 17 முதல், இந்த நடவடிக்கையின் கீழ் 20,000 கைதுகள் இடம்பெற்றுள்ளன. இதில் அவர் கூறியது போன்று போ-லி குற்றச்சாட்டுகளில் செய்யப்பட்ட கைதுகளும் அடங்கும். பொலிசாரே போதைப் பொருட்களை வைத்துவிட்டு அவர்களை கைது செய்வது நடந்துள்ளது. சர்வதேச கடப்பாடான ஐ சி சி பி ஆர் உடன்படிக்கையில் இலங்கை 1980இல் கைச்சாத்திட்டுள்ளது. அந்த உடன்படிக்கையின் மூலம் ஒரு நபர் சட்டவிரோதமாக தண்டிக்கப்படும் போது அரசு அதற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

கடந்த 2021ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசின் ஒரு ஆய்வில் “சிறைகளில் அடைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக கூடுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது” என்று கூறப்பட்டுள்ளது. குறிப்பாக கேகாலை சிறைச்சாலையில் 511% அதிகமாகவும், கொழும்பு ரிமாண்ட் சிறையின் அது 433% அதிகமாகவும் இருந்தது என்று அந்த அறிக்கை கூறுகிறது. அப்படி மிக அதிகமான வகையில் கைதிகள் அடைக்கப்படுவது சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதிப்பது மட்டுமின்றி மேலும் பல பிரச்சனைகளுக்கும் வழி வகுக்கும். சிறைக்கதிகளின் உரிமைகள் நெல்சன் மண்டேலா விதிமுறைகள் என்று அழைக்கப்படுகிறது. அது இலங்கை அங்கம் வகிக்கும் ஐ நா பொது சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

இலங்கைச் சிறைச்சாலைகளில் கைதிகளின் நிலை “ரின்னில் அடைக்கப்பட்ட மீன்கள்” போலுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இலங்கைச் சிறைச்சாலைகளில் நெரிசல் அதிகமாக உள்ளது என்று அரசின் ஆய்வே கூறுகிறது. அது கடந்த 2016ஆம் ஆண்டு 146.8% அதிகம் என்ற அளவில் குறைந்தாலும் பின்னர் தொடர்ச்சியாக அதிகரித்து 2020 ஆம் ஆண்டு 248.8% என்ற நிலையில் இருந்தது. ஆனால், பொதுப் பாதுகாப்பு அமைச்சோ சிறைகளில் நெரிசலை தம்மால் தடுக்க முடியாது என்று கூறிவிட்டது. “சிறைச்சாலையில் நெரிசல் அதிகரிக்கிறது என்பதற்காக சந்தேக நபர்களை கைது செய்வதை நிறுத்த முடியாது” என்று அதன் அமைச்சர் டிரான் ஆலஸ் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். சிறையில் நெரிசலை கையாள்வது சிறைத்துறை அமைச்சரின் பொறுப்பு என்று கையை கழுவிவிட்டார்.

சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை அளவுக்கு மீறி ஆட்கள் இருப்பதையும் அங்கு நெரிசல் அதிகமாக உள்ளதையும் அரசு அறிந்திருந்தாலும் அதற்கு பொறுப்பேற்க முன்வரவைல்லை என்பதே இதில் கசப்பான உண்மை.

2020 ஆம் ஆண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணையம், சிறைச்சாலைகளில் அதிகரிக்கும் நெரிசல் குறித்து வெளியிட்ட 883 பக்க அறிக்கையில் தமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டிருந்தது. அதில் “சிறைவாசம் முடியும் நிலையில் திருந்தி வாழ விரும்புவோர், இதர நூற்றுக்கணக்கானவர்களுடன் ஒரு இடத்தில் அடைக்கப்பட்டிருக்கும் போதும், அதிகாரிகள் மற்றும் மற்ற கைதிகளின் எதிர்மறை நடவடிக்கைகள் காரணமாக மீண்டும் வன்முறையில் ஈடுபடும் சூழலும், அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் நிலையும் உள்ளது” என்று கூறியுள்ளது.

அது மட்டுமில்லாமல் அந்த அறிக்கையில் “சிறைச்சாலைகளில் பிரச்சனைகளை ஏற்படுத்தும் கைதிகளை மனித உரிமைகள் விழுமியங்களின் அடிப்படையில் தடுத்து கையாள்வதற்கு சிறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்படவில்லை, மேலும் அவர்கள் ஒழுங்கை நிலைநாட்ட பலப்பிரயோகத்தை கையாள்கின்றனர்”. அது போதுமானது என்ற வாதமும் வைக்கப்பட்டது. அதன் காரணமாக “சிறைக் கைதிகளும் அதே முறையின் எதிர்வினையாற்ற வழி செய்கிறது” என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருட்களுக்கு எதிரான தமது யுத்தத்திற்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று டிரான் ஆலஸ் கோரியுள்ளார். இந்த நடவடிக்கை வெற்றிபெற மக்கள் ஆதரவு, அதிலும் குறிப்பாக ஊடகங்களின் ஆதரவு தேவை என்று அவர் கூறுகிறார்.

“யுத்த காலத்தில் பாதுகாப்பு படைகளுக்கு எப்படி ஒருங்கிணைந்த ஆதரவு இருந்ததோ அதே போன்ற ஆதரவு இப்போதும் மிகவும் முக்கியமானது” என்று அவர் தெரிவித்துள்ளார். கோவிட் பெருந்தொற்று காலத்தில், அதை எதிர்த்து போராடும் நடவடிக்கையை அரசு ஒரு யுத்தத்தை எதிர்கொள்வது போன்றது என கூறியது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில், ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். இன்றுவரை 10,000 அதிகமானவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவிலை. அதற்கான எந்த பதிலும் அரசிடமிருந்து வரவில்லை. போர்க்காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் ஆகியவை இன்றளவும் விசாரிக்கப்பட்டுப் பொறுப்புக்கூறல் இடம்பெறவில்லை.



OM NAMO NARAYANA



125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

Now In: 16 TREELINE COURT MARKHAM
L3S 3T8 CANADA
001 416 904 6278

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

- நடராசா லோகதயாளன் -

## அமைச்சர் டக்ளஸ் மீது மீனவர்கள் கடும் குற்றச்சாட்டு

கடற்றொழில் அமைச்சர் தனது ஆதரவாளர்களை வைத்தே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடாத்தியதாக யாழ் மாவட்ட கடற்தொழிலாளர்கள் கூட்டுறவு சங்க சமாசத்தின் முன்னாள் தலைவரும் ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச செயலாளருமான அ.அன்னராசா குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

கடந்த ஆண்டு டிசம்பர் மதம் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் தொடர்பான விவாதத்தின் போது, கடற்தொழில் அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் இலங்கையின் பெரும்பாலான பாராளுமனற உறுப்பினர்கள், குறிப்பாக வடக்கு மாகாணத்தை பிரநிதித்துவ படுத்தும் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் கறுப்பு பட்டி அணிந்து கடற்தொழிலாளர்களின் பிரச்சனையை எடுத்து கூறினர்.

வடக்கு கடற்தொழிலாளர்கள் சமூகத்திற்கு, இந்திய மீனவர்களின் பிரச்சனை ஒரு பிரச்னையாக இருப்பதோடு, உள்ளூர் இழுவை படகுகளால் ஏற்படுகின்ற பாதிப்புகள், சுருக்கு வலை மீன்பிடி, மற்றும் அனுமதியற்ற கடலட்டை பண்ணைகள் தொடர்பான பிரச்சனைகளை விவாதிக்காமல் வடக்கு மீனவர்களின் பிரச்சனைகளை இந்திய மீனவர்களின் பிரச்சனையோடு மட்டும் முடக்கி விடுவது வேதனையளிக்கின்றது.

ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு யாழ் மாவட்டத்தை சேர்ந்த கடற்தொகிலாளர்கள் சங்க சமாசத்தின் பிரதிநிதிகள் அழைக்கப்படாமல் அரசியல் பின்புலத்தோடு கலந்து கொண்டவர்கள். அதில் ஒருவரை தவிர ஏனைய அனைவரும் கிராமப்புறத்தில் கூட ஒரு சங்கத்திலும் இல்லை, சங்கத்தில் இல்லாதவர்கள் கடல்தொழில் அமைச்சரின் ஆதரவாளர்களாக நியமிக்கப்பட்டு அவர்கள்தான் அந்த கூட்டங்களில் கலந்து கொள்வதன் மூலம் மீனவர்களின் பிரச்சனைகள் மழுங்கடிக்கப்படுகின்றது.

புதிதாக கொண்டுவரப்படவுள்ள புதிய கடற்தொழிலாளர் திருத்த சட்டம் இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த கூடும் என்பதால் அதை நிராகரித்து அதற்கு எதிராக இலங்கை முழுவதும் கையெழுத்துக்கள் பெற தீர்மானித்துள்ள நிலையில், அந்த நடவடிக்கை ஊர்காவற்றுறை பொது சந்தை முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேளை, அரசியல் நோக்கத்தோடு மீனவர்கள் பிரச்சனையை வடக்கில் மூடி மறைத்து சீனாவுக்கு கடலை விற்பதற்கு துணை போகின்றார்கள். சீனாவினுடைய பணத்திற்கு அடிமையாகி தான் இந்த செயற்பாடுகள் நடக்கின்றது. சீனாவின் பணமோ நிவாரனங்களோ தேவையில்லை. சுதந்திரமாக எங்களுடைய கடலில் தொழிலை மேற்கொள்ள வேண்டும். மக்கள் விரும்பாத அபிவிருத்திகள் தேவையவற்றவை. வடக்கை பிரதிநிதித்துவ படுத்தும் கடல் தொழில் அமைச்சர் தமிழராக இருந்தும் வடக்கு மீனவர்கள் பல சவால்களை தொடரந்தும் எதிர்கொள்ளுகின்றனர்.

இனி வரும் காலங்களிலாவது கடற்றொழிலார்களின் பிரச்சனைகள் தொடர்பாக மீனவ பிரதிநிதிகளை அழைத்து அவர்களுடைய பிரச்சனைகள் பிரதேச ரீதியாக கேட்டறிந்து மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஜனாதிபதி விஜயம்: சட்டத்திற்கு உட்பட்டு எதிர்ப்பு நடவடிக்கைக்கு அனுமதி

ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு 4 ஆம் திகதி விஜயம் செய்யவுள்ள நிலையில், குறித்த விஜயத்தின் போது எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை தடுக்க கோரி யாழ்ப்பாண பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை யாழ் நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளதோடு சட்டத்தை மீறாத வகையில், ஜனநாகய ரீதியில் எதிர்ப்பில் ஈடுபடுவதற்கு உரிமை உள்ளது எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நாளை வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் 7 ஆம் திகதி வரை யாழில் தாங்கியிருந்து பலவேறு சந்திப்புகளை நடத்தவுள்ள நிலையில், அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என கருதி பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் உட்பட 8 பேருக்கு எதிராக குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கமைய செய்வாய்க்கிழமை நீதிமன்றம் பிறப்பித்திருந்த உத்தரவிற்கு அமைய, வழக்கின் 8 ஆவது பிரதிநிதியான தவத்திரு வேலன் சுவாமிகள் நீதிமன்றத்தில் இன்று ஆஜராகி தமது நிலைப்பாட்டினை தெரிவித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# அந்த ஆலமரம் நெஞ்சிலே நிறைந்திருக்கு

## அந்த பாடல் மூலம் மக்கள் மனங்களில் நிலைத்திருக்கும் இசையமைப்பாளர் எஸ்.எஸ். தில்லைச்சிவம்



மனித வாழ்க்கையில் தைரியம் - மனத்துணிவு, தன்னம்பிக்கை என்பன பிரதானமானவை என்று பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வரும் இசையமைப்பாளர் எஸ்.எஸ். தில்லைச்சிவம் வாழ்ந்து காட்டி வருகிறார். அவரது தன்னம்பிக்கை என்பது போற்றுதற்குரியது. எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். “வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை” என்ற கவியரசு கண்ணதாசனின் வரிகளுக்கிணங்க வாழ்க்கையை வடிவமைத்துப் பயணிக்கின்றார்.



இசைதான் மூச்சு. அதனால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை என்பதை நிரூபித்து நிற்கும் கலைஞர் எஸ்.எஸ். தில்லைச்சிவம் என்றால், அது மிகையானது அல்ல என்பதை அவருடன் சேர்ந்து பயணிக்கும் இசைக்கலைஞர்கள் அனைவருமே ஏற்றுக்கொள்வார்கள். வீரகேசரி கலையரங்கம் பகுதியில் கடந்த இருவாரங்களாக வெளிவந்த தில்லைச்சிவம் அவர்கள் பற்றிய தகவல்களைப் பத்திரிகையிலும், முகநூலிலும் வாசித்தறிந்த பலர் தங்களின் மேலான கருத்துக்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். இசைக்கலைஞன் எஸ்.எஸ். தில்லைச்சிவம் அவர்களை வாழ்த்தி மகிழ்வித்த அத்தனை உறவுகளுக்கும் நன்றி.

இளையநிலா இசைக்குழுவுடன் பயணித்து வந்த எஸ்.எஸ். தில்லைச்சிவம் தமக்கான ஒரு தனிப்பாதையை வகுக்க வேண்டிய நிலைக்குள்ளானார். 1995ல் “ஈழநிலா” இசைக்குழுவை ஆரம்பித்தார். மிகக் குறுகிய காலத்தில் இசைப்பிரியர்கள் மத்தியில் பெரும் புகழீட்டினார். திருமண வைபவங்கள், பிறந்த நாள் கொண்டாட்டங்கள் என்றும், கலைவிழாக்கள், ஆண்டுவிழாக்கள் என பிரமாண்டமான மேடைகளிலும் “ஈழநிலா” இசை மழை பொழிந்தது. இசைக்கலைஞர்கள், பாடகர்கள் என எல்லோரும் தில்லைச்சிவத்துடன் ஒத்தாசையாக இருந்து இசை நிகழ்ச்சிகளை அலங்கரித்து வந்தார்கள். இவரது பிரான்ஸ் வருகையில் இசைத்துறைப் பிரவேசத்துக்கு உந்துதலாக இருந்தவர்களில் முக்கியமானவர் பாடகர் கஜன். இருவரும் ஒன்றாக இசை நிகழ்ச்சிகளை பரிஸ் நகரிலே பார்த்து ரசித்தார்கள். குறிப்பாக இலங்கையில் இருந்து நமது கலைஞர்கள் இலங்கைக் கலையகத்தின் அழைப்பில் வருகைதந்து 1990ம் ஆண்டு பரிஸ் லா சிகால் பிரமாண்டமான மண்டபத்தில் நடைபெற்ற கலையமுதம் நிகழ்ச்சியில், இசையமைப்பாளர்கள் பயஸ் - ரட்ணம் இசையில் கஜன், நிரோஷா உடன் இணைந்து பாடல் ஒன்றைப்பாடியிருந்தார். இதுவே வெளிநாடு ஒன்றில் பாடகர் கஜன் அவர்கள் பங்குபற்றிய முதலாவது இசை நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியின் பார்வையாளர்களில் ஒருவராகத் தில்லைச்சிவம் திகழ்ந்தார். அவருடனான உரையாடலில் இந்த நிகழ்ச்சிபற்றிய விடயம் மறக்க முடியாததாக இடம்பிடித்துள்ளது. 2023ஆம் ஆண்டின் நிறைவுப்பகுதியில் கிடைத்த விடுமுறையில் லண்டனிலிருந்து பரிஸ் நகரத்துக்கு ஒரு குறுகிய வருகையின் பொழுது, கஜன், தில்லைச்சிவம் இருவரையும் ஒரு தேனீர் சந்திப்பில் கண்டு பேசிக்கொண்ட வேளையிலும் 1990ம் ஆண்டு கலையமுதம் நிகழ்ச்சி பற்றிய விடயங்கள் அலசப்பட்டன.




தில்லைச்சிவம் 1995ம் ஆண்டு ஈழநிலா ஆரம்பித்த பொழுது பாடகர் கஜன், அமரர் ஜெயா உட்படச் சில பாடகர்கள் பக்க துணையாக இருந்தார்கள். இந்தக் காலகட்டத்தில் சொந்தப்பாடல்களை உருவாக்குவதிலும் மிக உற்சாகமாக ஈடுபட்டு வந்தார். பரிஸில் நடைபெற்ற திரைப்பட முயற்சிகளின் பொழுது தயாரிக்கப்பட்ட ராஜாவின் ராகங்கள், புயல், தீ, சத்தியகீதை, நினைவு முகம், தயவுடன் வழிவிடுங்கள் போன்றவற்றுக்கு இசையமைப்பை மேற்கொண்டார். அவற்றுக்காகப் பல பாடல்களையும் இசையமைத்து வெளியிட்டிருந்தார். இதனை அடுத்து 1996ம் ஆண்டு ஜீவகானங்கள் இறுவட்டாக இவரது இசையமைப்பில் மாணி நாகேஸ், ஜெயா ஆகியோர் எழுதிய பாடல்கள் வெளியிடப்பட்டன.

மாணி நாகேஸ், ஜெயா, ஈழமுரசு ஆசிரியர் கஜன், கொலின்ஸ் எனப் பல படலாசிரியர்கள் எழுதிய பாடல்களுக்கு தில்லைச்சிவம் இசையமைத்துள்ளார்.

இவரது இசையமைப்பில் கஜன், ஜெயா, குமுதா, செல்வலிங்கம், இந்திரன் எனப் பல பாடகர்கள் பாடியிருக்கின்றார்கள் - பாடிவருகின்றார்கள். தில்லைச்சிவம் இசையமைத்த பாடல்கள் பல உள்ளன. அவற்றில், “தாய் நிலத்தை மறக்கலாமா” “திசைகள் எட்டும்” “பொங்கிடும் கடல் அலை” என அதன் வரிசை மிக நீண்டது. இந்தப் பாடல்களில் இருந்து மிக உயர்ந்த இடத்தைப்பெற்றிருக்கும் பாடல் தான், பிரான்ஸில் வாழ்ந்து வரும் பாடலாசிரியர் மாணி நாகேஸ் எழுதி, பாடகர் இந்திரன் குரல் கொடுக்க எஸ்.எஸ். தில்லைச்சிவம் இசையமைத்த “அந்த ஆலமரம் நெஞ்சிலே நிறைந்திருக்கு” என்ற பாடல் வானொலிகளிலும் மேடைகளிலும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. இந்தப்பாடலை பாடகர் கஜனும் பாடிப்பதிவு செய்துள்ளார். இதற்கான காரணம் மாணி நாகேஸ் அவர்களின் உன்னதமான வரிகள், தில்லைச்சிவத்தின் உயிரோட்டமான இசையமைப்பு. கேட்போர் நெஞ்சங்களைக் கவர்ந்திழுக்கும். மண்ணையும் மக்களையும் மனதிருத்தும்.





ஈழநிலா இசைக்குழுவுக்கான வரவேற்பு பெருகிவந்தது. தமிழர் புனர்வாழ்வுக்கழக விளையாட்டு விழா, மாவீரர் நாள் அரங்கம் என யாவற்றிலும் தில்லைச்சிவம் வலம் வந்தார்.

இதேவேளை இசை வகுப்புகளையும் தில்லைச்சிவம் ஆரம்பித்து சுரத்தட்டு வகுப்புகளை மிகவும் வெற்றிகரமாக நடத்திவந்தார். மணவர்கள் மிகவும் சிரத்தையோடு இசைக்கலை பயின்றார்கள். இவரின் பெயர் கூறும் அளவுக்குப் பலர் இன்று சுரத்தட்டு இசைக்கலைஞர்களாக வலம் வருகிறார்கள். இசையமைப்பாளர் எஸ்.எஸ். தில்லைச்சிவம் அவர்களைப் பல அமைப்புகள் மாண்பேற்றியுள்ளன. பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினர் “விடுதலை வேர்கள்” என்ற விருது வழங்கியிருந்தனர். ஆர். ரி.எம். பிறதேர்ஸ் கலைநிகழ்ச்சி அமைப்பாளர்கள் எஸ்.எஸ். தில்லைச்சிவம் அவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கி மாண்பேற்றியிருந்தனர்.

இசையே வாழ்வு என அதற்குள் மூழ்கியுள்ள தில்லைச்சிவம் இசைத்துறையில் தொடர்ந்து பயணித்து வருகிறார். இப்பொழுது உள்ள தொழில் நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி பாடல்களைப்பதிவு செய்து வழங்கி வருகிறார்.

பாடும் திறமையுடையவர்கள் அவரை அணுகும் பொழுது அவர்களால் பாடக்கூடிய பாடல்களை அவர்களது குரல்களில் பாடவைத்து, அழகாக இசை வழங்கிப் பதிவு செய்து கொடுக்கிறார். தில்லைச்சிவம் நல்லதோர் இசையமைப்பாளர் மாத்திரமல்ல, சிறந்ததோர் வழி காட்டி. அவரது வாழ்க்கை பலருக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கலாம். ஒரு கலைஞனால் எதை எல்லாம் சாதிக்க முடியுமோ அவற்றிலெல்லாம் மிக ஆழமாக இறங்கி நீச்சலடித்திருப்பவர் எஸ்.எஸ். தில்லைச்சிவம். அவரது இசைப்பயணங்கள் மென்மேலும் சிறந்தோங்க நல்வாழ்த்துகள்.

நன்றி: இலங்கை “வீரகேசரி” வாரஇதழ்

---

## புதிய ஆண்டே பிறந்து நீ வருவாயே
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

மாதா கோவில் மணியோசை ஒலிக்க
மாதர் எங்கும் மகிழ்வொலி எழுப்ப
வெண்பனி பொழிந்து விண்ணை மறைக்க
விண்ணவர் வந்து வாழ்த்துக் கூறிட
விண்ணில் விண்மீன் வித்தை காட்டிட
வெண்ணிலா வந்து விபரம் கேட்குமே!
காடுகள் விளைந்து கடும்பசி போக்கவும்
நாடுகள் தோறும் நற்பணி ஓங்கவும்
போர்கள் ஓய்ந்து போட்டிகள் நீங்கவும்
ஏர்பிடித்த மக்களின் ஏழ்மை ஒழியவும்
சண்டைகள் ஓய்ந்து சமத்துவம் பிறக்கவும்
சண்டியர் சன்னதம் சாந்தம் அடையவும்
புதுமைகள் செய்து புண்ணியம் தேடவும்
புதிதாய்ப் பூமியைப் புனிதமாய்ப் படைப்போம்
வறுமை ஒழிந்து வாழ்வு சிறக்கவும்
சிறுமை அகன்று சீர்கள் பெருகவும்
கடுங்குளிர் கொண்ட கனடா நாட்டில்
கடமை கண்ணியம் குடிமை காத்து
புதுமைகள் பலவும் புரிந்திட வந்திடும்
புதிய ஆண்டே பிறந்துநீ வருவாயே!

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# தமிழர்கள் தங்கள் பண்பாட்டை மறவாமல் தங்களின் எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டதே உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்

## இயக்கத்தின் துணை முதன்மைத் தலைவர் கனடா வாழ் சிவா கணபதிப்பிள்ளை

ஒரு நாட்டின் கலாசார பண்பாடு என்பது இனம், மதம், மொழி என்ற ரீதியில் சமூகத்துக்கு சமூகம் வேறுபட்டு காணப்படுகின்றது. எனினும் அதனை அந்த சமூகம் சார்ந்தோர் நாடு கடந்தாலும் விட்டுவிடுவதில்லை. அந்தவகையில் புலம்பெயர்ந்து சென்றும் தம் கலாசார பண்பாட்டினை கட்டிக்காக்கும் விதமாக உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இவ்வருடம் பொன்விழா காணும் உலகத் தமிழப் பண்பாட்டு இயக்கத்தின் துணை முதன்மைத் தலைவரும் தற்போது இலங்கையில் தங்கியிருந்து உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளை உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடத்திவருகின்றவருமான கனடா வாழ் சிவா கணபதிப்பிள்ளை அவர்கள் இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பகிர்ந்து கொண்ட விடயங்கள் தொகுப்பாக பின்வருமாறு,

தமிழர்கள் தங்கள் பண்பாட்டை மறவாமல் அதனை தங்களின் எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டதே உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம். இது 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் அகிலத் தலைவர் வீரப்பன்.



1994 ஆம் ஆண்டு நான் கனடா சென்றபோது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடா கிளைக்கு மறைந்த அமரர் செம்மல் செல்லையா தலைவராக இருந்தார்.

இதன் தொடர்ச்சியாக கடந்த 2006ஆம் ஆண்டு ஜுலை 7ஆம் திகதி கனடா சட்டத்திற்கு இணங்க அங்கு பதிவு செய்யப்பட்டது. இப்பதிவானது சட்டபூர்வமாக ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த இயக்கமானது கனடா, சுவீடன், பிரான்ஸ், ஜெர்மனி, தென் ஆபிரிக்கா, லண்டன் இவ்வாறு பல நாடுகளிலும் உள்ள இனம், மொழி, மதம், அரசியல் என்பனவற்றை கடந்து தமிழர்களின் பண்பாடுகளை விரும்பக்கூடிய பல்லாயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்களுடன் 50ஆவது ஆண்டினை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது.



அத்துடன் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் அனைத்துலக மாநாட்டினை நடத்துவதுடன் அதற்கு முன்னதாக பேரவை கூட்டத்தினையும் நடத்தி வருகின்றது.

இம்மாநாட்டில் நம் பண்பாட்டினை புதியவர்களிடம் எவ்வாறு எடுத்துச் செல்வது. நம் பிள்ளைகள், அவர்களின் பிள்ளைகள் இதனை பின்பற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற வழிமுறைகள் பற்றி கலந்துரையாடுவதோடு இளம் சந்ததியினர் அதனை முன்னெடுத்துச் செல்வதற்காக திருக்குறள் போட்டிகள், பண்பாடு தொடர்பான போட்டிகள் என பல போட்டிகளை நடத்தி அவர்களை வழிநடத்துகின்றோம். அத்துடன் அவ்வப்போது பண்பாடு தொடர்பான கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றோம். குறிப்பாக வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்கள் பண்பாட்டினை மறந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றோம்.



அந்தவகையில் கடந்த 2017ஆம் ஆண்டு எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது அனைத்துலக மாநாடும் பேரவை கூட்டமும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கைலாசபதி அரங்கில் அகிலத் தலைவர் கனடா வாழ் வினாசித்தம்பி துரைராஜா, செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

சினிமாத் துறையை சார்ந்தவர்களை அழைத்து வந்தால்தான் மக்கள் வருவார்கள் என்ற எண்ணக்கருவை மாற்றி எங்கள் இயக்கத்தின் மாநாடு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கூட்டத்துடன் தமிழ் அறிஞர்களையும் இலக்கியவாதிகளையும் முன்னிறுத்தி நடைபெறுகின்றமை மகிழ்ச்சி அளிக்கின்றது.

2017ஆம் ஆண்டுக்கு பின்னர் 2019ஆம் ஆண்டில் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட கொரோனா பரவல் காரணமாகவும் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் கடந்த ஆண்டுகளில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அகில உலக மாநாட்டினை நடத்த முடியாமல் போனது. எனினும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி மற்றும் செப்டெம்பர் முதலாம் திகதிகளில் அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 50ஆவது பொன்விழா மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டுக்கு முன்னதாக பேரவைக்கூட்டமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டிற்கு அமெரிக்க கிளை தலைவர் சட்டத்தரணி மார்கண்டு விக்னேஸ்வரன திட்ட அமைப்பாளராக செயற்பட்டு வருவதுடன் இவருடன் செயற்குழு செயலாளர் நடா ராஜ்குமார், ஊடகத்துறைப் பொறுப்பானர் லோகேந்திரலிங்கம் ஆகியோரும் இணைந்து செயற்படுகின்றனர்.

கொரோனா காரணமாக நாங்கள் இயங்காது இருந்த காலப்பகுதியில் எம் இயக்கத்துடன் தொடர்பற்ற சிலர் எம் இயக்கத்தின் பெயரை முன்னிலைப்படுத்தி செயற்பட்டனர். எனினும் மக்கள் அதன் உண்மைத்தன்மை என்ன என்பதை ஆராய்ந்து அறிந்து விழிப்புடன் செயற்படுவது நன்று. எமக்கு சர்வதேச ரீதியாக பல நாடுகளிலும் கிளைகள் உள்ளன. அவை அனைத்துமே சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்டவை. எனவே மக்கள் வீணான வதந்திகளை நம்ப வேண்டாம்.

### கலாசாரம் மற்றும் பண்பாடு

எம் மக்களின் கலாசார பண்பாடுகள் குறித்து கவலையடையத் தேவையில்லை. முன்னரை விட தமிழர்களின் பண்பாட்டு கலைகளை பிள்ளைகள் விரும்பி பின்பற்றுகின்றனர். போட்டிகளில் பங்குபற்றி தங்கள் திறமைகளை வெளிக்காட்டி வெற்றிகளை பெறுகின்றனர். இந்த நிலை தொடர வேண்டும். அதற்கானதொரு முயற்சியே எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் உருவாக்கம்.

நாம் நமது பண்பாடுகளை பேணிப் பாதுகாப்பதுடன் அதனை மற்றவர்களிடம் எடுத்துச் சென்று அதனை கௌரவப்படுத்த வேண்டும்.

ஆக இவ்வருடம் பொன் விழா காணும் எமது இயக்கத்தின் மாநாட்டினை அறிவிப்பதோடு எம்மக்களுக்கு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் 2024ஆம் ஆண்டு புதுவருட வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி: இலங்கை "வீரகேசரி" பிரதம ஆசிரியர் கஜன் அவர்கட்கு

---

## கடந்தவையும் கடப்பவையும் - (83)

தெளிவாக இடங்கேட்டு ஓடியவர் போனாலும் - மிக
பணிவாக இடம்விட்டு பக்குவமாய் நிற்கிறார்கள் - அறு

சுவையுள்ள உணவு கைக்குவந்து சேர்ந்திடவே
குளிரான ஓரிடத்தில் இருக்கைகள் போட்டிருக்க - அங்கு

மெதுவாக இருந்தபடி எல்லோரும் உண்ணும்போது - எல்லாம்
சரியாக இருக்கிறதா என்றும்கூடப் பார்க்கிறார்கள் சிலர்

வயிறாற உண்ணும்படி மற்றநாளில் சொல்பவர்கள்
வாயினிலே என்றுமது பழக்கம் போலும்

இலங்கையிலே அதிக மடங்கள் உள்ள கோயில் - வீடுகளில்
குழப்பமொன்று வந்திட்டால் பெண்கள்கூட - அன்று

வந்து தங்கும் இடமாயும் இருந்தது
இந்த கந்தனது இருப்பிடம் தான் - இதை

வந்தவர்கள் சொல்கிறார்கள் வாயாரப் புகழ்கிறார்கள் - இங்கு
கந்தனவன் வந்ததுவும் தங்கி அருள் தருவதுவும் - ஒரு

புதுமையான செயலென தாய்வழித் தாத்தா
சிறுவயதில் பலகதைகள் சொல்லித் தந்தார்

'மருதர் கதிர்காமர்' ஆற்றினிலே மீன்பிடித்து நின்றவேளை
சிறுவன் ஒருவன் வந்து அவசரமாய் அழைத்துநிற்க

'என்ன?' என்று கேட்டபோது சொன்னவனாம்
'தொண்டமானாற்றுக் கரையினிலே பூவரசமரத்தடியில்

எனக்கு கோயிலொன்று அமைத்து விடு' என்றதாக
'உனக்கு இந்த வேல் போதும் அதையமைக்க' என

'ஆலயத்தை அமைத்தாலும் பூசைமுறை தெரியாது' - மீனவர்
கோலத்தில் நின்றவர் சொன்னபோது

'கண்களை மூடு காட்டுகிறேன்' என்றபடி - கதிர்காமக்
காட்சியினைக் கண்முன்னே காட்டிவிட்டு

'வாய்கட்டிப் பூசை செய் - உனக்கு
வார்த்தையொன்றும் தேவையில்லை' என்று சொல்ல

மருதரும் விடவில்லை மறுபடியும் கேட்கிறாராம்
'திருநீறு கொடுக்கும் விதம்கூடத் தெரியாதே' என

'திருநீற்றை நீ எடு நானதைக் கொடுக்கிறேன்' என்று
மறுவார்த்தை பேசுதற்கு இடமேதும் கொடுக்காது - இன்றும்

செல்வச் சந்நிதியான் நீறென்றால் தனிச்சிறப்பு - வந்த
எல்லாப் பிணியும் தீருமென்ற ஒருகணிப்பு மக்களிடம்.

பெரியவர் வடிவினிலும் பிறகொருநாள்
அவசரமாய்க் கூப்பிட்டே கேட்டவராம் - 'எனக்கு

பச்சரிசிச் சோறும் பயிற்றங்காய்க் கறியும்
நித்தமும் வேண்டும்' என்று - அதுவும்

அறுபத்து மூவரொடு மருதருக்கும் தனக்குமாக
அறுபத்தைந்து ஆலிலையில் போட்டவாறு என்றுமாம்

செல்வச்சந்நிதியான் வரலாற்றில்
சொல்லியது இச்செய்தி இதையிங்கு சொல்லுவதால்

இன்றும் ஆலிலை அமுதினை உண்பவர்க்கு - அது
ஏன் என்று புரிவதற்கு உதவுமிது

செல்வச்சந்நிதியில் எத்தனையோ சித்தர்களும்
நல்லபல முனிவர்களும் யோகிகளும் - மிக

நீண்டகாலம் வாழ்ந்து முத்திபெற்றார் என்பதுவும் - பல
ஆண்டாண்டு காலத்து பழங்கதை இன்று - அன்று

பூவரசமரத்தடியில் முருகனுக்காய் காட்டப்படும் விளக்கினை
ஆலய வளவினிலே எங்கிருந்தும் பார்க்கலாமாம் - பின்னரும்

அதற்கமைய ஆலயம் கொஞ்சம் பெரிதாகக் கட்டியதும்
தமக்கொவ்வா சமயமென ஆலய அழிப்புக்களைச் செய்தவர்கள்

இதனையும் தான் விடவில்லை என்பதுவும் உண்மையாம்
ஆகமவிதிப்படி அமையவில்லை ஆனாலும் - அன்று

வழிபாடு நடந்தஇடம் எல்லாமே போத்துக்கேய ஒல்லாந்த
அழிப்புக்கு உரியதாய் இருந்தது என்பதற்கு

இதுவுமொரு பெரிய சான்று என்கிறது வரலாறு
அதனொடு முடியவில்லை சந்நிதியான் கொண்ட இடர்

பெருவிழாக் காலங்களில் திருவிழாப் பார்த்த
சிறுவர்கள் நாங்களே பார்த்ததுண்டு - இந்த

செல்வச் சந்நிதியான் குறுகிய காலத்தில்
எவ்வளவு இடர்பட்டார் என்பதனை .......

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --




# தமிழ்நாடு திருச்சிராப்பள்ளியில் "இனிய நந்தவனம்" மக்கள் மேம்பாட்டு மாத இதழின் 27 ஆம் ஆண்டு விழா

இந்தியா செய்திகள் India News


தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்து கடந்த 27 ஆண்டுகளாக வெளிவரும் இனிய நந்தவனம் மக்கள் மேம்பாட்டு மாத இதழின் 27 ஆம் ஆண்டி விழா ஜனவரி 7-ஆம் திகதி திருச்சிராப்பள்ளியில் சிறப்பாக நடைபெறுகிறது.

இவ்விழாவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்கிறார். விஜிபி ஹவுசிங் பிரவேட் லிமிடெட் நிறுவனங்களின் துணைத்தலைவர் இரா. தங்கையா தலைமையில் நடபெறும் விழாவில் இலங்கை தினகரன் - வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், இனிய நந்தவனம் கௌரவ ஆலேசர்கர் மேஜர் டோனர் டாக்டர் கே.சீனிவாசன், புதுக்கோட்டை தமிழ்ச் சங்கத் தலைவர் கவிஞர் தங்கம்மூர்த்தி துபாய் டெச்சீப் கம்பியூட்டர் டிரேடிங் நிர்வாக இயக்குநர் அப்தூல் வஜீத், மனநல மருத்துவர் ஹேமப்பிரியா ஜெயபால், திருச்சி பாட்சா பிரியாணி சென்டர் உரிமையாளர் முகம்மது அபுபக்கர் சித்திக் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இனிய நந்தவனம் மக்கள் மேம்பாட்டு மாத இதழின் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன். இணையாசிரியர் பா.தென்றல் ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

# கேரளம் தங்கள் மாநிலத்தில் ஓடும் பெரியாற்றின் நீரைத் தமிழகத்திற்கு வழங்குவதைக் கண்டு பொருமுகின்றது

## பழ நெடுமாறன் அவர்களின் குமுறல்



தற்போதுள்ள பெரியாறு அணை பலவீனமாக இருப்பதாகவும், எனவே, புதிய அணை ஒன்றினைக் கட்டுவதற்கு அனுமதிக்கவேண்டும் என மத்திய நீர் மேலாண்மை ஆணையத்திடம் அனுமதி கேட்டு புதிய வரைவுத் திட்டம் ஒன்றினை கேரள அரசு அளித்துள்ளது.

ஏற்கெனவே கேரளம் இத்தகைய பொய்யான புகாரை எழுப்பிய போது, மத்திய நீர் மேலாண்மை ஆணையம், உச்சநீதிமன்றம் ஆகியவை அமைத்த நிபுணர் குழுக்கள் பெரியாறு அணையைப் பார்வையிட்டு முழுவதுமாக நுணுகி ஆராய்ந்து, "அணை வலிமையாக உள்ளது" என அறிவித்துவிட்டன. ஆனாலும், கேரளத்தின் அச்சத்தினைப் போக்கும் வகையில் பெரியாறு அணையை மேலும் வலிமைப்படுத்தும்படி உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணைக்கிணங்க 12.5 கோடி ரூபாய் செலவில் தமிழக அரசு அணையை வலுப்படுத்தியது. உச்சநீதிமன்றம் பெரியாறு நீர்மட்டத்தினை 145 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும், மேலும், சில பணிகளைச் செய்து முடித்த பிறகு 152 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்தது.

பெரியாறு அணை வலிமையாக இருப்பதினால்தான் இத்தகைய ஆணையை உச்ச நீதிமன்றம் பிறப்பித்தது. ஆனால், மீண்டும் மீண்டும் அணை பலவனமாக இருப்பதாகப் பொய்யான கூக்குரல் எழுப்பி, புதிய அணை கட்டவேண்டும் எனக் கேரளம் இடைவிடாது முயற்சி செய்யும் வகையில் இப்போது புதிய வரைவுத் திட்டத்தை அளித்துள்ளது. உச்ச நீதிமன்றம் அளித்தத் தீர்ப்புக்கு இது முற்றிலும் எதிரானதாகும்.

தற்போதுள்ள அணை ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சென்னை மாகாண அரசினால் கட்டப்பட்டதாகும். இதன் கட்டுப்பாடு தற்போதைய தமிழக அரசிடம் உள்ளது. எனவே, புதிய அணை கட்டுவதின் மூலம் அந்த அணையைத் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்துக்கொள்ளக் கேரளம் திட்டமிடுகிறது. இந்திய அரசும், மத்திய நீர் மேலாண்மை ஆணையமும் கேரளத்தின் சூழ்ச்சிக்கு இரையாகக் கூடாது.

தமிழ்நாட்டில் உள்ள ஆனைமலையிலிருந்து பாலாறு, ஆழியாறு, உப்பாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் ஆகிய ஆறுகள் உற்பத்தியாகி மேற்கு நோக்கிப் பாய்ந்து கேரள மாநிலத்திற்குள் நுழைகின்றன. அமராவதி ஆறும் சிறிது தூரம் கேரள மாநிலத்திற்குள் ஓடி பின்னர் தமிழ்நாட்டிற்குள் நுழைகிறது. அந்தச் சிறிது தூரத்திற்குள் ஒரு அணையைக் கட்டி தமிழகத்திற்கு வரும் தண்ணீரைத் தடுக்கக் கேரளம் முயலுகிறது.

நீர்வளம் மிகுதியாக உள்ள மாநிலம் கேரளமாகும். இங்குள்ள ஆறுகளிலிருந்து 2500 டி.எம்.சி.க்கு மேலான நீர்வளம் கிடைக்கிறது. ஆனால், அம்மாநிலத்தில் பாசனம், குடிநீர் போன்றவைக்கு 500 டி.எம்.சி. மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. அதற்குமேல் பயன்படுத்த அங்கு நிலவளம் இல்லை. எனவே 2000 டி.எம்.சி.க்கு மேற்பட்ட நீர் கடலில் பாய்ந்து வீணாகிறது. வீணாகும் நீரில் 10இல் ஒரு பங்கான 200 டி.எம்.சி. நீரைத் தமிழகத்திற்குத் திருப்பிவிட்டால், தமிழ்நாட்டின் வறட்சிப் பகுதிகள் வளம் பெறும், உணவு தானிய உற்பத்திக் கூடும். தமிழ்நாட்டிலிருந்துதான் இப்போதும் கேரளத்திற்குத் தேவையான உணவு தானியங்கள், காய்கறி, பழங்கள், ஆடு, மாடு, கோழி, முட்டை போன்றவை அனுப்பப்படுகின்றன.

தமிழ்நாட்டு மண்ணில் அமைந்துள்ள நெய்வேலி நிலச்சுரங்கத்தில் தமிழ்த் தொழிலாளர்களால் வெட்டியெடுக்கப்படும் நிலக்கரியைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் 20% கேரளத்திற்கு வழங்கப்படுகிறது. "எங்கள் மண்ணில் கிடைக்கும் நிலக்கரியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் ஐந்தில் ஒரு பங்கினை கேரளத்திற்கு வழங்குவது அநீதியாகும்" என நாம் ஒருபோதும் பேசவில்லை. ஆனால், கேரளம் தங்கள் மாநிலத்தில் ஓடும் பெரியாற்றின் நீரைத் தமிழகத்திற்கு வழங்குவதைக் கண்டு பொருமுகின்றனர். அதை எப்படியாவது தடுத்து நிறுத்தவேண்டும் என இடைவிடாமல் முயற்சி செய்கின்றனர்.

தமிழ்நாட்டிலிருந்து கேரளத்திற்கு அனுப்பப்படும் உணவு தானியங்கள், காய்கறி, பழங்கள், ஆடு, மாடு, கோழி, முட்டை ஆகியவற்றை ஒருநாள் நிறுத்தினாலும்கூட பசியாலும், பட்டினியாலும் அம்மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாவார்கள். நெய்வேலி மின்சாரத்தை நாம் நிறுத்தினால் கேரளாவில் இயங்கும் தொழிற்சாலைகள் இயங்காது. ஆனால், யாவரையும் நமது கேளிர் எனக் கருதும் மனிதநேயம் குடிகொண்டிருப்பதால் அத்தகைய செயல்களை மனதாலும் நாம் சிந்தித்ததில்லை.

ஆனால், தமிழர்களின் இத்தகைய சிறந்த பண்பு குறித்து சிறிதும் எண்ணிப்பார்க்காமல், தமிழகத்தை வஞ்சிப்பதையே நோக்கமாகக் கொண்டு கேரள அரசியல் கட்சிகள் செயல்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

குறிப்பாக, கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியின் முன்னணி, காங்கிரசுக் கட்சியின் முன்னணி ஆகியவைதான் மாறிமாறி ஆட்சிக்கு வருகின்றன. பெரியாறு அணை நீரைத் தமிழகத்திற்கு அளிப்பதை இக்கட்சிகள் கடுமையாக எதிர்க்கின்றன. எனவே, தமிழ்நாட்டில் உள்ள இக்கட்சிகளின் தலைவர்கள் தங்களது அகில இந்தியத் தலைமைக்கு உண்மை நிலையை உணர்த்தி அவர்கள் மூலம் கேரள கட்சிகளைக் கண்டித்துத் திருத்துவதற்கு முன்வரவேண்டும். இல்லையேல் தேசிய ஒருமைப்பாடு என்பது கேலிக் கூத்தாகிவிடும் என எச்சரிக்கிறேன்.

இவ்வாறு தமிழ்நாட்டின் தமிழ்த் தலைவர்களில் ஒருவரான பழ நெடுமாறன் தனது உள்ளக் குமுறல்களை பகிர்ந்து கொண்டுள்ளார்.

# மீள் குடியேற்றத்தை விரைவுபடுத்த ரணில் முன்னெடுப்பு

**மீ**ள்குடியேற்ற செயற்பாடுகள் அடுத்த வருட ஆரம்பத்துக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திற்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முன்னெடுத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வரவேற்றார். இதனை தொடர்ந்து யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை தலைமையேற்று நடாத்தினார்.

இதன்போது படைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள ஆலய விடுவிப்புத் தொடர்பில் சாதமாக பதிலளிப்பதாக கடந் ஆண்டு பொங்களின்போது உறுதியளித்தபோதும. இன்றுவரை இடம்பெறவில்லையென வடக்குமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சுட்டிக் காட்டிய விடயம் தொடர்பில் அடுத்து வரும் பாதுகாப்பு கவுண்சில் கூட்டத்தில் கலந்தாலோசித்து தீர்வு காணுவதாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினைகள் நீண்டுச்செல்ல இடமளிக்க முடியாது என இன்று நடைபெற்ற விசேட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் போது ஜனாதிபதி தெரிவித்தார். அத்துடன் மீள்குடியேற்ற செயற்பாடுகளும் அடுத்த வருட ஆரம்பத்துக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி கூறினார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள், எதிர்கால திட்டங்கள், எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் இரண்டு மாவட்டங்களினதும் அரசாங்க அதிபர்கள் தெளிவுப்படுத்தினர். அத்துடன் வடக்கு மாகாணத்தின் நிலைமை குறித்து வட மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன விடயங்களை சமர்பித்தார்.

காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், மீனவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள், விவசாயிகளின் பிரச்சினைகள், தீவகங்களுக்கான போக்குவரத்து பிரச்சினை, வீதி சீரின்மை, இளையோருக்கான தொழில் பயிற்சியின்மை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இன்றைய விசேட கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், மாவட்ட இணைத்தலைவர்களான ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அமைச்சர் பந்துல குணவர்தன ஆகியோரும் அரச தரப்பில் பங்குகொண்டதோடு நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உலக செய்திகள்
World News

# அவுஸ்திரேலியா மெல்பேனில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு தமிழ்க் கல்வி பயிற்றுவிப்பதில் முன்னணி வகிக்கும் நரே – வொரென் தமிழ்ப் பாடசாலை




அவுஸ்திரேலியா மெல்பேனில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு தமிழ்க் கல்வி பயிற்றுவிப்பதில் முன்னணி வகிக்கும் நரே-வொரென் தமிழ்ப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவை ர்முடவ பாராளுமன்ற உறுப்பினர் கசாண்ட்ரா பெர்னாண்டோ (Hon. MP Cassandra Fernando) தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (17-12-23) கொண்டாடப்பட்டது.

ஒவ்வொரு வகுப்புகளிலும் பல பிரிவுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருதுகள் வழங்கியதுடன், விக்டோரியா மாநிலத்தால் நடாத்தப்படும் VCE தமிழ் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு உயர் விருதும், அதிக மதிப்பெண்ணைப் பெற்ற மாணவி ஸ்ருத்திகா உருத்திரகுமாருக்கு $500 பணப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

மேலும், பரிசளிப்பு விழாவின் இறுதியில், அவுஸ்திரேலியா மண்ணில் தமிழ் சமூகத்தின் கலை, கலாச்சார, சமய வளர்ச்சிக்கும், தமிழ் தேசியத்திற்கும், தமிழ்க்கல்வி, ஊடகத்துறையின் வளர்ச்சிக்கும், தாயக உதவித்திட்டங்களுக்கும் அயராது உழைத்த திரு. சாண்டி சந்திரசேகரம் அவர்களுக்கு நரே-வொரென் தமிழ்ப் பாடசாலை சமூகத்தினால் சாதனைத் தமிழன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இவ்விருதினை மாண்புமிகு ஹோல்ட் பாராளுமன்ற உறுப்பினர் கசாண்ட்ரா பெர்னாண்டோ (Hon. MP Cassandra Fernando) அவர்களினால், சாண்டி சந்திரசேகரம் அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

Parents Committee – Narre Warren Tamil School
secretary.pc@tamilschoolvtanc.org.au







# இலண்டனில் வித்தியாலக்சுமி வயலின்பயிற்சி நிலைய மாணவர்கள் வழங்கிய மார்கழி உற்சவம்







இலண்டனில் கடந்த 22 டிசம்பர் 2023 இல் வயலின் ஆசிரியை ஞீமதி கௌசல்யா சத்தியலிங்கம் அவர்களின் வித்தியாலக்சுமி வயலின்பயிற்சி நிலைய மாணவர்களால் வருடாந்த இசை ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வானது "அருடே-ணாதயமே" என்ற வர்ணத்துடனும் விநாயகர் கிருத்தியுடனும் இனிதே ஆரம்பித்தது. இதனைத் தொடர்ந்து வந்தே மீனாட்சி, ரம்ய நர்த்தனா, ஜதீஸ்வரம், வர்ணம், தில்லானா என மாணவர்களின் வாசிப்பால் மண்டபமே மகிழ்வில் திளைத்திருந்தது. நின்னுக்கோரி, பாதிமம் பார்வதி, காக்கைச் சிறகினிலே, ஒளி படைத்த கண்ணினை போன்ற பல பாடல்களை மாணவர்கள் அதி அற்புதமாக வாசித்து அவையோரின் பலத்த கரகோசத்தைப் பெற்றனர்.

இந் நிகழ்விற்கு பக்கவாத்திய இசைக் கலைஞர்களான சதீஸ் கௌண்தமால் மிருதங்கமும், தயாபரன் தனபாலன் கடமும், ஜெயகீர்த்தன் ஜெயதேவன் கஞ்சீராவும், சர்ஜுன் சிற்பரன் சுரத்தட்டு இசையையும், சேயோன் சிவலீலன் புல்லாங்குழல் இசையினையும் வழங்கி மேலும் மெருகேற்றியிருந்தனர்.

நிறைவாக பஞ்சரத்தினம் இடம் பெற்றது. இதில் ஞீமதி திலகசக்தி ஆராமுதனின் மாணவர்கள் வாய்ப்பாட்டினையும், ஜெசிக்கா நித்தியானந்தா வீணை இசையினையும் ஞீமதி கௌசல்யா சத்தியலிங்கத்தின் மாணவர்கள் வயலின் இசையி-னையும் இணைந்து வழங்கியிருந்தனர். அதுமட்டுமன்றி ஆசிரியர்களான திலகசத்தி ஆராமுதன், சிவதர்சிகாவும் வாய்ப்பாட்டில் இணைந்திருந்தனர். வித்தியால ஆசிரியை ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கத்தின் புதல்வன் சைந்தவன், புதல்வி லக்க்ஷிமியும் இணைந்து வயலின் இசையை வழங்கியிருந்தனர். மேடை நிறைந்த இசைக் கலைஞர் கண்ணுக்கும் காதுக்கும் இனிய விருந்தினை வழங்கி பஞ்சரத்தினத்தில் நனைய வைத்தனர்.

ஞீமதி கௌசல்யா சத்தியலிங்கம் அவர்களின் அன்பான இனிமையான கனிவு நிறைந்த பயிற்றுவிப்பை இந்நிகழ்வில் நன்கு உணரமுடிந்தது. வித்தியாலக்ஷ்மி என்ற பெயருக்கேற்றாற் போல வயலின் இசையில் மாணவர்கள் வித்தையைக் காட்டி அவையோரை அகங் குளிர வைத்தனர். வருடம்தோறும் நடைபெற்று வரும் மார்கழி உற்சவமானது வருடங்கள் ஏற ஏற மேலும் மேலும் மெருகேறி நல்லதொரு தரமான நிகழ்வாக மிளிர்ந்துகொண்டே செல்வதில் பள்ளியின் ஆசிரியைக்கு மட்டுமன்றி கணவர் சத்தியலிங்கத்திற்கும் பெரும் பங்கு உண்டு என்பதை அறியமுடிந்தது. வருட நிறைவில் நல்லொதொரு இசையால் மனம் நிறைந்து வித்தியாலக்ஷ்மி பள்ளி மேலும் மேன்மையுற இறைவனை வேண்டுகிறேன்.

**- அகல்யா நித்தியலிங்கம்**






# புதிய முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் தென்னை நார் சார்ந்த தொழில் வளர்ச்சிக்காக புதிய கொள்கை: முதல்வர் மு.க.ஸ்டாலின்

தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்களின் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், `தென்னை நார் கொள்கை'யை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் போட்டிகளை உணர்த்தும், தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்களின் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திடவும் தயாரிக்கப்பட்டுள்ள "தென்னை நார் கொள்கை 2024"யை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, துறையின் செயலர் அர்ச்சனா பட்நாயக், தொழில் ஆணையர் மற்றும்தொழில் வணிக இயக்குநர் இல.நிர்மல்ராஜ், தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவன முதன்மை செயல்அலுவலர் இரா. கண்ணன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். சிறப்பம்சங்கள்: இக்கொள்கை, தென்னை நார்தொழில் நிறுவனங்களின் தேவைகளை நிறைவேற்றுவது, அந்நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உறுதி செய்வது மற்றும் தொழிற் நிறுவன சங்கங்களின் கருத்துகளை கேட்டறிந்து அதன்படி நடவடிக்கை மேற்கொண்டு இத்துறையின் வளர்ச்சியில் முதலீடு செய்த




அனைத்து பங்குதாரர்களையும் பயன்பெறச் செய்வது ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். Expandஉலகத் தரத்திலான மதிப்பு கூட்டப்பட்ட தென்னை நார் பொருட்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க, தென்னைநார் துகள் மற்றும் தென்னை நார்மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களுக்கான அதிநவீன ஆய்வகம் நிறுவப்படும்.

தென்னை நார் தொழிலில் நிலையான, சுற்றுச்சூழல் நட்புடன் கூடிய மதிப்பு கூட்டப்பட்ட நடைமுறைகளை மேம்படுத்த இக்கொள்கை முன்னுரிமை அளிக்கும்.தென்னை நார் துகள் மற்றும் தென்னை நார் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களுக்காக பிரத்யேகசிறப்பு மையங்கள் உருவாக்கப்படும். இம்மையங்கள் புதிய மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளுக்கான ஆராய்ச்சி, விவசாயம், புத்தொழில்கள், தென்னை நார் சார்ந்த தொழில்களின் போட்டித்தன்மை ஆகியவற்றை மேம்படுத்தும்உள்நாடு மற்றும் சர்வதேச அளவில் சந்தையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் வகுக்கப்படும். தென்னை நார் பொருட்களின் பங்களிப்பின் வாயிலாக சந்தை விரிவாக்கத்தை இந்தக் கொள்கை நோக்கமாக கொண்டிருக்கும்.

**இந்திய செய்திகள்**

ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் புதிய தென்னை நார் சார்ந்த பொருட்களின் உற்பத்தியை விரைவாக மேம்படுத்த இக்கொள்கை வழிவகுக்கும்.ஒற்றைச் சாளர முறை மற்றும்தொழில் முதலீட்டாளர்களுக்கான உகந்த சூழ்நிலை ஆகியவற்றின் மூலம் தென்னை நார் சார்ந்த தொழிலில் புதிய முதலீடுகளை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டு, தேசிய மற்றும் சர்வதேச வர்த்தக அமைப்புகளுடன் கூட்டாண்மைக்கான அடித்தளத்தை இந்த கொள்கை அமைக்கிறது. கிராமப்புற பொருளாதார முன்னேற்றம், மகளிர் வேலைவாய்ப்பு, தென்னை விவசாயிகளுக்கான வருமானத்தை அதிகரித்தல், புதுமை, போட்டித்திறன் மற்றும் பொறுப்புடன் கூடிய நிலையான வளர்ச்சி மூலம் புதிய சகாப்தத்தை அடைய வழிகோலுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்த தேதி அறிவிப்பு: சாதிப் பெயரை சொல்லி காளைகளை அவிழ்க்க தடை



மதுரை அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்த தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.மதுரை அவனியாபுரத்தில் வரும் 15ம் தேதியும், பாலமேட்டில் 16ம் தேதியும், அலங்காநல்லூரில் 17ம் தேதியும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடைபெறும் என்று மதுரை மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.இது தொடர்பாக மதுரை மாவட்டஆட்சியர் சங்கீதா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஆண்டுதோறும் தைத்திங்களில் மதுரை மாவட்டத்தில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டும் அவனியாபுரத்தில் உள்ள திடலில் வரும் 15ம்தேதி ஜல்லிக்கட்டு நடைபெறுகிறது.

பாலமேடு பேரூராட்சிக்கு உட்பட்ட மஞ் சமலை ஆற்றுத் திடலில் வரும் 16ம் தேதி பாலமேடு ஜல்லிக்கட்டும், அலங்காநல்லூர் பேரூராட்சிக்கு உட்பட்ட கோட்டைமுனிவாசல் மந்தைத் திடலில் வரும் 17ம் தேதி அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டும் நடைபெற உள்ளன. ணிஜ்ஜீணீஸீமேலும், ஆண்டுதோறும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் பாரம்பரியமாக நடைபெறும் அந்தந்த இடங்களிலேயே, இந்த ஆண்டும் சிறப்பான முறையில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் மாவட்ட நிர்வாகம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகள் பதிவு குறித்து சம்பந்தப்பட்டதுறை மூலமாக விரைவில் அறிவிக்கப்படும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். நீதிமன்ற உத்தரவு: ஜல்லிக்கட்டில் காளைகளை அவிழ்த்துவிடும்போது, சாதிப்பெயரை சொல்லி காளைகளை அவிழ்த்துவிடக் கூடாது என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மதுரை மானகிரியைச் சேர்ந்த செல்வகுமார், உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:மதுரை மாவட்டத்தில் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன. ஜல்லிக்கட்டு போட்டியை சாதி மற்றும் மத ரீதியாக நடத்தக் கூடாது, காளை உரிமையாளர்களின் பெயர்களுடன் சாதிப் பெயரை தெரிவிக்கக் கூடாது என்று 2019ல் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.ஆனால், கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் சாதிப் பெயர்களுடன் காளைகள் அவிழ்க்கப்பட்டன. இது உயர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிரானது. எனவே, இந்த ஆண்டுஜல்லிக்கட்டில் காளை உரிமையாளர்களின் பெயர்களுடன் அவர்களின் சாதிப் பெயரை அறிவிக்கக் கூடாது என்றும், ஜல்லிக்கட்டில் பங்கேற்கும் அனைவரும் கட்டாயம் தீண்டாமை ஒழிப்புஉறுதிமொழியை ஏற்கவேண்டும் என்றும் உத்தரவிட வேண்டும்

இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.இந்த மனு நீதிபதிகள் டி.கிருஷ்ணகுமார், ஆர்.விஜயகுமார் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அரசு வழக்கறிஞர் வாதிடும்போது, "மனுதாரர் கோரிக்கை தொடர்பாக, உயர் நீதிமன்றத்தின் உத்தரவு பின்பற்றப்படும்" என்றார்.இதையடுத்து நீதிபதிகள், "சாதிபெயர்களைச் சொல்லி காளைகளை அவிழ்த்துவிடக்கூடாது. இதுதொடர்பான நீதிமன்ற உத்தரவைப் பின்பற்ற வேண்டும். ஜல்லிக்கட்டில் தீண்டாமை உறுதிமொழி எடுப்பது தொடர்பான மனுவைப் பரிசீலித்து, உரிய முடிவெடுக்க வேண்டும்" என உத்தரவிட்டனர்.

# பிரதமர் மோடி உடன் அமைச்சர் உதயநிதி சந்திப்பு: கேலோ இந்தியா விழாவில் பங்கேற்க அழைப்பு

டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்து பேசினார். கேலோ இந்தியா போட்டிகள் தமிழகத்தில் நடக்கவிருப்பதை அடுத்து, இதில் பிரதமருக்கு அழைப்பு விடுக்கும் வகையில் அமைச்சர் உதயநிதி இன்று நேரில் சந்தித்துள்ளார். கிரிக்கெட், ஹாக்கி தவிர மற்ற விளையாட்டுப் போட்டிகளில் திறமையானவர்களைக் கண்டறிந்து பயிற்சியளித்து, ஒலிம்பிக் உள்ளிட்ட போட்டிகளில் பதக்கங்களை வெல்லச் செய்யும் நோக்கில், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் கடந்த 2018ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்போட்டிகள் இந்த ஆண்டு தமிழகத்தில் நடைபெறுகிறது. சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சியில் ஜன.19 முதல் 31ம் தேதி வரை போட்டிகள் நடைபெறுகின்றன. இப்போட்டிகளில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்க உள்ளனர்.



இப்போட்டியின் நிறைவு விழாவை சென்னையில் மிகப் பிரம்மாண்டமாக நடத்த தமிழக விளையாட்டுத் துறை திட்டமிட்டு உள்ளது. இந்நிலையில், இந்த நிறைவு விழாவில் பங்கேற்கும்படி பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து நேரில் அழைப்பு விடுத்துள்ளார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

அமைச்சர்களையும் சந்திக்கிறார்: பிரதமரைச் சந்தித்து அழைப்பிதழை வழங்கிய நிலையில் தொடர்ந்து, மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூரையும் சந்தித்து உதயநிதி அழைப்பு விடுக்க இருக்கிறார். அதன்பின், மத்திய அமைச்சர்கள் சிலரையும் சந்தித்து தமிழக வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி தொடர்பாக பேசுவார் எனக் கூறப்படுகிறது.

முன்னதாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர் உதயநிதி, "கேலோ இந்தியா போட்டியின் நிறைவு விழாவில் பங்கேற்க வருமாறு பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுப்பதற்காக டெல்லி செல்கிறேன். பிரதமரைச் சந்திக்கும்போது தமிழக மழை வெள்ளப் பாதிப்புகளுக்கு நிவாரண நிதியை கூடுதலாக வழங்கும்படி வலியுறுத்துவேன்." என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# இவ்வார ராசிபலன்

## 01-01-2024 வெள்ளி தொடக்கம் 11-01-2024 வியாழன் வரையும்



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**மேஷம்:** திருப்திகள் பெருகும் வாரம். திறமைகள் வெளிப்படும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். ஆன்மீக பயணம் மேற்கொள்வீர்கள். வெற்றிச்செய்தி வரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. முதலீடுகள் உண்டாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளியின் நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். மனோபயம் அகலும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். புதிய முயற்சி பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். நட்டம் இல்லாத காலம். பட்டம் பதவி வந்து சேரும். வினைகள் அகலும். வெகுமானம் கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். அன்னதானம் நிதானத்தை அதிகப்படுத்தும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. பழைய கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,4,5,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q




**ரிஷபம்:** ஆளுமையான செயல்பாடுகள் அரங்கேறும் வாரம். பிரார்த்தனைகள் நிறைவேறும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். வளமான காலம். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். பணியில் கண்டிப்பு அவசியம். புதிய சிந்தனை உருவாகும். சுபச்செய்திகள் வரும். பயணம் அனுகூலம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். கணவன், மனைவி அன்யோன்யம் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். சுபச்செய்திகள் வரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மையுண்டு. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலை விலகும். தகுதிகள் மிகுதியாகும். சாதனைகள் ஏற்படும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. திடீர் திருப்பம் ஏற்படும். கண்நோய் வந்து போகும். பிரபல்ய ஆசை ஏற்படும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 6,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,N




**மிதுனம்:** வெற்றிக் கிட்டும் வாரம். அணிகலன்கள் சேரும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். வியாபார விருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோக உயர்வு கிட்டும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும் பொறுப்புக்கள் கூடும். விருப்பங்கள் நிறைவேறும். குடும்ப மன நிறைவு உண்டாகும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் லாபம் தரும். பெருமிதமான காலம். பழைய கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். வாய்ப்புக்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். இனிப்பானச் செய்தி வரும். போட்டிகள் மறையும். காதல் கை கூடும். விவாக முயற்சி வெற்றித் தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். உறவினர்களால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். பணிவான பேச்சுக்கள் தேவை. நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம்.

வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,2,4,9
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,F




**கடகம்:** சிக்கனத்தை கடைப்பிடிக்கும் வாரம். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு கூடும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். இடமாற்றம் ஏற்படும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வழக்கு சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். சோம்பல் அதிகரிக்கும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். ஆலோசனை பலன் தரும். தொல்லைகள் ஒழியும். பூமி லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கட்டிடத்தொழில் லாபம் தரும். கல்வியில் ஆர்வம் கூடும். வருமானம் வரும். குதூகலம் சேரும். வழிபாடு மாற்றம் தரும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். குதூகலம் சேரும். வெளியூர் பயணம் உண்டு. நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் தீரும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். பழையக்கடன் வசூலாகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளைவழிச் செலவு அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மனோதைரியம் அதிகரிக்கும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,Z




**சிம்மம்:** மேன்மைகளை சந்திக்கும் வாரம். மெத்தனப் போக்கு விலகும். பயணம் லாபம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கௌரவம் உயரும். விருந்தினர் வருகை உண்டு. கமிஷ் தொழில் லாபம் தரும். பணவரவு உண்டு. புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் பெருகும். குடும்ப அன்யோன்யம் கூடும். நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை அகலும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணங்கள் உருவாகும். தகுதிகள் உயரும். தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். புகழ்ச்சி அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். வாகன மாற்றம் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். வரவுகள் திருப்தி தரும். சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. தனவரவு உண்டு. தாராளமான வருமானம் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நிம்மதி பெருகும். எதிரிகள் பலம் குறையும். வழக்கு வெற்றி தரும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அதிதேவதை, அதிர்ஷ்ட எண்: 2,6,9,4
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**கன்னி:** உழைப்பிற்கான பலன் கிடைக்கும் வாரம். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். பெண்களுக்கு கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் லாபம் கூடும். துன்பங்கள் அகலும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். உன்னதமான காலம். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் மறையும். நாவடக்கம் தேவை. தாய் வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். வீண் வம்பு உருவாகும். விரயங்கள் அதிகமாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். அலைச்சல் அதிகரிக்கும். கலைத்தொழிலில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வினைத்தீர்க்கும் பிள்ளையார்
அதிர்ஷ்ட எண்: 7,9,5,4, அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,X




**துலாம்:** வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும் வாரம். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு அதிகரிக்கும். மாலைநேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். வாழ்த்துக்கள் கிடைக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. எதிர்கால எண்ணம் நிறைவேறும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். யோகமான காலம். முத்தாய்ப்பான வாய்ப்புக்கள் பெருகும். பணப்பற்றாக்குறை நீங்கும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வாய்ப்புக்கள் அதிகரிக்கும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். வராத கடன் வந்து சேரும். வெகுமதிகள் பெருகும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். வெற்றிகள் குவியும். சாதகமான வாய்ப்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 9,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,A




**விருச்சிகம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் கூடும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு கூடும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும் புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். வாழ்த்துக்கள் கிட்டும். குளிர்பான தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். பங்குத்தொழில் பணம் தரும். முற்போக்கு சிந்தனை வரும். சேமிப்பு அதிகமாகும். சீரான வாழ்வமையும். சிந்தனை மேலோங்கும். வினைகள் அகலும். ஆதாயம் பெருகும். வழக்குகளில் வெற்றி உண்டு. வாகன மாற்றம் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். காரியம் கைக்கூடும். குடும்ப மேன்மை உண்டாகும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். செல்வச்செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். குதூகலமான எண்ணம் உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ரபகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,6,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U

(தொடர்ச்சி 30 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1081

## ஆலடி விநாயகர் ஆலயம் திருகோணமலை

*" திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்*
*குாதலாற் கூப்புவர் தம் கை. "*

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற ஆன்றோர் மொழிக்கிணங்க, இக்கருத்தின் அடிப்படையில் வாழ்வது மானிட தர்மமாகும். ஆயினும் ஒவ்வொருவரும் தமது எண்ணம், வாழ்வுமுறை, சமுதாய அமைப்பு, பூகோள அமைப்பு, இவற்றிற்கிணங்க தமக்கேற்றமுறையில், அறிவுசார்ந்த சிந்தனையுடன் அந்தந்தச் சமுதாயத்தின் ஆன்றோர் காட்டிய வழியில் இறைவழிபாட்டை மேற்கொண்டு வருகின்றனர். இதன் அடிப்படையில் சமுதாய வளர்ச்சிப்பின்னணியோடு மெஞ்ஞான விஞ்ஞான நோக்கங்களைக் கருத்தில் கொண்டு மக்களை நெறிப்படுத்தும் நோக்கில், கோவில்களும் அங்கு எழுந்தருளும் திருவுருவங்களும் அமைக்கப்பட்டு வழிபாடியற்றப்படுகின்றது.

இவ்வாறான கோவில்கள் மக்களின் அன்றாட வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றன. தற்கால சூழ்நிலையில் நாடுகளிலும், இனங்களிலும், சமூகங்களிலும் நிகழும் நிகழ்வுகள் ஆழ்மனதில் பலமான தாக்கத்தை ஏற்படுத்தி மன அமைதியையும், தேக ஆரோக்கியத்தையும் அழிப்பதாகக் காணப்படுகின்றது. ஒவ்வொருவரையும் சுற்றி நிகழும் எதிர்மறையான சம்பவங்கள் எதிர்காலத்தைப்பற்றிய எண்ணங்களைப் பெரிதும் பாதிக்கின்றன. இவ்வாறான பாதிப்புக்களை நீக்கி மன அமைதியைக் கொடுக்க வல்லவையாகக் கோவில்கள் விளங்குகின்றன.

திருக்கோவில்களின் அமைப்பை நோக்கின், எங்கும்நிறைந்த எல்லாம்வல்ல பரம்பொருளின் இறைஅருளை, இந்தப் பிரபஞ்சத்திலிருந்து ஈர்த்தும், சேகரித்தும் அதனை கோவிலுக்கு வரும் பக்தர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் பெருவல்லமை படைத்தவையாக உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கேற்றவகையிலேயே பல சூட்சுமமான நெறிகளையும், சாத்திரவிதிகளையும் கடைப்பிடித்து கோவில்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. இவ்வாறான கோவில்களுக்குச் சென்று வரும்பொழுது ஆழ்மனதில் புதைந்து கிடக்கும் எதிர்மறையான எண்ணங்கள் ஆழ்மனதில் வேரூன்றாது தடுக்கப்படுகின்றது. இக்காரணத்தினாலேயே ஆன்றோர்கள் "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயம்தொழுவது சாலவும் நன்று" என்ற மூதுரைகளை மக்களுக்கு அறிவித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறான நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு ஒருவனாகிய இறைவனுக்குப் பல்வேறு வடிவங்களைக்கொடுத்து அமைக்கப்பட்ட திருக்கோவில்கள் உலகமெங்கும் காணப்படுகின்றன. ஈழத்திலும் ஆயிரக்கணக்கான கோவில்கள் அமைந்து அருள்பாலித்து வருகின்றன. இவ்வாறான கோவில்களுள் சாதி, மதபேதமின்றி அனைவரும் தொட்டு வணங்கும் திருவடிவமாக விநாயகர் வடிவம் காணப்படுகின்றது.

அரசமரத்தடியிலும், குளத்தங்கரையிலும், வயல்வெளிகளின் மத்தியிலும் சிறு குடிசைகளிலும் எழுந்தருளச் செய்து வழிபடும் வணக்கமாக விநாயக வணக்கமுறை காணப்படுகின்றது. இவ்வாறு இலகுவாக வழிபடும்முறையில் அமைந்த தெய்வமாக விநாயகர் காணப்படுவதோடு, முதல் வணக்கத்தினை விநாயகருக்கு அளித்தே ஏனையதெய்வங்களை வழிபடும் வணக்கமும் தொன்றுதொட்டு மரபாக விளங்குகின்றது. எக்காரியத்தைத் தொடங்கினும் அவை விக்னமின்றி நிறைவேற விநாயகரை வழிபட்டே ஆரம்பிக்கவேண்டும் என்ற மரபும் தமிழர்களுடைய சம்பிரதாயங்களிலே காணப்படுகின்றது. அறிவின் மூலமாக ஓம் என்ற பிரணவத்தின் வடிவமாக பிள்ளையார் விளங்குவதும் ஆழ்ந்த கருத்தையும் அறிவின் முதிர்ச்சியையும் காட்டுவதாக அமைகின்றது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலைப் பிரதேசத்தின் மத்தியில் மக்கள் குடியிருப்பு நிறைந்து காணப்படுகின்ற பகுதியில் அமைந்திருக்கும் ஆலடி விநாயகர் ஆலயம், மக்களால் பெரிதும் போற்றப்படும் ஆலயமாகக் காணப்படுகின்றது. இந்த ஆலயம் திருகோணமலையில் பிரசித்திபெற்ற சக்திதலமாக விளங்குகின்ற பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு அருகே அதன் ஈசானதிக்கில் அமைந்திருப்பது, இவ்வாலயத்தின் தனிச்சிறப்பாகக் காணப்படுகின்றது. ஆலடி விநாயகர் ஆலயத்தின் ஈசான திக்கில் பஞ்சஈஸ்வரங்களுள் ஒன்றாக விளங்கும் சரித்திரப்பிரசித்திபெற்ற திருக்கோணேசர் ஆலயம் காட்சியளிக்கின்றது. ஆலடிவிநாயகர் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அங்கிருந்தபடியே திரும்பிநின்று கோணேசப்பெருமானை வணங்கி வழிபாடு செய்வது வழமையான நிகழ்வாகக் காணப்படுகின்றது.

திருகோணமலை ஆலடி விநாயகர் ஆலயத்தின் ஆரம்பம் சுமார் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகக் கருதமுடியும். ஆலயத்தின் வடக்குத்திசையில் ஏறக்குறைய 200 யார் தூரத்தில் ஐயனார்கேணி என்றபகுதி காணப்படுகின்றது. வெறும்நிலப்பரப்பாகக் காணப்பட்ட இப்பகுதி பின்னாளில் மக்கள் குடியிருப்புப் பிரதேசமாக மாறிவிட்டது. இதன்பின்னர் இங்கு அமைந்துள்ள வீதியை ஐயனார்கேணிவீதி என அழைக்கும் வழக்கம் காணப்படுகின்றது. முற்காலத்தில் ஐயனார்கேணிப்பகுதி, வியாபாரம், மற்றும் யாத்திரை செய்வோர் தங்கிச் செல்லும் முக்கிய இடமாகக் காணப்பட்டுள்ளது.

**- வளரும்**



# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** ஆடம்பர பொருள் சேரும் வாரம். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். காரியம் கைகூடும். செல்வச்செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். சாதகமான காலமாக அமையம். மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். குடும்ப கௌரவம் உயரும். வரவு திருப்தி தரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். காரியம் கைகூடும். ஆனந்தம் குடிக்கொள்ளும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோக உயர்வு கிட்டும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும். விருப்பங்கள் நிறைவேறும். பொறுப்புக்கள் கூடும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. வணிகத்தொழில் விரிவடையும். பயணம் தடைப்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் பலன் தரும். பழையக்கடன் ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 8,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,N




**மகரம்:** லாபம் அதிகரிக்கும் வாரம். சுபச்செய்தி வரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். பிரச்சனைகள் தீரும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. கௌரவமான காலம். பறவைகளுக்கு உணவு தானம் அளித்தால் பணவரவு பெருகும். முயற்சிகள் பலன் கொடுக்கும். கால்நடைகளால் லாபம் உண்டு. கண்நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. முயற்சிகள் வெற்றி தரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். சாதனைகள் ஓங்கும். சிறப்புக்கள் வந்து சேரும். தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீகச்சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். உடல்நலம் கவனம் தேவை. எண்ணம் வண்ணமயமாகும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். கனிவான காலம். பயணம் அனுகூலம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் போட்டி அதிகமாகும். மனைவியின் அன்யோன்யம் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். பெற்றோரின் ஆதரவு அதிகரிக்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 9,1,5,3
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,I




**கும்பம்:** தன வரவுகள் அதிகரிக்கும் வாரம். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குடும்ப உறவு பலப்படும். உள்ளத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். தந்திரமாக செயல்படுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். சச்சரவுகள் அகலும். கடன் தொல்லை நீங்கும். தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். மன சந்தோஷம் கூடும். ஊக்கம் அதிகரிக்கும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பொன்னான காலமாக அமையும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். கல்வி ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 1,3,5,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,A




**மீனம்:** காரிய வெற்றி தரும் வாரம். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். இடமாற்றம் உண்டு. வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். மதிநுட்பம் தேவை. திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். ஆரோக்கியம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். இடமாற்றம் ஏற்படும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் அக்கறை தேவை. வழக்குகள் சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். பாக்கிகள் வசூலாகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடு தவிர்க்கவும். சுபச்செலவு அதிகரிக்கும். திடீர் மாற்றம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணம் அனுகூலம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் கடுமையாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். நிர்வாக அலைச்சல் கூடும். சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 4,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H

# ஒற்றுமையே எங்கள் பலம் எனும் கோற்பாட்டில் 6ம் ஆண்டாக நடைபெறும் "தமிழ் மரபுத்திங்கள் 2024"

**காலம்:** 21 ஜனவரி 2024 -- **நேரம்:** காலை 10:00
**இடம்:** சத்தோ ரோயல் மண்டபம் - லவால்
Quebec Tamil Heritage Montreal
3500 Boulevard du Souvenir, Laval, QC H7V 1X2
Le Château Royal, Laval
January 21st 2024 at 10 AM
(514) 360-8511

UNITY IS OUR STRENGTH / L'UNITÉ EST NOTRE FORCE

1. Quebec Tamil Community Center
2. Kalviyankadu makkal sangam
3. Bharathi Tamil Association
4. Thamilagam Quebec - Montreal
5. Montreal Tamil Health Initiative - MTHI
6. Old Students Association Of Pungudutivu
7. Quebec Tamil Association
8. Tamil Elders Association Quebec
9 . Trinco Association of Montreal
10. Eelam Challengers Sports Club
11. New Star Club
12. West Island Tamil Community
13. Montreal Decarie Strangers
14. Golden Karate-Do Organization Bsc Canada
15. Tamil Association of McGill (TAMill)
16. Montreal Staff Soccer Club
17. Atmajothi Tamil Association
18. Thoppu Makkal Sangam - Montreal
19. Vaanavil Sports Club
20. Tamil Elders Association Of Quebec (West Island)
21. Valvetty Sangam
22. Vezina Sports Club
23. Young Royal Sports Club
24. Vannivalam -NOVA
25. Ezham Kings s.c
26. Durgai Amman Kovil
27. Sauve Tamil community
28. Sherbrooke cricket club-SCC
29. Vigneswara Kalaivani Nadaka Mandram
30. Victoria Sports Club
31. Canadian Star sports Club
32. BTS Sports Club
33. West Island Tamil badminton Club
34. Concordia University Tamil Mantram
35. Union Tamil des Étudiants de l'Université de Montréal
36. Eye Tamil
37. IBC Tamil
38. Lankasri
39. Veerakesari
40. Tamil one
41. VTV
42. Tamil-bee
43. Irusu News
44. Uthayan News Canada
45. Pakalavan Tv - Jaffna
46. Roopam Media
47. G Digital
48. Mojo Film
49. Iya 4 u
50. Dream Artz
51. N3 Vision
52. Sorn Audio
53. Nehru Digital
54. Kishanth Studio



# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL | COMMERCIAL | INDUSTRIAL | VACANT LAND | CONSTRUCTION

*In this New Year, may your mortgage plans align perfectly, leading you to the doorstep of your dream home.*




| 1st & 2nd Mortgages | Purchase | Refinance
| Renewal | Switches | Equity Line of Credit
| Pre-approvals | Self-employed | Multi-rental properties
| New immigrants

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE RightBroker = RightMortgage Brokerage #10330 / Licence # M15001465
Scotiabank | TD Canada Trust | NATIONAL BANK | FIRST NATIONAL FINANCIAL LP
MCAP | HOME TRUST | EQUITABLE BANK | RFA | radius financial | RMG mortgages

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca








# UTHAYAN உதயன்

26 years of publishing

www.uthayannews.ca

உதயம் 1448 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday January 5, 2024

## கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கான அப்பியாசக்கொப்பிகள் மற்றும் எழுதும் கருவிகள் கையளிக்கும் வைபவம்



கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கான அப்பியாசக்கொப்பிகள் மற்றும் எழுதும் கருவிகள் கையளிக்கும் வைபவத்தில் நேரடியாகக் கலந்துகொள்ளும் வாய்ப்புக் 'ரொறன்ரோ மனித நேயக்குரல்' அமைப்பின் தலைவர் லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு கிட்டியது.
22-12-2023 அன்று சனிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வு சாத்தியமாகியமைக்கு காரணமாக அமைந்தவர்கள் மூவர். தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் வட மாகாண அமைச்சருமான பொ.ஐங்கரநேசன். கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலய அதிபர் திரு. க. நரேந்திரன் மற்றும் கொக்குத்தொடுவாய் பிரதேச விவசாய போதனாசிரியர் துளசிராம் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். இந்த மூவரின் மனித நேயப்பண்பை நாம் மெச்சுகின்றோம்.ஞ
அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த காரணமாக அமைந்தவர்கள் கனடாவில் இயங்கிவரும் "ரொறன்ரோ மனித நேயக்குரல்" அமைப்பிற்கு தங்கள் அன்பளிப்புக்களை வழங்கிவரும் "சக்தி" ஞானம்மா திருநாவுக்கரவு அவர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களான கணேசன் சுகுமார், சங்கர் நல்லதம்பி- சாந்தா பஞ்சலிங்கம்- நிமால் விநாயகமூர்த்தி- பாஸ்டர் சோதி- ரஜீவ் செபராசா- குலா சின்னத்துரை உட்பட பல அன்பர்களுக்கு "ரொறன்ரோ மனித நேயக்குரல்" அமைப்பின்" தலைவர் என்ற வகையில் திரு ஆர். என் லோகேந்திரலிங்கம் இந்த வைபவத்தில் நன்றி தெரிவித்தார்.

## "கனடிய தமிழர் பேரவையின் மக்கள் விரோத நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும்"

### காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாய்மார்கள் கனேடிய பிரதமருக்கு கடிதம்




காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும், தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறவும் எமது தொடர் போராட்டம்2,507 நாளாகும். வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக, ஏ-9 வீதியில் உள்ள இந்த பந்தலில் எமது பயணம் தொடர்கிறது.
இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் போது குழந்தைகளை இழந்த பெண்களின் குழுவான காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளின் தாய்மார்கள், தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையை அங்கீகரித்ததற்கும், பாலஸ்தீனப் பிரச்சினைக்கு அவர் வழங்கிய ஆதரவிற்கும் நன்றி தெரிவித்து, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு கடிதம் எழுதியுள்ளோம்.
(உள்ளே செய்தி 13ம் பக்கத்தில்)

## கொக்கட்டிசோலை கிஸ்ணமூர்த்தி ரூபதர்சன் என்னும் குடும்பஸ்தர் முதலை தாக்கி ஒரு கையை இழந்ததனால் வாழ்வாதாரம் கருதி 3 ஆடுகள் வழங்கப்பெற்றன



இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிசோலை 9ம் வட்டாரத்தைச் சேர்த கிஸ்ணமூர்த்தி ரூபதர்சன் என்னும் குடும்பஸ்தர் மீன்பிடித் தொழிலுக்காக ஆற்றுக்கு சென்றபோது முதலை ஒன்றால் தாக்கப்பட்டு அவர் ஒரு கையை இழக்கவேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தக் குடும்பத்தின் வாழ்வாதாரம் முற்றிலும் பதிக்கப்பட்டுள்ளது இதனை கருத்தில் கொண்டு அவர்களது வாழ்வாதாரத்தை மேன்படுத்தும் நோக்கில் கனடாவில் வசித்துவருபவரும் உதவும் பொற்கரம் அமைப்பின் ஸ்தாபகருமான சமூக சேவையாளர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கனடாவில் "உதயன்" பத்திரிகையின் அதிபரும் பிரதம ஆசிரியருமான லோகேந்திரலிங்கம் அவர்களின் நிதி அன்பளிப்பில் 3 ஆடுகள் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு வழங்கப்பெற்றது.
வழங்கப்பெற்றன.
(உள்ளே செய்தி 13ம் பக்கத்தில்)

## நொச்சி வைத்தியசாலைக்கு மொன்றியால் நகர புறுட்ஸ் கபி தமிழர் நிறுவனம் கண் பரிசோதனை இயந்திரத்தை கையளித்தது



அண்மையில் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை யில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் மேற்படி கிளிநொச்சி வைத்தியசாலைக்கு, 2.5மில்லியன் ரூபா பெறுமதியிலான கண் பரிசோதனை இயந்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளரால், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களிடத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய, கனடா மொன்றியால் நகரத்தில் நீண்டகாலமாக இயங்கும் புறுட்ஸ் கபி தமிழர் நிறுவன உரிமையாளரான சின்னத்துரை சண்முகலிங்கம் அவர்களின் 2.5மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில் கொள்வனவு செய்யப்பட்ட, ஜப்பான் தொழிநுட்பத்துடன் கூடிய இப்பரிசோதனை இயந்திரம் வைத்தியசாலை கண்சிகிச்சைப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
இந்நிகழ்வில், வைத்தியசாலை நிருவாகத்தினரால் தெரிவுசெய்யப்பட்ட 100 பயனாளிகளுள் முதற்கட்டமாக 39 பேருக்கான இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கிவைக்கப்பட்டன. (உள்ளே செய்தி 9ம் பக்கத்தில்)

## International Tamil Teachers' Conference in Toronto - June 2024

## ரொறன்ரோ பல்கலைக்கழக ஸ்காபுறோ வளாகத்தில் யூன் மாதம் நடைபெறவுள்ள அனைத்துலக தமிழாசிரியர்கள் மாநாடு

அனைத்துலக தமிழாசிரியர்கள் மாநாடு கனடாவின் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் 2024 யூன் மாதம் 1ம், 2ம், 3ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.
அதையொட்டி இடம்பெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பு கனடா தமிழ்ச் சங்க தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது இந்த. சந்திப்பை தலைமை தாங்கி நடத்தியவர் கனடா தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு சுப்பிரமணியம் இராசரத்தினம்.
3 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள இந்த அனைத்துலக தமிழாசிரியர் மாநாட்டில் உலகெங்கும் பல நாடுகளில் உள்ள தமிழாசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றார்கள்.
(விளம்பரம் உள்ளே 17ம் பக்கத்தில்)

